The "NAVEENA BHARATI" Reg. No. M. 2645.

01

பிரமோதூத மார்கழி—தை

ஜனவரி—1931.

OFFICE OF THE REGIST... No. 13 FEB 1931

# நவீன பாரதி




மாலை 3. மணி 1.

ஓர் தேசிய

## மாதப் பத்திரிகை

இனிமையும் அழகும் கருத்தும்
விஷயமும் பொதிந்தது.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

5L
ைஜ11, N29BH
N31·3·1
150533

13 FEB 1931

II

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C., போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷிமிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

19. ,, ஆ. ஆத. இராமனுதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O., தேவகோட்டை.


20. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.

21. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

நவீன



படங்களுடன் வெளிவந் துலவும் தேசீய மாஸிகை

# பொருள் அடக்கம்.

மாலை 3. 1931 ஜனவரிமீ மணி 1.


| தொடர் எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவியின் வணக்கம் ... ... ... | ... 1 |
| 2. | பிரார்த்தனை ... ... ... ... | ... ,, |
| 3. | 'பாரதி'யின் மூன்றும் ஆண்டு—ஆசிரியர், 'நவீன பாரதி' | ... 2 |
| 4. | 'பாரதி' போஷகர்கள்— ,, ,, | ... 6 |
| 5. | சந்தா நேயர்களுக்கு— ,, ,, | ... 8 |
| 6. | 'பாரதி'யின் அபிமானிகள்— ,, ,, | ... 9 |
| 7. | சர். சந்திர சேகர வேங்கட ராமன்— திரு K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) | ... 10 |
| 8. | பாரதியின் கவிதா சக்தி —திரு R. வாசுதேவ சர்மா அவர்கள், M. A., B. L., | ... 24 |
| 9. | பிலிப்பைன் மக்களின் உரிமைப் பேறு— திரு. வி. எ. பெருமாள் அவர்கள் | ... 30 |
| 10. | சென்னை பென்சில் பாக்டரி—திரு. என். வேங்கடரமணன் அவர்கள் | ... 40 |
| 11. | இந்தியரின் முன்னேற்றம்—திரு. A. நடேச பிள்ளை அவர்கள் | ... 47 |
| 12. | சமரச வளர்ச்சி—திரு. கு. ஆறுமுகம் அவர்கள் | ... 59 |
| 13. | பிரெடெரிக் நிஷேயனின் நீதிமொழிகள்— திரு. A. சுருளியாண்டி அவர்கள் | ... 65 |
| 14. | பத்திரிகை உலகம் ... ... ... 1. மேல் நாடுகளும் கிறிஸ்து மதமும், 2. பூமிசாஸ்திரக் கல்வி, 3. அமெரிக்க மாணவர்கள், 4. விவசாயப் பெருக்கமும் வியாபாரக் குறைவும், 5. அமெரிக்காவில் தாய்மார்கள் மரணம், 6. இங்கிலாந்தின் கடேசி அதிர்ஷ்டம், 7. ஷாங்கே நகரிலில் ருஷிய மக்கள், 8. இந்தியப் பெண்களின் விவாக ரத்து. | ... 68 |



சர் சந்திரசேகர வேங்கடராமன்

(Kt., M. A., D. Sc., (Hons) Ph., LLD., F. R. S.)

நவீன

# பாரதி

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென் வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம் என்று வணங்கேனோ?"—பாரதி.

ஆசிரியர் : ரா. சுப்ரமண்யம்

உத்தமபாளையம்.

opy Right] [Registered.

மாலை 3 | பிரமோதூத மார்கழி–தை 1931-௵ ஜனவரி௴ | மணி 1

## தேவியின் வணக்கம்

இதந்தரு மனையி னீங்கி இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப் பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல் விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கி லேனே.


## பிரார்த்தனை

சிறந்து நின்ற சிந்தை யோடு தேய நூறு வென்றிவள்
மறந் தவிர்த்தந் நாடர் வந்து வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீர மிக்க ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந் தவிர்க்கி லாது நிற்கும் அன்னை வெற்றி கொள்கவே!

—பாரதி.

# “பாரதி”யின் மூன்றாம் ஆண்டு.

ரா. சுப்ரமண்யம், ஆசிரியர், “நவீன பாரதி.”




ரதி”யின் இரண்டாம் ஆண்டு முற்றுப் பெற்றது. மூன்றாம் ஆண்டு துவக்கம் பெற்றிருக்கிறது. முன்னையதற்கு எமது ஆசியும், பின்னையதற்கு எமது நல் வரவு கூறுதலும் உரிமை சேர்வதாக.

“பாரதி” உதய மெய்தித், தேசீயத் தொண்டுகொண்டு, சேவை புரிந்த மறு ஆண்டிலேயே அதாவது அதன் இரண்டாம் வயதிலேயே அது கண்ட நிகழ்ச்சிகள் பற்பல வாகும். அதற்கு முன்னர் எத்துணையோ ஆயிர மாயிரம் ஆண்டுகள் வந்து போயிருப்பினும், அவைகளிலே “பாரதி”யின் 2-ம் ஆண்டை, இந்தியாவின் புதிய சகாப்த ஆரம்ப வருடமாகக் கோடலால் வரும் மிகைபாடு யாதும் மில்லை யென்றே கூறல் வேண்டும். ஞானோதய இந்தியாவின் பூர்வாங்கமான பெரிய சரித்திரம் அத்தியாயமாகவோ அதிகாரங்களாகவோ பத்தி பத்தியாய் வரையப்படுங்கால், இவ் வாண்டும் ஓர் அத்தியாயமாகவே அதில் அமைதல் பெறும் என்பதே யெம்மனோர் தேற்றம். இவ் வருடம், இந்தியாவின் கெதி மோட்சத்தை அள்ளி வழங்கிவிடா விடினும், அதற் கமைந்த வழிகளை யெல்லாம் திறந்துவிட்டு வழிகாட்டி அடிகோலிச் சென்றிருக்கிற தென்னலாம். ஆகவே இந்த 1930-ம் ஆண்டினை யிந்தியாவின் விமோசன ஆண்டென்று சொல்வதற் கிடமில்லாம லில்லை.

அன்பர்கள் பலர் இவ் வருடத்தினைப் பல பல விதமாகக் கூறுவர். சிலர் கலகமும் புரட்சியுமான கால மென்பர். வேறு சிலர் விடுதலைக் கால் கோள் நாளென்பர். மற்றும் சிலர் கொடுமையும் அயாமுமலிந்த ஆண்டு என்பர். இன்னும் சிலர் சீர்திருத்த நாகரீக கால மென்பர். இவ்வாறு இகழ்தலும் புகழ்தலும் செய்வதற் கேதுவாகிய


198533




இவ் வாண்டினைப் பற்றி நாம் என்ன உரைப்பது? எவரெவர் கூற்று எப்படி யெப்படி யிருப்பினும், நியாயந் நியாயம் என்ற இரண்டின் உண்மைகளையும் உள்ளதை யுள்ள வண்ணம் உலகம் உணருமாறு செய்வித்த வருட மென்பதை மட்டும் அன்பர்கள் கருத்திருத்தல் வேண்டும்.

மெய்மையைத் தேய்க்காது பொய்மையை மாய்க்க வந்த வருடத்தினையா குறை கூறுவது! உயர்ந்தோரைத் தாழ்த்தாது தாழ்ந்தோரை உயர்த்த வந்த ஆண்டினையா இகழ்வது? அமைச்சர்களை அகற்றாது அமைப்புகளை மாற்ற வந்த காலத்தையா எள்ளுவது? இந்தியாவை இகழாது இந்திய மக்களை யெள்ளி நகையாடிய ஏனைத் தேசங்களும், அவ்வத் தேயத்து வல்லாசுகளும் கண்டு பிரமிக்கும்படி, இந்திய மக்களிடையே புத்துணர்வும் புத்துயிரும் ஊட்டிப் புத்தம் புது வாழ்வுக்கு அடிகோலி எத்தனையோ விதங்களில் இன்று வரைச் சுமார் எழுபதினாயிரவரைத் தவங்கிடக்கப் பண்ணிய இவ் வருடத்திற் கிணையாய் எவ் வருடத்தினை யுன்னுவது?

“பாரதி”யின் தவழ் நடை பயிலும் பருவமாகிய இரண்டாம் பிராயத்திலே நிகழ்ந்த வினைகள் பல வுளவேனும், அவைகளில் தலைமையாயது காந்தியடிகள் கண்ட அறப்போர் முறையே யாகும். காந்தி யடிகள் தொடுத்த அறத் தொண்டு, இந்தியாவைப் பொறுத்த அளவிலன்றி, உலகையே ஒரு முகமாகத் தன்னகப் படுத்தி யிருத்தல் கண்கூடு.

அடிகளின் போர்த் திறத்தைப் பற்பல உரைகளால் அளந்துரைக்க வேண்டியதில்லை. அது கருவி யொன்று மில்லாப் போர் என்ற அளவில் எவர்தான் அதிசயமுறார். மன் பதைகளைக் கொல்லாத அறப்போர் என்றால் யாரே வியப்புறார். இரத்தம் ஓடாத அன்புப் போர் எனில் எவர் மனந்தான் இளகாது? இதனைச் சாத்வீகப் போர் என்றபோதே சரித்திரத்திலேயே யிஃது புதியதல்லவா? இஃது தொடுக்கப்படுங்கால் இத்துணைச் சிறப்பாக இத்துணைக் காலமாக இவ்வுளவு வேகத்துடன் நடைபெறு மென்று எவரும் எண்ணியிரார். இப் பெரும் புனித வினையைத் துவக்கிய அவ்வினை முதல் வராம் காந்தியடிகளாற்கூட இவ்வளவில் எதிர்பார்க்கப் பட்டதல்ல.

அடிகள் அரசை அப்புறப்படுத்த முயல்கிறார் எனவே மக்களில் பெரும் பாலாரது தவறான அபிப்பிராயமும் பேச்சுமாகும். ஆனால் அவரது உண்மைக் கருத்தும் செயலும் அவ்வாறன்று. அரசியலைத் தான் புதுப்பிக்க விரும்புகிறாரே யன்றி வேறன்று. இதற்காக அவர் என் செய்தார் என்பததான் ஒரு சிறிய வியப்பிற் கிடமானது. அவர் டாண்டி யென்னும் புனித அளத்தகத்தே சென்று முதல் முதல் ஒரு பிடி உப்பைத்தான் வாரினார். அக் கருத்தென்னை? மேல் நிலையில் நோக்குவார்க்கு கேவலம் உப்பை வாரியதாகவே புலனாகும். ஆனால் அவர் உப்பையா வாரினார்? அன்று; அன்று. பின் என்னை? உரிமையை யன்றோ!

இக் கருத்தை யுணர்ந்து அடிகளின் அறவுரைக்குச் செவிசாய்த்த இந்திய மக்களிலே, இந்து முஸ்லீம் கிறிஸ்துவச் சகோதரர்கள் முதல் எம் மதச் சாராரும் பின் பற்றினர். வரிசை வரிசையாய்ச் சென்று சாத்வீக சாகரத்தில் படிந்து கரையேறி நின்று, பாரமாத்மீக அஹிம்ஸா நிலையை அநேகமாய்த் தழுவித், தேசியக் கடன்—பாரத மாதாவின் அரும் பணி—அன்னை பாரத தேவியின் விமோசன வேலைகள்—தேவி மாநிலத் தாயின் விடுதலைப் போர் எங்கும் நடை பெற்றது. இதிலே ஹிந்து மக்களே யன்றி முஸ்லீம் மக்களும், ஹிந்து சகோதரிகளோடு முஸ்லீம் சகோதரிகளும் பிறரும் மிகத் தாராளமாகக் கலந்து கொண்டனர். வேலைகள் எங்கும் தீவிரமாய் நிறைவேறிக் காட்டுத் தீப்போற்கனன்று புகைந்து எரிந்து பொங்கிப் பரந்தன பரக்கின்றன.

அரசியலார் அது கண்டு உறுத்துச் சீற்றமுற்றுப் பொங்கி அடக்கு முறையால் அடக்கிவிட எண்ணி, அடக்கு முறைச் சட்டங்களெனப் பல சட்டங்கள் அவசரமாய் வனைந்து, அவற்றிற்கு அவசரச் சட்டங்களெனப் பெயர் புனைந்து அவ் வவசரச் சட்ட அஸ்திரப் பிரயோகத்தினை அள்ளி அள்ளி யிறைத்தனர்; இறைக்கின்றனர். அதன் பயனாய் ஆண்களோடு பெண்களும், பெரியாரோடு சிறியாரும், செல்வரோடு எளியாரும், கற்றாருடன் மற்றாரும், கைப்பிடி நாயகர் சகிதம் கட்டிளங் கன்னியர்களுமாய் அச் சட்டமாம் பாசத்தாற் கதுவப்பட்டுச் சிறைக்குச் செல்கின்றனர்.

இத் தேச வேலையில் தலைமை வாய்ந்து நின்ற அடிகளார் முதல் பின் தலைவர்கள் பலர் வரை இப்போது யாண்டுளோர்கள்? தேச உரி



மைப் போராட்டத்திற்காக அமைக்கப் பெற்ற மாபெருஞ் சபையாம் காங்கிரஸ் எங்கே? என்றால் எல்லாம் சிறையில்தான். அடக்கு முறையும் பெருக, அன்பர்கள் சிறை புகுதலும் பெருக, அறப் பெரும் போரும் அதிக மதிகமாய்ப் பெருகிக் கொண்டே செல்கின்றன. சாத்வீகப் போராட்டத்தை யிந் நிலைமையில் கொண்டுவந்திருப்பது பொதுவாய்த் தலைவர்களே யெனினும், சிறப்பாய் அடக்கு முறைதான் அதற்குப் பெரும் வழிதிறந்தது என்பதால் மிகையாகாது. இப் போரில் பொதுவாய்ப் பாரத நாடும், சிறப்பாய் பம்பாய் மாகாணமும், அதினினும் உயர்வாய்க் கூர்ஜரமும் இவை அனைத்திலும் உச்சமாய் பர்டோலியும் தலைப்பட்டிருத்தல் வெள்ளிடை மலை. பம்பாயின் ஒத்துழைப்பு அளவிடற்கரியது. கூர்ஜரத்தின் தியாகம் பாராட்டற்கரியது. பர்டோலியின் பலிதானம் கடந்தொளிர்கின்றது. பம்பாய் மாகாணம் வாழ்க! கூர்ஜரம் ஓங்குக!! பர்டோலி ஜ்வலிப்பதாகுக!!!

இப்போது நமது தமிழகத்தின் நிலைமையைச் சற்று உன்னும் போது அது மகா கேவலம். அடிகளாரின் அன்புப் போரில்—அறவினையில் கூர்ஜரமும் பம்பாயும் முன்னின்றதுபோல், முன்னின்று தியாகம் புரிந்துகொண் டிருப்பது போல். நம் தமிழ் நாடு தொடர்ந்து முன் வரா திருப்பது நமது துரதிர்ஷ்ட மெனவே செப்பல் வேண்டும். காந்தி யடிகளின் அறவுபதேசத்திற் செவி சாய்த்து மனம் ஒருமித்துக் கருத்திருத்தி அவரது ஆக்க வேலையில் அருங் கடமை பேணித் தன்னைப் பண்படுத்திக் கொண்ட கூர்ஜரம் போன்று, தமிழகமும் தலைப்பட்டுக் கடமை பேணிப் பணியாற்றித் தன் அன்னையின் பாதாரவிந்தங்களின் கடனீடு செய்து தன்னைப் பண்படுத்திக் கொள்ளாமையை மீண்டு வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியதாய்த்தா னிருக்கிறது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டிலுள்ள பற்பல சூழல்களும், பிணக்குகளும், வேற்றுமை யுணர்வின் நீட்சியுமே யன்றி வேறெதைச் சொல்ல இடமுண்டு? தமிழ் நாடு, தன் வேலையில் இனியேனும் தலைப்பட்டு ஒருமை மனம் வாய்ந்து தேவியின் அரும் பணியி லீடுபட் டுழைப்பதைக் கண்டு மகிழ்ச்சியுறும் பெரும் பேற்றை “பாரதி”யின் 3-ம் ஆண்டேனும் கண்டு இன்புறு மென்று எதிர் பார்க்கின்றோம்.

---

# “பாரதி” போஷகர்கள்

“பாரதி”யின் ஆசிரியர் திரு. ரா. நா. அவர்கள், அரசியலாரின் அடக்கு முறைக்கு அடங்கா நிலை நின்று, எதிர் பாராத விதமாய்ச் சிறை சேரவே, “பாரதி” யிடையில் 3 மாதமாய் மயங்கித் தயங்கி உற்று நின்ற நிலைமையை யீண்டு எவ்வுரையால் பகரப் போகின்றோம்?; என்றாலும் ஈதெல்லாம் அவ்வப்போது உண்மைக் காரணங்கள் பலவற்றோடு அறிக்கைத் தாள்களினாலும் பத்திரிகைகளின் வாயிலாயும் தெரிவித்து வந்திருப்பது “பாரதி”யின் அன்பார்ந்த போஷகர்களுக்கு நன்கு தெரிய வந்திருப்பதேயாகும்.

இப்போது “பாரதி” எவ்வெந் நிலைமையிலேயோ எப்படி எப்படியோ ஒரு மூன்று திங்கள் வரை அல்லலுற்று நின்று, ஒருவாறான வாய்ப் பேற்று ஒரு சிறிது புதிய நாமமும் பழைய நாமமோடு தாங்கி வெளிவரத் தொடங்கி இரண்டு வெளியீடுவரை வெளி வந்து விட்டது. இனி “பாரதி”யால் அன்னையின் கடன்கள் செவ்வனே ஆற்றப்படுமென்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை. “பாரதி”யின் மணியோசையும், அதன் சிலம் பொலியின் ஆர்ப்பும் நம் தமிழக மெங்கணும் தொனிக்கும். தமிழச் சகோதரர்கள் பயிலும் அயலகமும் சென்று அது ஒலிக்கும். “பாரதி”யின் தூய வெண்மேனியின் ஒளி, புனித நிலவு கான்றுகொண் டிருக்கும். இது கண்டு நம் “பாரதி”யின் போஷகர்களும் மகிழ்வார்களாக.

“பாரதி”யின் உதயத்தால் நாட்டிற் கேற்புடையதாய நன்மை விளையுமே யன்றி, இதன் உண்மையான உழைப்பு ஒருபோதும் ஒரு சிறிதும் வீண்போகு மென்று சொல்வதற்கிட மில்லை. நாம் பிறந்த நாட்டிற்கு நாம் செய்யும் கடமையாது? அக் கடமையை எவ்வகையில் நிறைவேற்றலா மென்று சில்லாண்டுகளாய் வேட்கையுற் றிருந்த எமக்கு, இப் “பாரதி”யின் பணி வாய்த்திருப்பதால் எமது கடமைகள் இனிது ஈடேறு மென்பதே எமது நம்பிக்கை. எம் வாழ்நாளிற் பெரும் பகுதியை இப் “பாரதி”யின் பணிக்கு-பாரத தேவியின் பாத



பூஜைக்கு அர்ப்பணம் செய்திருக்கிறோ மென்பதைப் “பாரதி”யின் போஷக கனவான்களுக்கு இங்கே ஞாபகப்படுத்துகின்றோம்.

போஷகர்கள், “பாரதி”யின் அவசியம் இதன் அருமை இதனது அரும் சேவை ஆகியவைகளை நன்குணர்ந்து இதன் மீது பற்று வைத்து இதன் வளர்ச்சி நாடி யிதற்கோ ரளவான தொகை யீந்து உதவ முன்வாராவிடின், “பாரதி” யித்துணை நேர்மையுடன் இவ்வளவு தூரம் வேலை புரிந்து தம் நாட்டின் உள்ளத்தைத் தன் வயப்படுத்தியிருப்பதற்கு வழி நேர்ந்திரா தென்பது எமது கருத்து. உடலுக் கமைந்த உயிர் போன்று, “பாரதி”க்கேற்ற உதவியாய்ப் போஷகர்களைப் பெற்றிருக்கிறோம். இவர்களின் உதவியால் தொண்டு தொடங்கி வரும் “பாரதி”யின் வேலையால் ஏதேனும் நாட்டிற்கு நன்மை யுண்டு என்று சொல்வதானால் அதில் அதிகப் பகுதியைப் போஷக கனவான்களால் விளைந்த நலமென்றே கருதல் வேண்டும். இக் கனவான்களுக்கு எமது பிரியமிக்க வந்தனத்தை மகிழ்வோ டளிக்கின்றோம்.

“பாரதி”யின் முதல் ஆண்டு 16 போஷகர்களை வழங்கிவிட்டுச் சென்றது. அது நோக்கி அடுத்த இரண்டாம் ஆண்டு, அதினும் அதிகமான போஷகர்களை அளிக்குமென்றே எண்ணி எதிர் பார்த்திருந்தோம். ஆனால் எதிர் பார்த்தபடி அவ்வளவுக் கிடமின்றி சற்றேறக்குறைய முதலாவதாண்டின் மூன்றி லொரு பங்கான போஷகர்களையே அதாவது 5 பேர்களையே சென்ற ஆண்டு தந்திருக்கிறது. எனினும் அது குறித்து இங்கே நாம் அதிகம் வருந்துவதற்கிடமில்லை; என் செய்வது. நாட்டின் வேகமான போக்கும், அரசாங்கத்தின் நேர்மையும், தொழிலாளர் முதல் முதலாளிகள் வரை நேர்ந்திருக்கும் இடுக்கணிலைமையும் இவ்வா றெய்தி யிருக்கிறது என்று நாம் ஒருவாறு உணரக்கூடியதா யிருப்பினும், “பாரதி”யின் போஷகர்கள், “பாரதி”யின் நிலைமையையும் “பாரதி” பாரதத்திற்கு எத்துணையானது, எவ்வளவுக் கெவ்வளவு அவசிய முள்ளது, அருமை பொருந்தியது என்பதையும் இவ் வமயம் சற்றுச் சிந்தித்துப் பார்த்து இச் சமயத்திற் கேற்ற உதவிகள் பல வற்றை யின்னும் செய்து உதவி, “பாரதி”யை மென்மேலும் ஆக்கமும் ஊக்கமும் உற வளர்த்து வருவார்கள் என்று எதிர் பார்க்கின்றோம்.

ஏதோ ஒரு காலத்தில் ஒரு சிறிது அளவான உதவியைச் செய்து விட்டோம், அத்தோடு நம் கடமை நிறைவேறி விட்டது என்று தயவு செய்து இருந்துவிட வேண்டாம். "பாரதி"யின் போக்கும் அதன் மனோபாவங்களும் அதன் அருந் தொண்டும் வளர்ந்து வளர்ந்து செல்லும் தோறும் தங்கள் உதவியும் அதனை அரண் செய்து கொண்டே வருமேல் "பாரதி" குன்றின் மீதிட்ட குன்றாத் தீபம் போன்று என்றும் இங்கு நின்று நிலைத்து எங்கும் பிரகாசிக்கும்.

ஆதலால் எமது அன்புக்குரிய போஷக உதவியாளர்களே! இவ் வாண்டிலும் தங்கள் தங்களா லியன்ற தங்கள் சொந்த உதவியை உதவுவதுடன் ஒவ்வொரு போஷகர்களும் தனித் தனி ஒவ்வொரு புதிய போஷகர்களைச் சேர்த்து இவ்வாண்டில் இந் "நவீன பாரதி"க்கு வழங்குவீர்க ளென்று தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். தங்கள் நேரிய உதவியையோ அல்லது தங்களால் சேகரித்து வழங்கும் பிரத்தியேகமான போஷகர்களையோ "நவீன பாரதி" தங்களது நவீன பரிசிலாக அடையு மென்று எதிர் பார்க்கின்றோம்.

## "பாரதி"யின் அபிமானிகள்

"பாரதி" தோன்றிய அன்று முதல் இன்று வரை "பாரதி"யின் மீது தங்கள் தாராளமான விரிந்த உள்ளங்களை யீந்து இதன் வளர்ச்சியில் பேரபிமானங் கொண்டு இதற்கோர் உயரிய பாதுகாவலர்களாக ஆங்காங் கமர்ந்து இதன் முன் பின்னான உதவிகளை அவ்வப்போது தங்கள் நலத்தையும் சிரமத்தையும் செலவையும் எண்ணாது கைமாறு குறியாது இதற்கு வேண்டிய உரிய உதவிகளை உதவி வந்திருக்கும் எமது அன்பார்ந்த அபிமானிகளுக்கு யாம் யாது கைமாறு காணப் போகின்றோம். ஆனால் "பாரதி"யும் பாரதமும் அவர்கள் நன்றிக்கு நன்றியாக என்றென்றுமே கடமைப்பட்டிருக்கிற தென்பதை மட்டும் அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதோடு யாமும் அவர்களுக்கு எமது மனதுவந்த வந்தனத்தை யித்தோடு வழங்குகின்றோம்.

அந் நண்பர்கள் இன்னாரின்னாரென நாம் அறிவோம். அவர்களின் அருமை நாமங்களை நிரல்பட இங்கே எமது நன்றியின் ஞாபகார்த்த



மாய்ப் பொறித்தல் வேண்டு மென்பது எமது பெரும் விழைவே யாகும். இவ் விழைவுக்குப் "பாரதி"யின் ஏடுகள் போதுமா என எண்ணும் போதுதான் எம் மனம் திகைக்கின்றது. அடுத்தொரு சந்தர்ப்பம் நேரும்போது அவர்களுக்கென ஒரு பெரும் பகுதி யிருந்துகொண் டிருக்கிறது. இப்போது அவ் அன்பர்களுக்கு எமது உளத்தையே ஆசனமாக உதவி யிருக்கின்றோம்.

பிரிய நேயர்களே, தங்கள் உதவியை "பாரதி" மென்மேலும் பெற்றுக்கொண்டே வளர்ந்து வருமெனவே விரும்புகின்றோம். தங்களுக் கேற்ற வாய்ப்பும் சந்தர்ப்பமும் வாய்ந்த சமயங்களில் தங்கள் உயரிய சிந்தையைப் "பாரதி"யின் பக்கமே தந்து, இவ் வாண்டிற்கும் வேண்டிய சந்தா நேயர்களைத் திரட்டி வினியோகிக்கும்படி வேண்டுகின்றோம். "பாரதி"க்கு இத்தகைய உயரிய உதவிகளைப் புரிவதற்கேற்ற நல்ல தருணம் இதுதான். பலவித பரிசோதனையான இத் தருணத்திற்கமையும் தங்கள் சகாயம், முன்னிலும் பன்மடங்கு மிக விலையுள்ளதாகப் பாராட்டற் குரியதேயாகும். ஆதலால் அன்பர்களே! அபிமானிகளே!! எமது வேண்டுகோளைப் பெரிதென ஏற்று தங்கள் நற்றொண்டை இதுபோது "நவீன பாரதி"க்குச் சமர்ப்பிக்க ஒருபோதும் பின்னிட மாட்டீர்க ளென்று தங்கள் பெரிய உதவியை நாடுகின்றோம். எங்கள் நாட்டத்தைத் தங்கள் விவேகத்தால் அளந்தறிந்து தங்கள் பிரிய பேருதவிகளைக் கொடுத்து உதவுங்கள்,

## சந்தா நேயர்களுக்கு

"பாரதி"யின் சந்தா நேயர்களே, தாங்கள் முதல் ஆண்டுபோல் சென்ற ஆண்டிலும் "பாரதி"பால் ஒரு மனம் வாய்ந்து சந்தாதார்களாய்ப் பதிவு பெற இடமளித்து, "பாரதி"யை ஆதரித்து வந்தமைக்கு எமது நன்றி யறிதலைத் தங்களுக்கு நல்குகின்றோம். அதுபோல் இவ் வாண்டிலும் தங்கள் சந்தாவை நாம் மனமுவந்து வர

வேற்க விரும்புவது போல் விருப்புற்று அனுப்பிவைத்த அன்பர்கட்கும், அனுப்பும் அன்பர்கட்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"பாரதி," கேவலம் சுய நலம் கருதியோ, வீண் தற்பெருமை கொண்டோ, வேறெவ்வித தன் பயன் கருதியோ ஆரம்பிக்கவில்லை. எம்முடையதும் "பாரதி"யினுடையதுமான தன்னல மெதுவென்றால், தேசப் பொதுவுக்கே பணி பூணும் பாரநலமேயன்றி வேறெதை உரைக்க இடமுண்டு? தாய் நாட்டு மாத சஞ்சிகைகளிலே "மார்டர்ன் ரெவியூ" போன்று தமிழ் நாட்டுப் பத்திரிகைக் குழுவில் நம் "பாரதி" பொலிய வேண்டுமென்பதில் நமக்கு என்றும் விருப்பதிகம். இவ்விருப்பத்தால் பத்திரிகை வாழ்விலேயே எம்மை யிடையறாது ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றோம். இவ்வுழைப்பில் உகந்து நிற்கும் எமது கோரிக்கையில் சந்தா நேயர்களாகிய தாங்கள் ஒவ்வொருவரும் சிந்தை வைத்துத் தாங்கள் செய்தற்குரிய நலந்தரும் உதவியைச் செய்தலே அமைவுடையதாகும். ஆதலால் இப் புதிய ஆண்டிற்குத் தாங்கள் மிகக் குறைந்தது ஒவ்வோர் புதிய சந்தாதாரையேனும் புதிதாய் உதவுவீர்களென்று வேண்டுகிறோம்.

இந்தியாவின் நிலைமை பிரதி தினமும் புதிய புதிய வேகத்தோடு மாறிக்கொண்டே செல்லவும், அது கண்டு அரசியலார் இனிமேல் வரும் தமது எதிர்கால வாழ்வு யாதாகுமோவென்று கலங்கவும், அந்நிவர்த்தி யெண்ணி அவர்களின் அடக்குமுறை அனல் எங்கும் கதுவி யெரியவும், அதன் பலனாய் நம் அரும் பெரும் தலைவர்களும் அவர்தம் செல்வர்களும் செல்விகளும் தொண்டர்கள் பல்லாயிரவருமாய்ச் சிறைக் காடு சேரவும், இந்தியாவின் வேட்கையை எப்படியோ ஒருவாறு தணிக்கப் போவதான பாவனையுடன் லண்டனில் ஓர் மகாநாடு கூடவும் செய்து விட்டு "பாரதி"யின் 2-ம் ஆண்டு அவ்வளவில் சென்றிருக்கிறது. இனி யிதில் நின்றும் மேலே நடைபெற வேண்டிய விமோசன வேலைகளெல்லாம் முழு உருவகமான நிலைமையில் இதன் 3-ம் ஆண்டு நிச்சயமா யெவ்விதத்தும் காணும் என்றதோர் முழு நம்பிக்கையோடு எமது கடமையில் முயலுவோமாக.

---

# சர். சந்திர சேகர வேங்கட ராமன்.

## Kt., M. A., D. Sc., (Hon) Ph. D., LL. D., F. R. S.

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

என்னாட்டிலும் பொன்னாடாய் விளங்கிய இந்தியாவில் அக் காலத்தில் உபநிஷத் படித்தவர்களுக்குப் பசுவையும், பாரியையும் தானம் செய்து வந்த நாசிகேது அரசன், "நான் எவ்வளவு மேலானவன், நான் ஏதாவது கண்டு பிடிக்க முடியுமா?" என்ற எண்ணங் கொண்டு சாவாகிய பிரச்சினையை ஆராய்ச்சி செய்ய ஆத்திரமூண்டு யமன் வீடு சென்று மூன்று தினங் காத்திருந்து யமனைக் கண்டு தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொண்டதாகக் கூறப் படுகிறது. இதன் உண்மையை ஆராய்வதற்கில்லை. ஆனால் இந்தியாவில் அக் காலத்தில் அநேக தத்துவ சாஸ்திரிகளும், இன்னும் பலவித மேதாவிகளு மிருந்திருப்பதற்கான அத்தாட்சிகள் பல உள.

இந்தியா, மேனாட்டாரின் வருகையால் அடிமைத்தன மேற்பட்டுத் தன் பெருமை குன்றித் தயங்கிக் கிடக்கு மின்னாளிலும், அக் காலத்து ஞான மெனும் ஆறு, தன் நீரோட்டமற்று மேவப்பட்டுத் தூர்ந்து போன பின்னும் அதில் நின்றும் கசிந்து வந்த நீர், மகாத்மா காந்தி, சர் ரபீந்தர நாத் தாகூர், சர். சந்திர சேகர வேங்கட ராமன், சர். ஜெகதீஸ் சந்த்ர போஸ், சர். ரே. புரோபஸர் ராதா கிருஷ்ணன் முதலிய இன்னும் அநேகமேதாவிகளுக்குப் பானகமாகி, 'குப்பையிற் கிடந்தாலும் குன்றிமுத்து மங்குமா?' என்றபடி, சுதந்திர மிழந்து சீர்கெட்டிருக்கும் இந்தியாவின் ஞான மென்னும் சூரியோதயத்தை அடிமைத்தன மென்னும் அந்தகாரம் அடக்கிக்கொண்டிருக்கிற தென்பதை விளக்கிக் காட்டி யிருக்கிறது.

சகல சுதந்திரங்களையும் பெற்று முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில், அநேக சாஸ்திரமேதாவிகள் உண்டாகிப் புதியன பலப் பல ஆராய்ந்து தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் பெருமையை விளைவித்ததைவிடப் பதின் மடங்காய் சர். சந்திர சேகர வேங்கட ராமன் பிரகிருதி சாஸ்திரத்தில் உலகத்தார் வியப்புறும் வண்ணம் அரிய பெரிய விஷயங்கள் பல ஆராய்ந்து இந்தியாவின் (குடத்தினு ளிட்ட சுடர் போன்ற) பெருமையை உலகத்தார் மனதில் நன்றாய்ப் பதியும்படியாய் நிலை நாட்டியிருக்கிறார். ஆகவே, இப் பெரியாரின் சரிதையை இவண் சுருக்கமாய் ஆராய்வோம்.

## பிறப்பும் படிப்பும்

ராமன், 1888ம் வருஷம் நவம்பர்மீ 7௳ திருச்சினாப்பள்ளியில் நல்ல சுப தினத்தில் பிறந்தார். அவருடைய தந்தை சந்திர சேகர ஐயர், சாதாரணப் பள்ளிக்கூட உபாத்தியாயரா யிருந்ததாகத் தெரிகிறது. ராமன் சகோதரர் இருவர். ஒருவர் ராமனுக்கு மூத்தவர் மற்றவர் இளையவர். மூத்தவர் தற்போது சென்னைப் புகைவண்டி இலாக்கா கணக்குப் பரிசோதகரா யிருந்து வருகிறார். இளையவர் சென்னை பிரெஸிடென்ஸி கல்லூரியில் பிரகிருதி சாஸ்திரத்தில் ஆனர்ஸ் இரண்டாவது வகுப்பில் தேறித் தற்போது ஆராய்ச்சி மாணக்கரா யிருந்து வருகிறார்.

ராமன் கல்வியில் மிகச் சிரத்தை யுள்ளவர். இவர் அதிக காலம் தெலுங்கு நாட்டில் கழித்ததாகத் தெரிகிறது. சிறு வயதிலேயே—12-வது வயதிலேயே 'மெட்ரிகுலேசன்' முதன்மையாய்த் தேறினார். பின்பு சென்னை பிரெஸிடென்ஸி கல்லூரியில் சேர்ந்து பயின்று தன் 14-வது வயதில் யப். ஏ. (F. A.) தேறினார். 16-வது வயதில் பி. ஏ. பரீக்ஷையிலும், 18-வது வயதில் எம். ஏ. பரீக்ஷையிலும் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறினாரென்றால் இவரின் கல்வித் திறமைதானென்னே? இதே சமயத்தில் ராமன் வெளிச்சத்தைப் பற்றி (Diffraction of Light) ஆராய்ச்சிகள் பல செய்து வரைந்து அநேக ஐரோப்பிய சாஸ்திர சஞ்சிகைகளுக்கு அனுப்பி வந்தார். ராமனுடைய திறமையைக் கண்டு ஐரோப்பா தேசங்களுக்குச் சென்று ஆராய்ந்துவர உபகாரச் சம்பளம் உதவப்பட்டது. ஆனால் அச் சமயம் ராமன்



மிகவும் பலஹீனமா யிருந்தபடியால் நீண்ட தூரப் பிரயாணஞ் செய்யத் தகுதி யற்றவரானார். ஆனால் சிறு வயதிலேயே எவருங் கண்டு மிக ஆச்சரியப்படத் தக்கதாக விருத்தி யடைந்த அவர் மூளைக்கு வேலை வேண்டாமா?

ராமன், இந்தியப் பண இலாகா உத்தியோகத்திற்குப் (India Finance Service) போட்டிப் பரீட்சையில் உட்கார முயன்றார். இப் பரீட்சையில் சமஸ்கிருதம், திரவிய திட்டப் பாடம் (Economics) முதலிய பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதா யிருந்தது. ஆனால் ராமனோ பிரகிருதி முதலிய சாஸ்திர பாடங்களில் மாத்திரம் தேர்ச்சி பெற்றிருந்ததால் இப் போட்டிப் பரீட்சைக்குப் புதிதாகப் படிக்கவேண்டியதா யிருந்தது. சுமார் ஆறு மாதங்களுக்குள் எல்லாம் ஆராய்ந்து பரீக்ஷையில் (அகில இந்தியாவின் நல்ல திறமை வாய்ந்தவர்கள் உட்கார்ந்து) தேறியவர்களில் தலைமை வகித்தா ரென்றால் இவரின் சிந்தனைசக்தியும், விடா முயற்சியும், கல்வியின் வல்லமையுந்தானென்னே! என்னே!!

## உத்தியோகம்

ராமன் கல்கத்தாவில் கவர்ன்மெண்ட் உதவிக் கணக்கதிகாரி (Deputy accountant General) யான உயர்ந்த உத்தியோகத்தில் தன் 19-வது வயதிலேயே (1907) நியமனம் பெற்றார். இதே சமயத்தில் கல்கத்தாவில் சாஸ்திர விருத்திக்கான இந்தியர் சங்கம் (Indian association for the cultivation of Science) ஒன்று டாக்டர் மகேந்திரலால் சர்க்கார் என்ற பிரபுவால் உண்டாக்கப்பட்டிருந்தது. இச் சங்கத்தின் உதவியால் அநேகர் சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்ய வசதிகளேற்பட்டிருந்தன. சாஸ்திர ஆராய்ச்சியிலேயே ஆசை கொண்ட ராமன், தன் உத்தியோக நேரந் தவிர மற்ற நேரங்களை அச் சங்க ஆராய்ச்சிச் சாலையில் கழித்து வந்தார். இங்கே பல நூதனங்களை ஆராய்ந்ததோடு அநேக சாஸ்திரக் கட்டுரைகளையும் கல்கத்தாச் சர்வகலாசாலைச் சஞ்சிகைக் குதவிவந்தார். கல்கத்தாச் சர்வ கலாசாலை அதிகாரியா யிருந்த (Vice Chancellor) சர் அஸுடோஸ் முக்கர்ஜீ என்பவர், ராமனிடத்தில் பிற் காலத்தில் சாஸ்திர ஆராய்ச்சியில் சிறந்து விளங்கக் கூடிய அநேக அறிகுறிகளைக் கண்டு ராமனைப் போற்றி வந்தார்.

கல்கத்தாவில் மூன்று வருஷங்கள் முடிந்ததும், ராமன் அதே வேலையில் இரங்கூனுக்கு மாற்றப்பட்டார். இரங்கூனிலிருந்து கொண்டே அநேக ஆராய்ச்சிகளை இரங்கூன் கலாசாலையில் செய்து வந்தார். திடீரென்று தன் தகப்பனார் இறந்துவிட்டதால், ராமன் விடுமுறை எடுத்துக்கொண்டு சென்னை திரும்பினார். 1911-ம் வருடம் ராமன் மறுபடியும் கல்கத்தாவில் தந்தி தபால் இலாகா கணக் கதிகாரியாக நியமனம் பெற்றார். முன்பு தனக்கு ஆராய்ச்சிக்கு ஆதரவளித்த இடத்திற்கே திரும்பவும் வந்து சேர்ந்ததுபற்றி அள வற்ற ஆனந்தமடைந்தார்.

இந்தியர் சாஸ்திரக் கல்வியில் முன்னேற்றமடைய, சர். அஸுடோஸ் மூக்கர்ஜீ என்பவர், சர். டாரக்நாத் பலிட், சர். ராஷ்பிகாரி கோஸ் என்ற இரு பிரபுக்களின் உதவியால் ஒரு சாஸ்திரக் கல்லூரி (Univercity Science College) ஏற்படுத்தினார். அப்பொழுது ராமனுடைய வல்லமையை யறிந்த சர் மூக்கர்ஜீ, பிரகிருதி சாஸ்திரத்திற்கு, 25 வயதை யுடைய ராமனைத் தலைமை ஆசிரியராக (Professor of Physics, நியமித்தார். ராமன் அக மகிழ்ந்து தன் உயர்ந்த ஸ்தானத்தை இராஜிநாமா செய்துவிட்டு 1917-ம் வருஷம் புரோபஸர் நியமனத்தை ஒப்புக்கொண்டார். இதைக் கண்ட அநேகர் "கேவலம், மிகச் சிறிய வயதை யுடையவரும், மேனாட்டுப் பட்டங்க ளொன்றும் பெறாதவரு மாகிய ராமனைப் பெரிய புரோபஸராக ஏற்படுத்தியது அறியாமை" என்று பரிகசித்தனர். நியமனத்தின் தினம் சர். மூக்கர்ஜீ கூறியதாவது:— "......பிரகிருதி சாஸ்திரப் படிப்புக்குத் தலைமை வகிக்கச் சந்திரசேகர வேங்கடராமனை நாமடைந்தது நாம் செய்ததோர் பாக்கியம். அவர் தன் உத்தியோகத்தின் பல அலுவல் களினூடே பற்பல ஆராய்ச்சிகள் செய்து ஐரோப்பியர்களின் நன் மதிப்பைப் பெற்றிருக்கிறார். அன்றியும் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் பெருத்த சம்பளம் பெறக்கூடியதாகவும், மென்மேலும் உயர்ந்து பெரிய ஸ்தானம் வகித்து வெகு சந்தோஷ வாழ்க்கை பெறக் கூடியதாகவு மிருந்த தன் உத்தியோகத்தை இழந்து கேவலம் எதிர் கால முன்னேற்றத்திற்கு வெகு சந்தேகத்தை யுடைய உபாத்தியாயர் வேலையை ஒப்புக்கொண்டது அவர் சாஸ்திரத்தின் மேல்



கொண்ட அன்பின் காரணமன்றோ?" சர். மூக்கர்ஜீ, ராமனைத் தேர்ந்தெடுத்ததற்கும், ராமன் தன் உயர்ந்த உத்தியோகத்தை விட்டு ஆசிரியர் வேலையை ஒப்புக்கொண்டதற்கும்\ இருவரும் எவ்விதத்திலும் வருத்தப்படக் கூடாதபடி காரியங்கள் நடந்துவிட்டன.

ராமனுக்கு ஆசிரியர் பதவி கிடைத்ததும் சாஸ்திர ஆராய்ச்சிக்குத் தன் முழு நேரத்தையுங் கழிக்கத் தொடங்கினார். தன் ஆராய்ச்சிகளைச் சாஸ்திரக் கல்லூரியிலாவது, இந்தியர் சங்கத்திலாவது ஆராய்ந்து வந்தார். சின்னாளில் ராமன், மேல் குறித்த இந்தியர் (சாஸ்திர) சங்கத்திற்குக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார். அன்னை சாஸ்திர தேவி, இளமைச் சாஸ்திர நிபுணரின் பக்திக் கிரங்கி தன் இரகசியத்தைக் காதில் ஓத ஆரம்பித்தாள். புரோபஸர் ராமன் பெயர், உலக முழுதும் பரவி அவருடைய ஆராய்ச்சிகளை வெளிப்படுத்தாத—கியாதி பெற்ற சாஸ்திரச் சஞ்சிகைக ளொன்றும் பாக்கி யில்லை. அவர் அல்லும் பகலும் உழை உழையென்று உழைத்தவர். அதி காலையி லிருந்து மாலை இருட்டாகும் வரை இந்தியாவில் பல பாகங் களிலிருந்தும் ஆராய்ச்சிகள் செய்ய ராமனை விரும்பி வந்த இளமை மாணாக்கர்களோடு புதிது புதிதான ஆராய்ச்சிகள் பல செய்துவந்தார்.

## ஆராய்ச்சிகள்

ராமன் சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் பயின்றுவரும் போதும், பின்பு பண இலாகா உத்தியோகத்தி லிருக்கும்போதும் அநேக அரிய பெரிய சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்து மேனாட்டுச் சஞ்சிகைகளில் வெளிப்படுத்தி அநேக சாஸ்திர நிபுணர்களின் நன் மதிப்பைப் பெற்று வந்ததாகக் கூறினோம். துவக்கத்தில் ராமன் வெளிச்சம் வளைந்து சிறிய வஸ்துக்களின் பின்புறமாகச் செல்லுந் தன்மையை (Diffraction of Light)க் குறித்து ஆராய்ந்து எழுதி யனுப்பினார். பிறகு கல்கத்தா இந்திய சங்கத்தில் சம்பந்தப் பட்டதி லிருந்து பலவித சப்தங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கினார். 1911-லிருந்து 1922-23 வரை சப்தத்தின் அந்தரங்க விஷயங் களைப் புதிதாக ஆராய்ந்து நூற்றுக் கணக்காக எழுதி யனுப்பி வந்தார். அதிகமாய் வாத்திய சப்தங்களைப் பற்றியே ஆராய்ந்தார்.

சப்தத்தின் சாஸ்திரத்தில் தெளிந்த ஓர் பெரும் அதிகாரியென எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டார். ஆகவே 1927-ல் ஜெர்மனி தேசத்தில் பிரகிருதி சாஸ்திரத்தைப் பற்றி அநேக தலைப்பின் கீழ் விஷயங்களை வெளியிட்ட புஸ்தகத்தில் (Handbuch der Physik) சப்தத்தைப் பற்றிய பாகத்திற்கு ராமனை எழுதி யனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

எல்லா ஆராய்ச்சிகளையும் விட அணுக்களால் சிதரப்படும் வெளிச்சத்தை (Scattering of light by molecules)ப் பற்றிய ஆராய்ச்சியே, ராமனுக்குப் பெயரையும் கீர்த்தியையும் தந்து உலகப் பிரசித்தி பெறும்படியான நிலைமைக்குக் கொணர்ந்த தன்றியும், உலகத்திலேயே தலைசிறந்து விளங்கும் நோபல் வெகுமதியைச் சென்ற வருடம் (1930) பெறச் செய்தது.

சூரிய வெளிச்சம் பார்வைக்கு வெண்மை நிறம்போ லிருந்தாலும் அதில் சிவப்பு, ஆரஞ்சி, மஞ்சள், பச்சை, நீலம் முதலிய ஏழு வித நிறங்க ளடங்கி யிருக்கின்றன. * அப்படி நிறங்களை யுடைய சூரிய வெளிச்சமானது வெட்ட வெளியில் ஓடும்போது ஆகாயத்தில் பரவி நிற்கும் அணுக்களால் கொஞ்சம் சிதரப்படுகின்றன. அப்படிச் சிதரப்படும் வெளிச்சத்தில் அதிகமாய் ஒதுக்கப்படும் பாகம் நீல நிறம். நாம் பூமியிலிருந்து பார்க்கும்போது சூரிய வெளிச்சத்தில் அணுக்களால் சிதரப்பட்டு அதிகமாய் ஒதுக்கப்படும் பாகத்தையே பார்க்க நேரிடுகிறது. அப்படிக் காணப்படும் வெளிச்சம் நீலநிற மாதலால் ஆகாயம் நீல நிறமாய்த் தோன்றுகிறது. இப்படி நீல நிறமாய்த் தோன்றுவதற்குச் சூரியன் கொஞ்ச தூரத்தி லிருக்கவேண்டும். இவ் வுண்மையை லார்ட் ரேலே என்னும் ஆங்கில சாஸ்திர நிபுணர் (இவரும் நோபல் வெகுமதி பெற்றவர்) அநேக வருஷங்களுக்கு முன்னே வெளிப்படுத்தினர். ஆகவே லார்ட் ரேலே வெளிச்சம் அணுக்களால் சிதரப்படுவதைக் கொண்டு ஆகாயத்தில் நீல நிறத் தோற்றத்தை மாத்திரம் விடுவித்தா ரன்றி அதன்மேல் சொல்லவு மில்லை, தெரியவுமில்லை.

* K. G. கிருஷ்ணன், 'சர் ஐசக் நியூடன்' 'பாரதி' பக்கம் 802. டிசம்பர் 1929



ராமன், வெளிச்சம் அணுக்களால் சிதரப்படுவது ஆகாயத்தில் மாத்திர மல்லவென்றும் உலகத்திலே எல்லா வித தோற்றங்களிலும் அது ஈடுபட் டிருக்கின்ற தென்றும் ரேலேயின் கோட்பாட்டை விட எல்லாராலும் ஒப்புக்கொள்ளத் தக்கவிதமாயும், பழைய ஸ்திரப் படுத்திய "குவாண்டம்" கோட்பாட்டை (Quantum Theory)க் கொண்டு விவரித்துக் காட்டினர். 'ராமன் செயல்' (Raman Effect) என்ற ராமனுடைய உலகப் பிரசித்தி பெற்ற ஆராய்ச்சியைத் தமிழில் தெளிவாய் எழுவதென்றால் மிகக் கஷ்டம். ஆயினும் அதைப்பற்றி இவண் சுருக்கமாகக் கூடியவரை எழுத முயலுவோம்.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தூசிகள் நீங்கிய திராவக மொன்றையிட்டுச் சூரிய வெளிச்சக் கதிரொன்றை ஓர் துவாரத்தினின்று இப் பாத்திரத்தில் திராவகத்தினுள் பாய்ந்து செல்லுமாறு விட்டு பாத்திரத்தின் மறுபுறம் (வெளிச்சக்கதிர் ஓடிவரும் நேர் பாதையில்) நோக்கினால் வெளிச்சம் சிவப்பு நிறத்துடனும், வெளிச்சம் ஊடுருவிச் செல்லும் நேர் பாதைக்குக் குறுக்காக நோக்கினால் நீல நிறமும் தோன்றும். பாத்திரத்திலுள்ள திராவகத்தின் அணுக்களால் சூரிய வெளிச்சம் சிதரப்பட்டு கொஞ்சம் நேர் பாதையினின்று ஒதுக்கி விடுவதால் இந் நிறமுண்டாகிறது. 1921-ல் தண்ணீர் 'மித்தல் ஆல்கோகால்', 'ஈதல் ஆல்கோகால்' முதலிய திராவகங்களினால் மேற் கூறியபடி சிதரப்படும் வெளிச்சங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாதிருப்பதையும், அவைகள் "போலரைஸ்ட்" * வெளிச்சமாவதையும் காணப்பட்டது. 1924-ல் கிருஷ்ணனும் 1928-ல் வேங்கிடேஸ்வரனும் அநேக திராவகங்களை உபயோகித்து ஆராய்ந்ததில் மேல் குறித்த செயல்கள் தெளிவாகக் காணப்பட்டன.

* சாதாரணமாய் வெளிச்சம் பலவித அலைகளுடன் ஓடும். அப்படி யோடும் அலைகளின் பாதையில் வெகு சிறிய நீளமானதோர் துவாரத்தை வைத்தால் வெளிச்சத்திலுள்ள பலவித அலைகளும் அத் துவாரத்தினுள் செல்ல முடியாது. அத் துவாரத்தின் நெடு நீளமாக எந்த அலை ஓடி வருகிறதோ அந்த அலை வெகு சுலபமாகத் துவாரத்தினுள் சென்று விடுகிறது. மற்ற அலைகள் பல பக்கங்களிலும் ஓடியோடி வருவதால் துவாரத்தினுள் செல்ல முடியாது தடுக்கப்படுகின்றன. அப்படி தனி அலையாக மறு புறம் வந்து விடும் அலையையுடைய வெளிச்சத்திற்கு "போலரைஸ்ட்" **(Polarised)** வெளிச்சம் எனப்படும்.

1928-ம் வருஷம் ராமன், மேல் குறித்த செயல்கள், எல்லா வஸ்துக்களிலும் உண்டாகின்றனவா வென்று மறு முறையும் வெகு நுட்பமாய் ஆராயத் தொடங்கினார். உபயோகிக்கும் திராவகங்களிலும், வெளிச்சத்திலும் அநேக சீர் திருத்தங்கள் செய்து பார்த்ததில், சிதரி வரும் வெளிச்சத்தின் அலையின் அளவு, (Wavelength)உட் செல்லும் சூரிய வெளிச்சத்தின் அலையின் அளவைவிட வேறு யிருந்தது. இச் செயல்களைச் சுமார் 80 திராவகங்களையும், (liguids) வாயுக்களையும் (Gases), ஆவிகளையும், (Vapours) தூளாகி விடும் கனபதார்த்தங்களையும், உறை நீரையும் (ice) கொண்டு ஆராய்ந்ததில் மேல் குறித்த செயல்களைச் சிதரி வரும் வெளிச்சம் மிகத் தெளிவாய்க் காட்டிற்று. இப்படிப் பதார்த்தங்களால் சிதரி ஓடிவரும் வெளிச்சம் சாதாரணமாய்ப் பதார்த்தங்களில் பட்டு மினு மினுக்கும் வெளிச்சத்தைப் போலல்லாது இது ஓர் புதிய வெளிச்சமா யுண்டாவதைக் கண்டார். சுருக்கமாய்க் கூறுமிடத்து, குறிப்பானதோர் அலையின் அளவையுடைய வெளிச்சம் ஏதாவதோர் பதார்த்தத்தின் அணுக்களால் சிதரப்பட்டால் சிதரின வெளிச்ச அலைகளின் அளவு முற்றிலும் வித்தியாசமா யிருந்தது. மேலும் அப்படி சிதரப்படும் வெளிச்சம் ஒவ்வொரு பதார்த்தத்தின் அணுக்களின் வித்தியாசத்திற்குத் தகுந்தவாறு வித்தியாசத்தைக் காட்டின. இதுவே 'ராமன் செயல்' எனப்படுவது. பதார்த்தத்தில் முதலாவது வந்து தாக்கும் வெளிச்சத்தையும் பின்பு சிதரப்படும் வெளிச்சத்தையும் தனித்தனியாக 'ஸ்பெக்ட்ரம்' (Spectrum) என்ற கோடுகளடங்கிய புகைப்பட மெடுத்துப் பார்த்தால் அவைகள் வித்தியாசப்படுகின்றன. முதல் வெளிச்சப் படத்தில் சில கோடுகளமைந்திருந்தால் சிதரப்படும் வெளிச்சப் படத்தில் குறைந்தது ஒரு பங்கு அதிகமாய்க் காணப்பட்டன. அதாவது முதல் படத்தில் 3 கோடுகளிருக்கின்றன வென்று வைத்துக் கொண்டால் சிதரப்பட்ட வெளிச்சப் படத்தில் குறைந்தது ஆறு கோடுகளிருந்தன. இப்படிச் சிதரியோடும் வெளிச்சப் படத்தில் அதிகமாய்க் காணும் கோடுகளை ராமன் கோடுகள் (Raman Lines) என்றழைக்கப் படுகின்றன. ராமன் கோடுகளுக்கும் அக் கோடுகளை யுண்டாக்கிய பதார்த்தத்தின் அணுக்களின் அமைப்புக்கும் கணித சம்பந்த மிருக்கிறது. சமுத்திரமும், சமுத்திரத்திலுள்ள பனிக்கட்டி மலைகளும் நீல நிறமாய்க் காண்பதற்கு



'ராமன் செயல்' நல்ல ஆதாரமாகிறது. ரசாயன சம்பந்தங்களையுடைய இரண்டு பதார்த்தத்தி லுண்டாகும் ராமன் கோடுகள், பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

ஓர் உப்புக் கல்லைப்போலுள்ள ஸ்படிகத்தின் (Crystal) அணுக்களி னமைப்பைப் பற்றி "எக்ஸ் ரே" (X-Ray) என்றதோர் விநோத (கண்ணுக்குப் புலப்படாத) வெளிச்சத்தைக் கொண்டு அறிய முடிந்தது. ஆனால் ராமன் ஆராய்ச்சி ஒவ்வொரு ஸ்படிகத்தின் அணுக்கள் அமைப்பைக் காட்டுவதல்லாமல் அவைகள் ஒன்றுக் கொன்று இழுத்துக்கொண் டிருக்கும் பலாத்கார சக்தி (Forces of Attraction)யையும் புலனாக்குகிறது. இது சம்பந்தமாய் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் பகவந்தம் இருவரும் அநேக ஆராய்ச்சிகள் செய்து பதார்த்தங்களின் அணுக்களுக்குண்டான பலாத்கார சக்திகளையும், அப் பதார்த்தத்தின் பிரகிருதி குணத்திற்கு முள்ள சம்பந்தத்தையும் (The relation between the Atomic forces and the physical properties) வெளிப்படுத்தி யிருக்கின்றனர். ஆகவே ஓர் பதார்த்தம் கடினமாயும், ஒன்று மிருதுவாயு மிருப்பதின் காரணத்தையும் "ராமன் செயலால்" விளக்கிக் காட்ட முடிந்தது. இது காலம்வரை ஜலவாயு (Hydrogen) ஒரே ஒரு விதமெனத் தெரிந்துள்ளார். ஆனால் "ராமன் செயலால்" இருவித ஜலவாயுக்களுண்டு என்பதைக் கண்டு கொண்டனர் ரஸாயன சாஸ்திரத்திலும் இதுகாலம் வரை சந்தேகத்திற்கு இடமான அநேக விஷயங்களை ராமன் ஆராய்ச்சி நன்கு விளக்கி சந்தேகங்களை நிவர்த்தி செய்து விட்டது. ஆகவே ராமனுடைய ஆராய்ச்சி, பதார்த்த விஞ்ஞான சாஸ்திரத்தையும், ரஸாயன சாஸ்திரத்தையும் சம்பந்தத்தில் வெகு சமீபத்தில் கொணர்ந்ததோ டல்லாமல் அவைகளில் பல துறைகளில் ஆச்சரியப்படத் தக்கதாய் அநேக அரிய பெரிய விஷயங்களைப் புதிதாய்க் காட்டி விட்டது. மேலும் ராமன் ஆராய்ச்சி இன்னும் இதுவரை தோன்றாத பல புதிய ஆராய்ச்சிகளுக்கு ஆதாரமாயிருக்கிற தென்பது உலக நம்பிக்கை.

## சன்மானங்கள்

ராமனுடைய ஆராயும் வல்லமையைக் கருதி 1921-ம் வருஷம் கல்கத்தா சர்வ கலாசாலை, டி. எஸ். (D. Sc.) பட்டத்தை யளித்தது.

1924-ம் வருஷம், லண்டன் 'ராயல் சொசைட்டி' மெம்பராக (F. R. S.) தேர்ந்தெடுக்கப்பட்டார். இதில் அநேக மேனாட்டுச் சாஸ்திர நிபுணர்கள் தங்கள் கடைசிக் காலங்களில் பெரும்பாலும் அங்கத்தினர்களாய் எடுத்துக்கொள்ளப்பட் டிருப்பினும், ராமன் தன் 36-வது வயதிலேயே தகுதியுடையவரானார். இந்தியாவில் இவர் மூன்றாவது F. R. S. அதே வருஷம் கானடா (Canada)வில் கூடிய சாஸ்திரக் கூட்டத்திற்கு ராமன் பிரிட்டிஷ் சங்கத்து உபந்நியாசராக நியமிக்கப்பட்டு தான் அப்பொழுது ஆராய்ந்து வந்தவைகளைப் பற்றிப் பலரும் வியப்புறும் வண்ணம் பேசினார். அங்கிருந்து, அமெரிக்காவின் பெரிய சாஸ்திர மேதாவி மைக்கல்சன் (Michaelson) என்பவரின் வரவழைப்புக் கிணங்கி அமெரிக்கா சென்று, 'இந்தியாவும் இப் பெரியாரைப் பெற்றுளதா?' என்றனைவரும் அதிசயிக்கும்படிச் சொற்பொழிவுகள் செய்தார். அப்பொழுதே காலிபோர்னியா சர்வ கலாசாலையில் போகவர உபந்நியாசஞ் செய்பவராய் நியமனம் பெற்றார். 1925ல் ரஷ்யா தேசத்தின் சாஸ்திர சங்கத்தின் கௌரவ விருந்தினராய் வரவழைக்கப் பெற்றார். 1928 இறுதியில் உலகம் போற்றும் "ராமன் செயலை" ஆராய்ந்து வெளிப்படுத்தினார். அவ் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்ட், 'சர்' பட்டமளித்தது. அதே வருஷத்தில் சென்னையில் கூடிய இந்திய சாஸ்திர காங்கிரஸ் கூட்டத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இங்கிலாந்திலுள்ள பாரடே சொசைட்டி (Faraday Society) யார் ராமனை வரவழைத்துத் தன் புதிய ஆராய்ச்சியைப் பற்றி விவரித்துக் காட்டும்படி கேட்டுக்கொண்டனர். அங்கேயே பிஎச். டி. (Ph. D.) பட்டமும், கிலாஸ்கோ சர்வ கலாசாலையின் எல்எல். டி. (LL. D.) பட்டமும் பெற்றார். ரோமாபுரியி (Rome) லிருக்கும் இத்தாலியர் சாஸ்திர சங்கத்தின் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். இவ் வருடம் லண்டன் ராயல் சொசைட்டியின் ஹூஸ் (Hughes) தங்கப் பதக்கத்திற்குத் தகுதி யுடையவரானார். கடைசியாக (இதுவரையில்) உலகத்திலேயே சகல சன்மானங்களில் தலை சிறந்து விளங்கும் நோபல் வெகுமதியை * (8,000 பவுன்) யும் பெற்று இந்தியாவின் பெருமையை நிலை நிறுத்தினார்.

## அரிய குணங்களில் சில

இப்பொழுது சர். ராமனுக்கு வயது சுமார் 42 ஆகிறது. இவ் வயதிற்குள் அநேக நிபுணர்க ளடையக்கூடாத பட்டங்களையும், சன்மானங்களையும் அடைந்துள்ளார். "இந்தியர், அந்நிய நாடு சென்று

* 1913ல் சர். ரபீந்தர நாத் தாகூர் தன் கவித் திறமைக்கு நோபல் வெகுமதி பெற்றார். ஆசியாவில் அதுதான் முதல் தடவை. ராமன் பெற்றது சாஸ்திரத்தில் இதுதான் ஆசியாவில் முதல் தடவை.



ஆராய்ந்து பழக்கப்பட்டு வந்தாலன்றி விவேகம் விருத்தி யடையா" தென்னும் மொழியைப் பொய் மொழியென ராமன் நிரூபித்துவிட்டார். சர். ராமன் ஈகை, இரக்கம், பெருந் தன்மை, பெருமை யின்மை என்னும் அரிய குணங்களை அதிகமாய் அமையப் பெற்றவர். இவரிடத்தில் எத்தனையோ பேர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். ஒவ்வொருவருக்கும் விளங்காதவைகளை விளக்கிக் காட்டி உதவி செய்து வருகிறார். எவராயிருந்தாலும் வித்தியாச மில்லாமல் இனமாகச் சென்று அவரிடத்தில் ஆராய்ச்சிகள் செய்து வரலாம். அவரும் அநேகருக்குஉபகாரச் சம்பளங்கள் உதவியும், உதவச் செய்தும் வருகிறார்.

மேனாட்டுச் சாஸ்திரத்தில் அதிகமாய் அதிகாரம் பெற்றவராயிருந்தும் தன் தேசத்தின் கொள்கைகளைக் கைவிடவில்லை. சர் ராமன் தலையை மொட்டை யடித்து மத்தியில் சிறு குடுமி வைத்திருக்கிறார். எப்பொழுதும் வெள்ளைத் தலைப்பாகையை யணிந்திருப்பார். இவர் முதல் தடவை ஐரோப்பா தேசத்திற்குச் செல்லும் போது அரிசியும், பருப்பும் கொண்டு சென்றார். சங்கீதத்தில் செவி சாய்த்து ஆனந்தங் கொள்வார். எந்த விஷயத்தைப் பற்றியும், எந்த நேரத்திலும், எவ்வளவு நேரத்திற்கும் கேட்போர் மனது குதூகல மடையுமாறு இனிமையாய்ப் பேசுவார். தனக்கு எவ்வளவு கௌரவப் பட்டங்கள் ஒன்றின்மே லொன்றாகச் சுமந்தாலும், தான் எப்பொழுதும் போலச் சாதாரண C. V. ராமன் என்றிருக்கப் போவதாக, நோபல் வெகுமதியைப் பெற நவம்பர் மீ 18உ ஸ்வேடன் தேசத்திற்குப் பம்பாயை விட்டுப் புறப்படும்போது கூறினார். அப்பொழுதே, "இந்திய சாஸ்திரர்கள் தங்களுக்குச் சமயமும் உதவியும் ஏற்பட்டால் அநேக அற்புத ஆராய்ச்சிகள் செய்து நல்ல கீர்த்தியைப் பெறக்கூடும்," என்றார் சர் ராமன். சர். C. V. ராமன் அவர்களுக்கு தீர்க்க ஆயுளையும், தேக சௌக்கியத்தையும், சகல சம்பத்துக்களையும் மென்மேலும் பெருகி உண்டாகச் செய்து இன்னும் பல அரிய ஆராய்ச்சிக்கு ஆற்றலை யீந்து அதனால் இந்தியாவில் அநேக ராமன்கள் உண்டாக அருள்புரிய இறைவனை அஞ்சலி செய்வோமாக.

# பாரதியின் கவிதா சக்தி.

திரு. ஆர். வாசுதேவ சர்மா அவர்கள், எம். ஏ., பி. எல்.,

ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ! —பாரதி.

(சுதந்திர தாகம்)

எனது குருநாதரும், நண்பரும், தமிழ்த்தேவியின் தீர வீரரும், அருட்கவித் திறம் பெற்ற நற்புதல்வருமாகிய இப்பெரியார், விண்ணடெய்தி(1921-ம் வருஷம் செப்டம்பர்மீ 11உ) இதுவரை ஒன்பதரை ஆண்டுகள் ஆகப்போகின்றன. இந்நாளில், தமிழகத்தில் தமிழ் மக்கள் கூட்டம்கூடி "பாரதி நாள் விரதம்" மேற்கொள்வர். ஆகவே, யானும் என் நினைவிற்பட்ட இப்பெரியாரைப் பற்றிய குறிப்புகளை வரைந்து அப்பெரியார் ஞாபகத்தைப் போற்றுதல் மேற்கொள்ளுவேனாக.

நான் அதிக நாள் இப்பெரியாரை அறிந்து பழகக் கொடுத்து வைக்கவில்லை. 1908 முதலாகப் புதுவையிலே அஞ்ஞாத வாசம் பூண்டபொழுதும், மற்றை மறை முனிவர்-அரவிந்தர் விடுதிக்கு நம் கவியரசு வந்து போவதைக் கண்ணுற் கண்டிருந்தேனாயினும் இப்புலவர் பெருமானை நான் காண நேர்ந்தது, 1918-ம் வருடம் ஏப்ரல் மாதத்திலே தான்.

## பாரதி இல்லஞ் சென்றேன்

சென்னையிலே 1917-1918ன் இடையிலே "நாரதன்" என்றதொரு பத்திரிகையிலே தேசீய வியாசங்களும் பாரதியார் பாக்களும் அடிக்கடி வெளியாவது கண்டு நேரில் அக் காரியாலயஞ் சென்று அங்கு அப்பத்திரிகைத் தலைமை பூண்டு தொண்டு புரிந்த தமிழ்க் காந்தி ஸ்ரீ பரலி— சு. நெல்லையப்ப பிள்ளையின் நட்புரிமையைக் கொண்டேன். பின்பு நான் கல்லூரி மூடி ஏப்ரல் மாதம் வரவே என் சொந்த ஊராகிய புதுவைக்குத் திரும்பும் காலையில்



மேற்படி பிள்ளையவர்கள் என்னை ஸ்ரீ பாரதியாரை நேரில் கண்டு பாட்டுகள் எழுதித் தரும்படி சொல்ல வேண்டினர். இதை ஒரு சாக்காகக் கொண்டு என் மனத்துள்ள ஆவல் அலைப்ப மெள்ளப் பாரதியார் இல்லஞ் சென்றேன்.

எனக்கப்பொழுது வயது பத்தொன்பது முடிந்துகொண்டிருந்தது. கலாசாலையிலே படித்திருந்தேன். இரகசியப் போலீசார் தொந்தரவுகளைப் பற்றிய கதைகள் உண்மையானவையும் பிறவும் பல கேட்டிருந்தேன். மனதினுள்ளே தேச பக்தரைத் தரிசித்தல் வேண்டினும், பிற அவல எண்ணங்களாலும் சிந்தைகளாலும் என் எண்ணங்களை அடக்கியே வைத்திருந்தேன். இப்படிப்பட்ட எனது மனக் கலக்கத்தை நீங்களே பாவித்துக்கொள்ளலாம்.

## தேடி வந்திருக்கிறார்

கலவரமுள்ளவனாக, ஒருவித உள்ளெழுச்சியுடனும், அவர் வீட்டு வாயிற் கதவைத் திறந்து (வாயிற் கதவு சாத்தப்பட்டிருந்த போதிலும், தாழிடப்படவில்லை.) உள்ளே "ரேழியை"க் கடந்து உள் வாயிலையும் தாண்டித் தாழ்வாரத்திற்கு வந்தேன். அங்கே அவர் பெண் குழந்தை சகுந்தலை இருந்தார். அக் குழந்தை, பாரதியார் மேலிருப்பதாகக் கூறிவிட்டு "அப்பா!—யாரோ உங்களைத் தேடி வந்திருக்கிறார்கள்" என்று கூவினார்.

"யார்? யாராயிருந்தாலும் வரலாமென்று சொல்!" என்று ஒரு பிரதியுத்தரம் மேலிருந்து வந்தது.

அந்தக் குரலிலே ஒருவித விவரிக்க வொண்ணாத மேன்மையான ஒளியிருந்தது. சக்கிரவர்த்தி ஒருவன் எவ்வளவு சுவாதீனத்துடன் எவ்விதம் ஏதாவது கட்டளையிடுவானோ, அவ்வித சுவாதந்தர்யம் அதிலே தோன்றிற்று. ஒவ்வொரு பதமும் பூரணமாக, விழுங்கப்படாமல் கம்பீரத்துடன் உச்சரிக்கப்பட்டது. வெங்கலத் தொனி போன்ற சுத்தநாதம். அதிலே ஈசன் கருணை—அன்பு ஊற்றுக் கலந்திருந்தது.

## சாயபு போன்றவர்

மிகவும் பீதி கொண்டவனாக நான் மேன் மாடிக்குச் சென்றேன். அங்கே ஒருவர் நின்று கொண்டிருந்தார். மொட்டைத் தலையிலே சரிகை அங்கவஸ்திரமொன்று வெகு அலட்சியமாகச் சுற்றப்பட்டுப் பின் புறம் வால் தொங்கவிடப் பட்டிருந்த தலைப் பாகை. இரு புறம் மேல் நோக்குமாறு முறுக்கி விடப்பட்ட "கெய்ஸர்" மீசை. மழுங்கச் சிரைத்த மோவாய்க் கன்னம். தாம்பூலமிட்டுச் சிவந்த வாய். பால் நிற "ஷர்ட்டு". அதன்மீது கருப்புப் பட்டிலே ஒரு "வாஸ்கட்டு". முழந்தாளைச் சேரத் தொங்கும் படிமூலைக்கச்சம் வைத்துக் கட்டின வேஷ்டி. வேஷ்டியின் இருபுறமும், பின் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. என்னால் முழுதும் வருணிக்க முடியவில்லை. சாதாரண சாயபு என்று கொள்ளும் படியான உருவம்.

மாநிறம். கூரிய இரு விழிகள், தம் எதிர் நிற்போரை உள்ளத்தை ஊடுருவி அளந்தறியுஞ் சக்தி வாய்ந்தவை. நேராக இமையாது நின்றதொரு நோக்கம். சந்தோஷமும் களிப்பும் மிஞ்சிய வதனம். அவருடைய சிவந்த உதடும் வெள்ளிய பற்களும் நன்றாகத் தெரிந்தன. குனியாமல் குறுகாமல் நேராக நின்ற ஒய்யாரத் தோற்றம்.

## வெகு நாளாக ஆசை

அவர் அன்பு ஊற்றெடுக்கும் வதனத்தைக் கண்டும் என்னால் அவரை அறிந்துகொள்ள முடியவில்லை. நான் முன் கண்டிருந்ததற்கு இப்பொழுது வெகுவாக அவர் மாறிவிட்டார்.

"வாருங்கள்!" என்றார் அந்த நூதன மனுஷ்யர்
"நான் பாரதியாரைப் பார்க்க வந்தேன்!" என்றேன்.
கட கட வென்றொரு சிரிப்பு.
"நான்தான் பாரதி—"

எப்படித் தொடங்குவது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் எனக்கு ஒரு ஆதரவு இருந்தது.



"நெல்லையப்ப பிள்ளை—உங்கள் சிஷ்யர், என்னை அனுப்பினார்-" என்றேன்.

"நெல்லையப்பனா! நல்லது நல்லது வாருங்கள். ஊஞ்சலிலே உட்காருங்கள். உங்களை!!............

கேள்வி:—மறுபடியும் கண்களில் ஒருவித ஒளி உண்டாயிற்று. "தம்பி! உன்னை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன் போல இருக்கின்றதே."

பதில்:— "இருக்கலாம்..."

கே:— "ஒரு நிமிஷம் நில்—எங்கே— கோஷ் வீட்டிலே பார்த்தேனா?"—

ப:— "இருக்கலாம்"

"நீ சாஸ்திரியார் பிள்ளை வாசு அல்லவா? கலைமகளுக்குத் தமிழ் வியாசங்கள் எழுதுகிறாயல்லவா? மகா சந்தோஷம்! உட்கார். உன்னை வெகு நாளாகப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன்—வா!"

## ஒரே ஒரு சமாதானம்

இவ்விதம் எனக்கு இவர் நட்புக் கிடைத்தது. மேற் கண்ட சம்பாஷணையில் ஒருவித சாரமுமில்லையாயினும், தன்னைச் சுற்றி யார் யார் இருக்கிறார்களென்பதையும், யார் யார் என்ன என்ன செய்து வருகிறார்கள் என்பதையும் தினே தினே இலக்கிய உலகத்திலே எது எது நடந்தேறுகின்றதென்பதையும் அவர் விசால திருஷ்டியினாலே அறிந்து வைத்திருந்தார் என்பதைப் பலப்படுத்துமன்றோ? பத்தொன்பது வயதுச் சிறுவனாக இருந்த என்னைப் பற்றிப் புதுவையிலே சிறந்த தேசபக்த சிரோமணியெனவும், காளித் தாயின் வரப்புதல்வர் எனவும், சாரதா பீடம் எனவும் போற்றப் பட்டு வந்த ஒருவர், தெரிந்து கொள்வானேன்? ஆனால் ஒரு சமாதானம் மட்டும் நான் சொல்வேன்.

"காக்கை குருவி யெங்கள் ஜாதி" என்று அவர் ஜெயபேரிகைப் பாட்டிலே பாடினரன்றோ? இத்தகைய பேரன்பு பூண்ட பெரியாருக்கு உடன் வாழும் ஒரே ஊரிலே வசிக்கும் மற்றொரு தமிழன்—தமிழுழைப்பாளன் மீது பிரியமுண்டாதல் விந்தையோ?

## அவருடனேயே

நான் கல்லூரி விட்டுப் புதுவை வந்திருந்த விடுதலை நாட்கள் முழுமையும் இவருடனேயே கழித்தேன். காலையி லெழுந்து காலைக் கடன் முடித்துச் சிற்றுண்டி யருந்தியதும் அவர் வீட்டிற்குப் போய்விடுவேன். காலைத் தபாற் செய்திகளைச் சொல்லுவேன், அவர் எழுதச் சொல்லுமவற்றை எழுதுவேன். பத்தரைக்கு வீடு வருவேன். மறுபடி ஸ்நானம் சாப்பாடு முடித்துக் கொண்டு ஒரு மணிச் சுமாருக்குப் பாரதியார் வீடு செல்வேன். ஏதாவது செய்வேன். இரவு ஏழு எட்டுமணி வரை இருந்து விட்டுத் திரும்புவேன்.

இந்த நேரங்களிலே இவரும் இவர் புத்திரியுமாக எனக்கு இவர் பாடல்களைப் பாடிக் காட்டுவார்கள். அல்லது அவர், தான் புதிதாய் எழுதிய வியாசம் ஒன்றைப் படிப்பார். அல்லது சாயந்தரமானால் மூன்றும் மாடிக்குப் போவோம். அங்கே ஜமுக்காளத்தை விரித்துப் போட்டு உட்காருவோம்.

அங்குச் சற்றுத் தூரத்திலே,

"தென்னை மரக்கிளை மீதில்—அங்கோர்
செவ்வாய்ப் பசுங்கிளி கீச்சுட்டுப் பாயும்
சின்னஞ் சிறிய குருவி—அது
"ஜிவ்" வென்று விண்ணிடை யூசலிட்டேகும்
வன்னப் பருந்தோ ரிரண்டு—மெல்ல
வட்டமிட்டுப் பின்னெடுந் தொலை போகும்
பின்னர்த் தெருவிலோர் சேவல்—அதன்
பேச்சினிலே "சக்தி வேல்" என்று கூவும்"

இன்னமுஞ் சிறிது நேரஞ் சென்றாலோ,

"நண்ணி வருமணி யோசையும் பின்னங்கு
நாய்கள் குரைப்பதுவும்



என்னுமுன்னே யன்னக் காவடிப்பிச்சை யென்
றேங்கிடுவோன் குரலும்
வீதிக் கதவை யடைப்பதுங் கீழ்த்திசை
வீம்பிடு சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தர் குரலு
மதலையழுங் குரலும்"

## அநுபவித்தவரே அறிவார்

மண்ணுலகத்துப் பல்வகை நல் ஓசைகளைக் காற்றெனும் வானவன் கொண்டுவரவும், சந்திரிகை விண்ணகத்தே நிலவு பொழிவான் தோன்றவும், மிதமிஞ்சிய களிப் பெருக்கில் ஆழ்ந்தவராகத், தம் பாக்களில் ஒன்றைப் பாடிக் காட்டுவார். மேலே எடுத்துக் காட்டிய இரு பாக்கள், எவ்வளவு இயற்கைக்கு ஒத்திருந்தன வென்பதைப் புதுவையில் இவர் வாசஸ்தானமாக இருந்த ஈசுவரன் தர்ம ராஜா கோவில் வீதியிலே இவர் வீட்டு மூன்றும் மாடியிலே உட்கார்ந்து அநுபவித்தவர் மட்டுமே உண்மையில் அறிய முடியும்.

இவர் பாட்டுகளைப் பற்றிப் பேசப் புகுகையில், மற்றொரு விஷயம் என் நினைவிற்கு வருகிறது. இவர் காவியச் சுவை யாவற்றையும் மூவகைச் சுவைகளுள்ளே அடக்கினார். அவை பக்திரசம், வீரரசம், சிங்காரரசம் என்பனவாம். இவை மூன்றுமே இவர் கையாண்டவை. உற்று நோக்குவார்க்கு எல்லா வித ரசங்களும் இம் மூன்றினுள் அடங்கி யிருப்பது புலனாகும். பயானக ரசமும், பீபத்ஸமும், இவர் அறிந்தவ ரல்ல—ஒப்புக் கொண்டவ ரல்ல. காளி தேவியின் திருக்கோலமும், செவ்வொளி வானவன் சீர்த்தியும், கண்ணன் கருணையும், புத்த பிரான் சாந்தியும் இவரது இடையறாப் பக்திக் கனலையே ஊதின. அவற்றைக் கண்டு இவர் தூயவுள்ளம், வேறு விகாரம் அடையவில்லை. மீண்டும் மீண்டும் இவர் உள்ளம்

"சக்தி யென்று நேர மெல்லாம்
தமிழ்க் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி" நிற்பதையே நாடிற்று.

நம் புலவர் பெருமான், நவ ரசத்தையும் கைக் கொள்ளாது, மூவகைச் சுவைகளையே ஆண்டார் என முன் கூறினேன். என்றாலும் அநேகம் வடமொழிச் சுவை ஆராய்ச்சியாளர், தம் ஆராய்ச்சியின் முடிவில் ஒரேயொரு சுவையையே பெரிதெனக் கொண்டது போல், நம் புலவரும் 'பக்தி' ரசம் ஒன்றையே பெரிதெனக் கொண்டார் போலும்!

## பாட்டிசைப்பு

### அந்திப் பொழுது

இதுவரை காதற் புகழ்ச்சியைச் சிங்காரச் சுவையிலே கலந்து புகழ்ந்தார். பின் என்ன செய்தார்? அவரேபாடட்டும் இச் செய்தியை.

"ஆதலி னலவள் கையைப்—பற்றி அற்புத மென்றிரு கண்ணிடை யொற்றி, வேதனை யின்றி யிருந்தேன்—அவள் வீணைக் குரலிலோர் பாட்டிசைத் திட்டாள்"

முற்கூறிய பெற்றிகளுடையது காதல் பெண்மை என்று கவி ஓர்ந்தமையின் காதலின் பெருமையை எண்ணியளவிட்டு வியந்தவராய், மெய் மறந்து இருந்து இது விந்தை! இது விந்தை!! என வாய்விட்டுக் கூறினர். பின்னர்ப் பன்முறையும் அவ் வழகியாள் மலர்க் கரத்தைப் பற்றி ஈர்த்து, நறுமணங் கொண்டதொரு ரோஜாவினைக், கண்ணி லொற்றிக் கொள்வது போலக் கண்களிலே வைத்தொற்றிப் பரவசம் எய்தினர். மனத்தே இன்ப அலை தெறிப்ப, மெய் புளகிதமெய்த வீற்றிருக்கும் இவர் உள்ளத்திலே துன்புறுத்துங் கவலை, பயம் முதலியன எங்ஙனம் தோன்றும்? ஆகவே "வேதனை யின்றி யிருந்தார்"

"சுவை யிணைப்பு" என்றதொரு துவாராவாக நாம் இதனைச் சிறிது பரிசீலிப்போம். சிங்காரத்திலே கவி ஆரம்பித்தார். அது பின் அற்புதத்திலே கொண்டு விட்டது. அந்த அற்புதப் பொருளை அன்புடன் அணைத்தார். சாந்த ரசம் உடனே உதயமாயிற்று.

ஆனால் நம் கவிஞர் பெருமானின் கல்பனா சக்தியிலே சாந்தி நிலையோடு நின்றுவிட வில்லை. ரசபரிணமம் இதனிலும் மேம்



பட்டதொரு நிலையும் சுவையும் உள்ளதன்றோ? அதனை யெய்திய பின்னன்றோ இவருக்குச் சலியா நிலை ஏற்படும்; அது யாது?

"வேதனை யின்றி யிருந்தேன்;— அவள் வீணைக் குரலிலோர் பாட்டிசைத்திட்டாள்" என்பதுவேயாம்.

சாந்திரசம் மேலிட்டவராய் இன்பமுற்று இருமாந்திருந்த இப் புலவருக்குப் பக்கத்திருந்த அழகுத் தெய்வதம் ஒரு புதிய உண்மையைப் புலப்படுத்தியது. பக்தியே மிகப் பெரியது இதுகாறும் காதலினாலுயிர் வளரும், வீறு கொள்ளும் எனப் பிதற்றிய யாவும் பக்தியா லெய்தும் பெருமைகளாம். ஆனால் காதலின் பயனாக ஒரோ விடங்களி லிவை தோன்றுவது என்னெனில், காதலும் தெய்வீக சக்திவாய்ந்ததொரு உணர்ச்சி ஆகலின். ஆனால் உணர்ச்சிகளிலே மிக மிகக் கடைப்பட்டது. விலங்கிடையேயும் நிகழவல்ல தொன்றை மானுடம் வாய்ந் திருப்பதாகும். "நீ இன்பநுகர் வேட்கையைத் தவிர்த்து, ஞானபரணம் பூண்டு காதலுக்குப் பதிலாகப் பக்தியைக் கைக்கொண்டு, விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலும் மேவு பராசக்தியை மெய்யாலும் மனத்தாலும் வாயாலும் துதி கூறிப் போற்றிய பக்தியின் மிக்க பயனில்லை" என அவள் கூறினள் பக்திரசம் சிறந்ததற்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ?

### காதற் கோயில்

கோல மிட்டு விளக்கினை யேற்றிக்
கூடி நின்று பராசக்தி முன்னே
ஓல மிட்டுப் புகழ்ச்சிகள் சொல்வார்
உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்
ஞால முற்றும் பராசக்தி தோற்றம்
ஞான மென்றே விளக்கினை யேற்றி
கால முற்றுந் தொழுதிடல் வேண்டும்
காத லென்பதோர் கோயிலின் கண்ணே!

---

# பிலிப்பைன் மக்களின் உரிமைப் பேறு.

திரு. ஸி. எ. பெருமாள் அவர்கள்.

அந்நிய வரசாங்கத்தின் கீழ் துன்புறும் நாடுகளில் 'பிலிப்பைன்' தீவுகளும் ஒன்றெனப் படும். அமெரிக்காவி லுள்ள அரசியல் வாதிகளிற் பெரும் பான்மையோர், பிலிப்பைன் மக்கள் ஏற்கனவே தமது நாட்டுக் கதிபதிகளா யிருந்து உரிமையுடன் வாழ்ந்து வருகின்றார்களெனக் கூறுகின்றனர். ஆனால் அமெரிக்க அரசியல் தலைவரான மிர். ஹூவர் என்பார், சமீபத்தில் பிலிப்பைன் மக்களின் தீவிர எதிர்ப்புக்கு விரோதமாக "நிக்கோலாஸ் ரூஸ் வெல்ட்" (Nicholas Roosevelt) என்னும் ஓர் அமெரிக்க ஆசிரியரை அந் நாடுகளுக்கு உதவி கவர்னராக நியமித்துள்ளார். நிக்கோலாஸ் ரூஸ் வெல்ட் என்னும் அவ் வமெரிக்கர், டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஜாவாப் பிரதேசங்களில் சிறிது காலம் தாமதித்துப் பிலிப்பைன் தீவுகளைப் பற்றிய ஓர் நூலைத் தற்போது வெளியிட்டார். அந் நூலில் அவர், ஆசியாக்காரர்களை அரசாளுவதற்கு ஒரே மார்க்கம், "அவர்களது வயிற்றை நிறைய வைத்து மூளையை வெறுமையாக்கி விடுவதே" என்ற டச்சுக்காரர்களின் கொள்கையை வலியுறுத்திக் காட்டியிருக்கின்றார். இது போன்ற பல கொள்கைகளைப் பீடிகையாகக் கொண்டெழுதப் பெற்ற அந் நூலைப் பார்க்கின்றவர்கள், ஏன் பிலிப்பைன் மக்கள் அவர்களது உதவி கவர்னர் பதவியை யெதிர்த்தன ரென்று எளிதிலுணர்வார்கள். எவ்விதம் அம் மக்கள் எதிர்த்தும் முடிவில் யாதொரு பயனும் விளையவில்லை. ஏனென்றால் தங்களுக்கு விருப்பமான தலைவரொருவரைத் தெரிந்தெடுப்பதற்கு அவர்கள் இன்னும் உரிமை பெறவில்லை. அமெரிக்காவின் அதிகார தோரணையின் கீழிருக்கும் நாள் மட்டும் அவர்கள் அமெரிக்கர்களுக்கு அடிபணிந்தே யாகவேண்டு மென்பதே யன்றி வேறென்ன?



## பிலிப்பைன் தீவுகள்

பிலிப்பைன் தீவுகள், ஆசியாக் கண்டத்தின் தென் கிழக்குக் கரையிலிருந்து ஐந்நூறு மைல்களுக் கப்பால் பஸிபிக் மகா சமுத்திரத்தில் ஒரு தீவுக் கூட்டங்களாய்ச் சேர்ந்து பரந்து கிடக்கின்றன. இவைகளின் மொத்தப் பரப்பளவு 1,14,400 சதுர மைல். இவற்றில் மிகப் பெரிதாக விளங்கும் 8 தீவுகளின் நிலப்பரப்பு 1,03,288 சதுர மைலும், இவற்றோடு சேர்ந்து கிடக்கும் 7075 சிறு தீவுகள் 11,112 சதுர மைலும் கொண்டவை. இந் நாடுகளின் ஜனத்தொகை 1918-ம் வருடம் 1,03,14,310 மக்களாவார்கள். இவர்களில் பெரும் பான்மையோர் 'மலேயன்' வகுப்பைச் சேர்ந்தவர்கள். இம் மக்களில் 87,24,965 பேர்கள் ரோமன் கத்தோலிக் மதத்தைத் தழுவினவர்களும், 40,00,000 'அக்ளிப்பாயன்' என்ற மதத்தினரும், 2,00,000 புரோடஸ்டான்ட் கிறிஸ்தவர்களும், 4,43,037 முகமதியர்களும், 5,08,596 பல தெய்வ வணக்கக் காரர்களும், 24,263 புத்த மதத்தினரும், 5454 இதர பல மதம் தழுவினவர்களுமாவார்கள். இத் தீவுகளில் குடியேறி யிருக்கும் அந்நிய நாட்டு மக்களில் முக்கால் பகுதியினர் சீனாவைச் சேர்ந்தவர்கள். வெள்ளையர்களில் ஒரு பாதி மக்கள், அதாவது 6931 பேர் மட்டுமே அமெரிக்கர்கள். இந் நாடுகளுக்குத் தலை நகரம் லூஸன் (Luzon) என்னும் தீவிலிருக்கும் "மானிலா" (Manila) எனப்படுவது. இதன் ஜனத்தொகை (1928ல்) 3,24,522 மக்கள். மானிலா நகரத்திற்குப் போய்ச் சேர வேண்டுமானால் ஆசியாக் கரையிலிருந்து 30 மணி நேரமும், அமெரிக்காவி லிருந்து 21 நாட்களும் கப்பற் பிரயாணம் செய்ய வேண்டும். இந் நாடுகளிலிருந்து அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் சர்க்கரை, தேங்காய் எண்ணெய், மானிலாச்சணல், புகையிலை, வெட்டு மரம், தையல் துணிகள் முதலியனவாம். பிலிப்பைன் தீவுகளிலிருந்து இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த விலை (1927ல்) 46,67,22,255 ரூபாயும் இறக்குமதிப் பொருள்களின் விலை 46,75,54,413 ரூபாயுமாகும். இவ் வியாபாரத்தில் 100-க்கு 74 பங்கை அமெரிக்க ஐக்கிய நாடுகளே செய்து

வந்திருக்கின்றன. அதே வருடத்தில் அத் தீவுகளின் அரசாங்க வருமானம் 11,95,28,964 ரூபாய் எனப்படும்.

## பூர்வீக வரலாறு

பிலிப்பைன் தீவுகள், 1521-ம் ஆண்டு மாகெல்லன் (Magellan) என்னும் ஓர் போர்த்துக்கீய மாலுமியால் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் அத் தீவுகளில் வசித்து வந்த பூர்வீக ஜாதியார்களால் அவர் கொல்லப்பட்டுப் போகவே, 1565-ம் வருடம் ஸ்பெயின் தேசம் அத் தீவுகளைக் கைப்பற்றும் பொருட்டுப் படை யெடுத்துச் சென்றது. ஸ்பெயின் அம் முயற்சியில் வெற்றி யடைந்து, தனது இளவரசான பிலிப்பைனாஸ் (Filipinas) என்பவரின் பெயரால் அத் தீவுகளுக்கு நாமகரணமும் சூட்டியது. அன்று முதற் கொண்டே அந் நாடுகள் பிலிப்பைன் தீவுகளென அழைக்கப்படலாயிற்று. அப்பால் 1571-ம் வருடம் "லெகாஸ்பி" (Legaspi) என்னும் இராணுவ வீரரொருவர், மானிலா நகரத்தை முற்றுகை யிட்டு அத் தீவுகளின் பூர்வீக மக்கள் யாவரையும் தனக்கு அடி பணியச் செய்து, அந் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் 1762-ம் வருடம் மானிலா நகரம் ஆங்கிலேயர்களால் ஸ்பெயின் தேசத்தார்களிட மிருந்து பிடுங்கப்பட்டு 1764ல் அவர்களுக்கே திரும்பக் கொடுக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அத் தீவுகளில் அடிக்கடி கலவரங்களும் குழப்பங்களும் உண்டாகிக் கொண் டிருந்தன. அதே நூற்றாண்டி னிறுதியில் ஸ்பெயின் தேசத்தார்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் போர் ஆரம்பிக்கவே ஆகுயினல்டோ (Aguinaldo) என்ற அத் தீவின் சுதேசத் தலைவர் அங்கு பெருங் குழப்ப முண்டு பண்ணினார். ஸ்பெயின் அரசாங்கமும் அவரைப் பிடித்து நாடு கடத்தியது. அதன் பிறகு அவருக்குப் பின்னால் வந்த மற்றொரு தலைவர் அமெரிக்காவின் பஸிபிக் கடல் கப்பற் படைக்குத் தலைவரான "அட்மைறல் டேவே" (Admiral Dewey) என்பவருக்கு அனுகூலமாக விருக்க, 1898-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி அமெரிக்க தளபதியான "ஜெனரல் வெஸ்லி மெரிட்" (General Wesley Merrit) என்பவர் மானிலா வளை குடாவில் நின்ற ஸ்பெயின் படைகளை எதிர்த்து



வெற்றி பெற்றார். அப்பால் அதே வருடம் டிசம்பர் மாதம் 10-ம் தேதி முடிவு செய்த பாரிஸ் நகரத்து உடன்படிக்கையின் பிரகாரம் (Treaty of Paris of Dec 10. 1898) பிலிப்பைன் தீவுகள் யாவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமாக்கப் பட்டன.

## அமெரிக்க அரசாங்கம்

பிலிப்பைன் நாடுகள் தனது பூர்வீக நாகரீகத்திலோ, கலைக் ஞானங்களிலோ அல்லது இலக்கியச் செல்வங்களிலோ பெருமை கொள்ள முடியாது. ஸ்பெயின் தேசத்தார்கள் அந் நாட்டைக் கைப்பற்றிய 16-வது நூற்றாண்டு கால முதல் அத் தேச மக்களைக் கிறிஸ்து மதத்திற் சேர்த்துத் தமது நாட்டு நாகரீகத்தை அங்குப் பரவ வைத்தார்கள். அவர்களது அரசாங்கமும் 1898-ம் வருடத்தோடு முடிவுற்றது. பின்னர் அமெரிக்கர்கள் புகுந்ததும் அங்கு உடனேயே இராணுவ அரசாங்கத்தை நிலை நாட்டினார்கள். ஆனால் 1899-ம் வருடம் மே மாதம் இராணுவ அதிகாரிகள் ஸிவில் கோர்ட்டை ஏற்படுத்த ஆரம்பித்து ஜூலை மாதத்தில் நகர சபைகளையும் திறந்து வைத்தனர். எனவே அமெரிக்கர்களது அரசாங்கம் 1901-ம் வருட முதற்கொண்டே ஒழுங்குபெற அமைக்கப்படலாயிற்று.

பிலிப்பைன் நாடுகள் அமெரிக்காவி னாதீனத்திற் குட்பட்டு 30 வருடங்களே சென்றாலும் ஐரோப்பிய நாடுகளின் ஆட்சியிலிருந்து வரும் இதர அடிமை நாடுகளைவிட மிக விரைவில் அவைகள் பல துறைகளிலும் சீர் சிறந்து விளங்கக் காணலாம். அமெரிக்காவின் அரசியல் மகா சபையில் 1916-ம் வருடம் பிலிப்பைன் மக்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென நிறைவேறிய ஜோன்ஸ் சட்டத்தின் பிறகு அந் நாட்டு மக்கள் தமது அரசாங்கத்தில் பெருவாரியான பங்கெடுத்து வந்திருக்கின்றனர். பிலிப்பைன் தீவுகள் தற்போது 39 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகள் யாவும் அமெரிக்க வரசாங்கத்தாரால் நியமிக்கப் பெறும் கவர்னர் ஜெனரல்

ஒருவரால் ஆளப்பட்டு வருகின்றன. கவர்னர் ஜெனரலின் கீழ், ஓர் உதவி கவர்னரும் "ஆடிற்றர்" ஒருவரும் அமெரிக்க அரசாங்கத்தாலேயே நியமனம் பெறுகின்றனர். இவர்களன்றி, முப்பத்தொன்பது மாகாண கவர்னர்களும் சட்ட சபை மாகாணப் பிரதிநிதிகளும் அந் நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிலிப்பைன் மக்களே யாவார்கள். தனித்தனி பிரிக்கப்பட்டிருக்கும் 9 பெரிய மாகாணங்களுக்கு 5 பேர்கள் நியமனமும் 4 பேர் தேர்தலும் பெறுகிறார்கள். பிலிப்பைன் தேசத்து இராஜாங்க சபையின் 22 அங்கத்தினர்களில் இரண்டு பேர் கிறிஸ்தவரல்லாத தொகுதிக்கு நியமனம் பெறுவதைத் தவிர, இருபது பேர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பிரதிநிதி சபையிலுள்ள 86 அங்கத்தினருள்ளும், 9 பேர்கள் நியமிக்கப் படுவதைத் தவிர்த்து யாவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. அத் தேசத்துத் தலைமை நீதி மன்றத்தில் பிரதம நீதிபதியும் அவருக் குதவியா யிருக்கும் 8 நீதிபதிகளில் 3 பேர்களும் அந் நாட்டுச் சுதேசிகளே யாவர். அத் தீவுகளில் அமெரிக்க அரசாங்கம் ஆரம்பித்த கால முதற்கொண்டே பிலிப்பைனியர்கள் நகர பரிபாலனத்தில் பூரண சுதந்திரம் பெற்றுள்ளார்கள். அந் நாடுகளிலுள்ள 900 நகர சபைகளின் நிர்வாகம் முழுமையும், தேர்ந்தெடுக்கப் பெற்ற பிலிப்பைன் மக்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. 1928-ம் வருடத்தில் அந் நாடுகளெங்கும் அரசாங்க பதவிகளிலிருந்த 20,100 பேர்களில் 494 பேர்கள் மட்டுமே அமெரிக்கர்கள். இவர்களுள்ளும் 293 பேர்கள் கல்வி இலாகாவி லிருக்கின்றவர்கள். அத் தேசங்களின் பொது ஜன அமைதியைப் பாது காக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் போலீஸ் படை, 6331 பிலிப்பைன் மக்களைக் கொண்டதாகும். இப் படையில் உயர் பதவி வகித்து வருகிற 398 பேர்களில் 375 பேர்களும் அந் நாட்டுச் சுதேசிகளே யாவார்கள்.

## கல்வி முன்னேற்றம்

இதர நாடுகளில் காணப்படுவது போன்று பிலிப்பைன் நாடுகளிலும் பல பாஷைகள் பேசப்படுகின்றன. அவற்றில் மூன்று



முக்கிய பாஷைகளும், சிற்சில விடங்களில் வேறு மூன்று வித பாஷைகளும் வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. ஸ்பெயின் அரசாங்கம் நடைபெற்ற போது, அம் மக்கள் யாவரும் "ஸ்பானிஷ்" பாஷையைப் பயின்று வந்தனர். இப்பொழுது அமெரிக்க வரசாங்கம் முப்பது வருட காலமாக ஆங்கிலம் கற்றுக் கொடுத்து வந்ததினால் அம் மக்கள் யாவரும் ஸ்பானிஷ் பாஷையைப் புறக்கணித்து விட்டதுமன்றி தங்கள் தாய்ப் பாஷைகளையும் மறந்து விட்டு ஆங்கிலம் கற்பதில் அளவற்ற உற்சாகம் காட்டி வருகின்றனர். பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்க அரசாங்கம், கல்வி முன்னேற்றத்தில் தகுந்த முயற்சி எடுத்திருப்பது பாராட்டற் பாலதே. தற்போது அரசாங்கக் கலாசாலைகளில் படித்து வரும் மாணவர்கள், அத் தேசத்து ஜனத் தொகையில் 100-க்கு 9 பேர் வீதம் காணப்படுகின்றனர். இதர அடிமை நாடுகளிலோ, கொரியாவில் 100-க்கு 2 பேரும், டச்சு கிழக் கிந்தியத் தீவுகளில் 3 பேரும், பிரஞ்சு இண்டோ சைனாவில் ஒருவர் வீதமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பொதுவாகத் தற்காலம் பிலிப்பைன் தீவுகளில் 100-க்கு 60 பேர்களுக் கதிகமான மக்கள் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாவார்கள். அரசாங்கமும் தனது வருமானத்தில் 100-க்கு 28 வீதம் கல்வியின் பொருட்டுச் செலவு செய்து வருகின்றது.

## உரிமை யுணர்வு

இந் நிலைமை யுற்றிருக்கும் பிலிப்பைன் மக்களே பூரண சுயேச்சையை அவாவு நாடுகின்றனர். அந் நாடுகளில் இரண்டு வித அரசியல் கட்சிகளே, இருந்து வரக் காண்கிறோம். பெரும்பான்மையோர் கட்சி யென்றும், சிறு பான்மையோர் கட்சி யென்றும் இரு பிரிவினர்களே யுளர். இக் கட்சிகள் உள் நாட்டுச் சமூக விஷயங்களில் சிற்சில கருத்து வேற்றுமையை யிட்டு ஏற்பட்டதே யன்றி, உரிமை பெறும் விஷயத்தில் யாவரும் ஒரே கருத்துடையவர்களே. பிலிப்பைன் மக்கள் மலேயன் வகுப்பைச் சேர்ந்தவர்களாதலாலும், பிறப்பிலோ அல்லது சட்ட பூர்வமாகவோ அவர்கள் அமெரிக்கர்க ளென்று கருத முடியாததாலும், அம் மக்கள் பொருளாதார நிலையை யிட்டும், தேசீய கௌரவத்தைப் பொறுத்தும்,

கோருகின்ற சுயேச்சை, எங்கனும் நியாயமாகவே கருதப்பட்டு வருகிறது. எனவே பிலிப்பைன் மக்கள் சென்ற இருபது ஆண்டுகளாய் அமெரிக்காவின் ஆதீனத்தி லிருந்து பிரிந்து வாழ்வதற்கு ஒன்றுபோல் கிளர்ச்சி செய்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டிலும் ஆங்குள்ள சமூக மகா நாடுகள், அரசியல் மகா நாடுகள், பெண்கள் மகா நாடுகள், மாணவர் மகா நாடுகள், வியாபார சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், உத்தியோகஸ்தர்கள், ஜனப் பிரதிநிதிகள், பொருளாதார நிபுணர்கள், பண்டிதர்கள், பத்திரிகாசிரியர்கள் ஆகிய யாவரும் கூடிய விரைவில் சுயராஜ்யம் பெற வேண்டுமெனத் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்திற் கனுப்பித் தீவிர முயற்சி எடுத்துள்ளனர். இவைக ளத்தனையும் அமெரிக்க வரசாங்கம் இனி கவனியாதது போலிருக்க இயலாது. சில மாதங்களுக்கு முன்னுற் கூட மானிலா நகரத்தில் "பிலிப்பைன் பூரண சுதந்திர முதலாவது காங்கிரஸ்" கூடிய போதும், நாட்டின் பல பாகங்களினு மிருந்தும் 3000 பிரதிநிதிகளுக்கு மேல் விஜயம் செய்து உரிமைப் பேறு விஷயமாக நன்கு விவாதித்துத் தீர்மானமும் நிறைவேற்றினார்கள். எனவே அமெரிக்க வரசாங்கம், ஏக மனதாய் நிறைவேற்றிய அம் மக்களின் தீர்மானத்திற் பாராமுகமா யிருந்துவிட முடியா தென்பது உறுதி.

## அமெரிக்காவின் வாக்குறுதி

அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிலிப்பைன் மக்களுக்குச் சுதந்திரம் கொடுத்துதவ நியாயமாகவேகடமைப்பட்டுள்ளன வென்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்க வரசாங்கத்தின் இலட்சியம், பூரண சுதந்திரம் கொடுப்பதே யென அமெரிக்க அரசியல் தலைவர்க ளுள்ளும் ஒருவர் பின் ஒருவராய்க் கூறிவந் திருக்கின்றனர். அமெரிக்க ஜனாதிபதிகளான டாப்ட் (Daft) ரூஸ் வெல்ட் (Roosevelt) வில்ஸன் (Wilson) ஆகியவர்களும், பிலிப்பைன் சுதந்திரத்திற் கனுகூலமாகவே பேசியுள்ளார்கள். 1912-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வாஷிங்டன் நகரிலிருந்து ராயிட்டர் பத்திரிகைகளுக்குக் கொடுத்த தந்தியில், "டாக்டர் உட்ரோ வில்ஸன், ஸ்டாண்டன் என்னு மிடத்தில்



பேசிய போது, பிலிப்பைன் மக்களுக்கு வெகு சீக்கிரத்தில் கொடுக்கப்பட வேண்டிய சுதந்திரத்தை ஆதரிப்பதாகவும், ஆனால் அது சம்பந்தமாக அவர் கொண்டுள்ள கருத்துக்களை விவரமாகத் தெரிவிக்கும்படி கேட்ட பொழுது அவரது எண்ணங்களை வெளியிடுவதற்கு அவர் அப்பொழுது தயாராக வில்லை எனவும் கூறினார்." (Modern Review 1913 Mar·page 319) என்பதும் அறியத் தக்கது. அப்பால் 1916-ம் வருடம் "பிலிப்பைன் அரசாங்கத்தின் இலட்சியம் பூரண சுதந்திரம்" எனக் கொண்டு போன ஜோன்ஸ் சட்டத்தையும், அமெரிக்க ஐக்கிய நாட்டுக் காங்கிரஸ் மகா சபை அங்கீகரித்தது. ஜோன்ஸ் சட்டமாகிய இவ் வாக்குறுதி அமெரிக்க வரசாங்கத்தில் மாற்றப்படா திருக்கும் வரையில் அமெரிக்கா தனது தேசிய கௌரவத்தைக் காப்பாற்றும் பொருட்டு, தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட் டுள்ளது. 'இந் நிலைமையில் பிலிப்பைன் நாடுகளின் சுதந்திரத்தை யிட்டு அமெரிக்கத் தலைவர்களிடம் தற்போது ஏற்பட்டிருப்பது போன்ற வுணர்ச்சி எக் காலமும் ஏற்பட்டது கிடையா தென்றே சொல்லக் கேட்கிறோம். அமெரிக்காவின் மந்திராலோசனை சபையில், தற்பொழுது பிலிப்பைன் நாடுகளைப் பற்றிய 6 மசோதாக்கள் கொண்டு போகப்பட் டிருக்கின்றன. அவற்றில் பிலிப்பைன் சுயாட்சி சம்பந்தமாக மந்திராலோசனை சபை அங்கத்தினரான மிர். ஹாரிஹாஸ் என்பவரால் கொண்டு போகப்பட்டிருக்கும் மசோதா, மந்திராலோசனை சபையினரால் நியமிக்கப்பெற்ற தனிக் குழுவினர்களால் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

## ஹாவ்ஸ் மசோதா

ஹாஸ் மசோதா, பிலிப்பைன் மக்களுக்கு ஐந்து வருட அரசியற் பரீட்சையின் முடிவில் சுதந்திரம் நல்குவதாகும். இவ் வைந்து வருடங்களிலும் பிலிப்பைன் அமெரிக்க வியாபாரச் சுங்க வரித் திட்டங்களில் சிறுகச் சிறுக உரிமை யளிக்கப்படும். அமெரிக்காவில், பிலிப்பைன் நாடுகளுக்கு இக்கணமே யுரிமை யளித்து விட வேண்டுமெனக் கூறும் தலைவர்களுக்கும், சுதந்திரத்திற் கனுகூலமா யிருப்பது போல் நடித்துக், காலத்தைத் தாம்பின்றிக் கடத்திவரும்

ஏகாதிபத்திய ஆசை பிடித்த இதர சில தலைவர்களுக்கும் இடையில் சமரசமாக முடிவு செய்யக்கூடிய ஓர் திட்டத்தை இம் மசோதா வலியுறுத்துகின்றதெனக் கூறலாம். ஹாஸ் மசோதா, அரசாங்க வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பதற்கு ஏற்பட்டது மன்றி, நான்கு முக்கியமான விஷயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அதாவது (1) பிலிப்பைன் தீவுகளின் பூரண சுயேச்சைத் திட்டம் தயார் செய்தல். (2) அவ்விதம் தயார் செய்யப்பட்ட திட்டங்களைப் பலப்படுத்துவதோடு புதிய அரசியலிற் கவசியமான உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தல். (3) அமெரிக்காவுக்கும் பிலிப்பைன் தீவுகளுக்கும் அரசியல், பொருளாதாரம் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் தொடர்புகளை 5 வருட பரீட்சையில் சிறுகச் சிறுகக் குறைத்து வருதல். அப்பால் அந் நாடுகள் அடைந்த அனுபவ சாத்தியத்தைக் கொண்டு பூரண சுயேச்சை வழங்கல். (4) பரீட்சை கால முடிவில் பிலிப்பைன் மக்கள் அமெரிக்காவின் பிரிவினைக்கு ஒப்புக்கொள்வதா யிருந்தால் அத் தீவுகளில் அமெரிக்கா விட்டிருக்கும் மூலதனம் சொத்துக்கள் கப்பற் படைத்துறைமுகம் ஆகியவற்றிற்குத் தகுந்தவாறு உடன்படிக்கை செய்து கொள்ளல் என்பனவாகும்.

## சுதந்திர நிபந்தனைகள்

ஹாஸ் மசோதா, பிலிப்பைன் மக்களுக்கு 5 வருட பரீட்சையின் பிறகே யுரிமை வழங்குவதா யிருந்தாலும், அம் மசோதாவில் கூறப்பட்டிருக்கும் சில நிபந்தனைகள் இந்திய அரசியல் திட்டம் வகுக்கிறவர்களுக்கும், இந்தியாவின் உரிமைப் பேறு விஷயமாக பல கருத்துக்கள்கொண் டிருப்பவர்களுக்கும் பல அரிய போதனைகளைக் கொடுத்துதவு மெனத் தெரிவதால் அவற்றை அடியில் தருகிறோம்.

1. பிலிப்பைன் தேசத்து சட்ட சபை, சுயேச்சை அரசியல் திட்டம் வகுப்பதற்கான தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. அவ்வாறு அத் தலைவர்களால் வகுக்கப்பட்ட திட்டம், குடியரசு முறையைக் கொள்வதுடன் நிரந்தரமாகவும் சட்ட பூர்வமாகவும் சுயேச்சையாகவு மிருக்க வேண்டும்.



3. அத் திட்டத்தின் அரசியல் விதிகள் குடி ஜனங்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விசுவாசப் பிரமாணம் செய்து கொள்ள இடமளிக்க வேண்டும். மதாசாரங்களில் பூரண சுயேச்சை நல்க வேண்டும். அத் தீவுகளின் அந்நிய நாட்டுச் சம்பந்தங்கள் யாவும் அமெரிக்காவின் மேற்பார்வையில் இருக்க வேண்டும். சட்ட சபையில் நிறைவேறிய சட்டங்கள் யாவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் காங்கிரசுக்குத் தெரிவிப்பதோடு, காங்கிரஸ் அச் சட்டங்களை அவசியப்படும் வேளைகளில் விலக்குவதற்கான அதிகாரம் உடையதா யிருக்க வேண்டும். அத் தீவுகளின் அரசாங்கத்தை நிலை நிறுத்தும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் தகுந்த காலத்தில் தலையிட உரிமை பெற்றிருத்தல் வேண்டும். பிலிப்பைன் நாடுகளுக்கு அமெரிக்கர்களால் நியமிக்கப் பெறும் ஹைக் கமிஷனரின் முடிவுகளை பிலிப்பைன் மக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

4. அப் புதிய அரசியல் திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிலிப்பைன் மக்களின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவர்கள் அதனை அப்படியே ஒப்புக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ ஓட்டுரிமை பெற வேண்டும்.

5. அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம், அமெரிக்க ஐக்கிய நாட்டுக் காங்கிரஸ் முன்னிலையில் கொண்டு வரப்பட்டு அதன் அங்கீகாரம் பெறல் வேண்டும்.

6. காங்கிரஸ் அனுமதி கொடுத்து விட்டால், அத் திட்டம் அமெரிக்க அரசியல் தலைவரின் சம்மதம் பெற்றுப் பின்னர் அவரால் பிலிப்பைன் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பப்படல் வேண்டும். அப்பால் கவர்னர் ஜெனரல் உத்தியோகஸ்தர்களின் தேர்தல்களுக்கும் புதிய அரசாங்க நிர்வாக ஆரம்பத்திற்கும் அறிக்கை வெளியிடல் வேண்டும்.

7. இவ்விதம் அங்கீகாரம் பெற்றுப் புதிய அரசாங்கம் நிர்மாணிக்கப் பட்டதின் பின்னல் அமெரிக்காவுக்கும் பிலிப்பைன் நாடுகளுக்கும் இருந்துவரும் வியாபார சம்பந்தம் 5 வருட பரீட்சை காலத்தில் பின் வருமாறு ஏற்பட வேண்டும்.

முதல் வருட வியாபார சம்பந்தம் தற்போதுள்ள நிலைமையிலேயே நிற்க வேண்டும். இரண்டாவது வருடம் தற்போ திருக்கும் சுங்க வரியில் 100-க்கு 25 வீதம் அமெரிக்கா செய்து வரும் இறக்குமதி ஏற்றுமதிப் பொருள்கள் யாவற்றின் பேரிலும் அதிகப் படியாக வரி விதிக்கப்படல் வேண்டும். மூன்றாவது வருடம் அப் பொருள்களுக்கு 100-க்கு 50 பங்காக ஆக்கப்படல் வேண்டும். நான்காவது வருடத்தில் 100-க்கு 75 பங்காக உயர்த்தப்படல் வேண்டும். ஐந்தாவது வருடம் முழு வரியையும் அதாவது அந்நிய நாடுகளுக்கு விதித்திருப்பது போன்ற பூராச் சுங்க வரியையும் விதித்தல் வேண்டும்.

8. பூரண சுயேச்சை கொடுப்பதற்கு முன்னால், பிலிப்பைன் அரசாங்கம் அமெரிக்காவின் பஸிபிக் கடற் படை ஏற்படுத்துவதற்கவசியமான நிலங்களை அமெரிக்க அரசாங்கம் விலை கொடுத்து வாங்கவோ அல்லது அடமானத்திற்குப் பெறவோ தகுந்த நியதிகளை உண்டு பண்ணல் வேண்டும். அத்துடன் அமெரிக்கர்களின் சொத்துக்களையும் கடன்களையும் சரிப்படுத்துவதற்கான உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கும் ஹாஸ் மசோதா நிறைவேற்றப்பட்டு பிலிப்பைன் தீவுகள் பூரண சுயேச்சையைச் சமீப காலத்தில் பெற்று விடுமாயின், இதர ஐரோப்பிய நாடுகளின் ஏகாதிபத்திய அரசியலின் கீழிருந்து, எத்தனையோ நூற்றாண்டு காலமாய்த் துன்புற்று வருந்தும் கீழ் நாட்டு மக்கள், புதியதோர் ஊக்கமும் புத்துணர்வும் பெறுவார்க ளென்பது திண்ணம்.

# சென்னை பென்சில் பாக்டரி.

## (சுதேசக் கைத் தொழில் வளர்ச்சி)

திரு. என். வேங்கட ரமணன் அவர்கள்.

### முன்னுரை

இ காலத்தில் ஒரு நாடு முன்னேற்ற மடைய வேண்டுமானால் அந் நாட்டுச் சுதேசக் கைத் தொழில்கள் முதற்கண் வளர்ச்சி யடைய வேண்டும். இக் காலத்தைக் 'கைத் தொழில் யுகம்' என்றே பெரியோர் கூறுகின்றனர். இங்கிலாந்து, ஜர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்கள் இன்று உலகில் செல்வத்திற் சிறந்து, வலுத்த வல்லரசுகளாக முதன்மை யடைந்து விளங்குவதன் காரணம் யாது? அத் தேசங்கள் கைத் தொழில்களில் அடைந்துள்ள முன்னேற்றமே யல்லவா? நம மிந்திய நாடு, ஐரோப்பிய நாடுகள் பலவும் நாகரீகமற்ற நிலையில் இருந்து வந்த அக் காலத்திலேயே மேலான பல கைத் தொழில்களுக்குப் பெயர் பெற்றிருந்த தென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். நம் நாட்டுக் கைத் தொழிற் பொருள்களின் அருமை பெருமைகள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரிய வந்ததினின்றுமே, ஐரோப்பியர்கள் இந் நாட்டின் மீது கண்ணோட்டம் வைத்து இங்கு வரவும், இந் நாட்டைக் கைப்பற்றி ஆளவும் முற்பட்டனர். டக்கா மஸ்லின் போன்ற இந்தியக் கைத் தொழிற் பொருள்கள் சரித்திரப் பிரசித்தமானவை யன்றோ? பண்டைக் காலத்தில் அவ்வாறு கைத் தொழில்களிற் சிறந்திருந்த இந்தியா, நாளடைவில் காலத்திற் கேற்ப நவீன கைத் தொழில்கள் பல வற்றில் வளர்ச்சி யடைந்து வருவதற்கு மாறாக இருந்த கைத் தொழில்களிலும் பல வற்றைக் கைவிட்டு விட்டு, இன்று உணவுக்கும், உடைக்கும், அவசியமான பல பொருள்களுக்கும் பிற நாடுகளை எதிர் பார்க்க வேண்டிய நிலைமைக்

காளாகி யிருக்கிறது. அதற்குக் காரணங்கள் பல. அந்நிய அரசாங்கத்தாரின் அடக்கு முறைகளால், நம் கைத் தொழில்கள் அழிந்துபட்டதோடு கூட, நம்மவர்களின் அறிவின்மையாலும், தேசாபிமானக் குறைவாலும் நம் கைத் தொழில்களிற் பல குன்றின வென்பதையும் கூறியே யாகவேண்டும்.

## சுதேசி இயக்கம்

நம் நாட்டின் பொருளாதார நிலைமைகளையும், அவற்றின் ஏற்றத் தாழ்வுகளுக் குரிய காரணங்களையும் உணர்ந்த இந்திய தேசாபிமானப் பெருந் தகையாளர் பலர், சுமார் 25 வருடங்களாக நாட்டின் சுதேசியக் கிளர்ச்சியைத் தோன்றுவித்து வேலை செய்து வருகின்றனர். அவ் வியக்கத்தின் உண்மை நோக்கமானது, நமது நாட்டுக் கைத் தொழில்களை நம்மவர் ஆதரிக்க வேண்டு மென்பதும், இக் காலத்திற் குரிய பல நவீனக் கைத் தொழில்களை இந் நாட்டில் தோன்றுவித்து நடத்த முற்படல் வேண்டு மென்பதும், அவ் வழியே இந்தியாவின் பொருளாதார நிலைமையை வளர்த்து நாட்டின் வறுமையைக் களைய வேண்டு மென்பதும் ஆம். நம் நாட்டில் செய்து கொள்ளக் கூடிய சாதாரண பொருள்களுக்கும் கூட ஆண்டு தோறும் அயல் நாடுகளுக்குக் கோடிக் கணக்கான ரூபாய்களை வாரி யிறைத்துக்கொண் டிருக்கும் நம் நாட்டின் நிலையைக் கவனிக்கும் தேசாபிமானம் படைத்த எவரது உள்ளந்தான் கரைந் துருகாது நிற்கும்? ஒரு காலத்தில் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்படும் இந்தியத் துணிகளின் மீது இரட்டிப்பான வரிகளை விதித்தும், இந்தியாவின் துணிகளை வாங்குபவரை வாங்கி உடுப்பவரைத் தண்டித்தும் தங்கள் சுதேச நெசவுத் தொழிலை ஆங்கிலேயர்கள் காக்க முற்பட்டார்க ளென்றால் அவர்களின் சுதேசாபிமானத்திற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா? எனவே நாட்டுப் பற்றுடையார் ஒவ்வொருவரும் சுதேசக் கைத் தொழில்களை முதற்கண் ஆதரிக்க வேண்டுவது மிகவும் அவசியம். நம் நாட்டில் தோன்றிய சுதேசி இயக்கத்தின் பயனாய் ஆங்காங்கே பற்பல கைத் தொழில்கள் புதிது புதிதாகத் தோன்றுகின்றன வென்றாலும் அவைகட்குப் போதிய பாதுகாப்பும் பொது ஜன ஆதரவுங் கிடைக்கப் பெறாமல் அவற்றுள் பெரும்பா லானவை அழிந்து விடுகின்றன. இந்திய மக்



கள் சர்வ சாதாரணமாய் உபயோகிக்கும் நெருப்புக் குச்சிகள் அனைத்தும் இரண்டொரு வருடங்களுக்கு முன் வரையில் அயல் நாடுகளிலிருந்தே வந்துகொண் டிருந்தன. அதனால் நம் நாட்டினின்றும் அயல் நாடுகளைப் போயடைந்த செல்வம் அளவிட முடியாது. தேசாபிமானங் கொண்ட இந்தியர் சிலரது முயற்சியால் இன்று இந்தியாவில் ஆங்காங்கே நெருப்புக் குச்சித் தொழிற் சாலைகள் சில ஸ்தாபிக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. எனினும் இன்னும் பெருவாரியாக அயல் நாட்டுக் குச்சிகளே நாட்டில் உபயோகிக்கப் படுகின்றன. எனவே அத் தொழில் நம் நாட்டில் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டி யிருக்கிறது

## தொழிலின் அவசியம்

மேலே கண்டவாறு தேசத்தில் தோன்றிய சுதேசி இயக்கத்தின் விளைவுகளில் "சென்னை பென்சில் பாக்டரி"யும் ஒன்று என்று கூறுவதற்கு மிகவுஞ் சந்தோஷிக்கின்றோம் எழுதப் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் (படித்தவரே யன்று, சித்திரக்காரர் முதலிய பிறரும்) இக் காலத்தில் காகிதப் பென்சில்களை உபயோகிப்பது சர்வ சாதாரணமா யிருக்கிறது. 1923–24ம் ஆண்டில் 9,33,112 ரூ விலையுள்ள 30,48,990 டஜன் பென்சில்களும், 1924–25ம் ஆண்டில் 9,21,736 ரூ விலையுள்ள 26,89,183 டஜன் பென்சில்களும் அயல் நாடுகளி லிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி யாயின வெனத் தெரிகிறது. அவற்றில் சென்னை மாகாண மொன்றுக்கு மாத்திரம் மேலே கண்ட இரண்டு ஆண்டுகளிலும் முறையே 1,12,825 ரூ விலையுள்ள 2,75,602 டஜன் பென்சில்களும், 1,38,305 ரூ விலையுள்ள 3,82,927 டஜன் பென்சில்களும் இறக்குமதியா யிருக்கின்றன. இப் புள்ளி விபரங்களால் பென்சில் கைத் தொழில் நம் நாட்டுக்கு எவ்வளவு இன்றியமையாத தென்பது விளங்கலாம். பென்சில்களைச் செய்வதற்கு வேண்டிய மரம், அரக்கு, கிராபைட் முதலிய கலவைப் பொருள் முதலியன நம் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கும். அத் தொழிலிற் பயிற்சி பெற்றவர்களும் நம் நாட்டில் இருக்கின்றனர். அத் தொழிற் சாலைகளை ஸ்தாபிக்க வேண்டிய மூலதனமும் நம் மிடையில் உண்டு. பென்சில்களின் உபயோகமும் நாளுக்கு நாள் நம்மில் அதிக மடைந்து வருகிறது.

ஆகவே தொழிலை முன் வந்து ஸ்தாபிக்கும் உற்சாகமும், ஸ்தாபித்த தொழிலுக்குத் துணை புரிந்து அதை வளர்க்கும் உதார குணமும், அதை அபிமானத்தோடு ஆதரிக்கும் தேசப் பற்றும் நம் மிந்திய மக்களிடையில் உண்டாக வேண்டுவதே முக்கியம்.

## பாக்டரி ஸ்தாபனம்

முதற்கண் நம் சென்னை ராஜதானியில் இற்றைக்குச் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் பென்சில் தொழிற் சாலைகள் சில ஏற்பட்டன. அவற்றுள் முக்கியமானவை இரண்டு. அவையும் நாளடைவில் மிகவும் மெலிந்து போயின. அதனிடையில் ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. யுத்தத்தின் காரணமாக அயல் நாட்டு வியாபாரங்கள் தடைப்பட்டதால் உள் நாட்டில் கைத் தொழில்களை வளர்க்க வேண்டிய அவசியம் இன்றியமையாததாயிற்று. மகா யுத்தத்தால் உலகத்திற்கு நேர்ந்த நஷ்டங்கள் பல வாயினும், அதனால் விளைந்த நன்மைகளும் பல வுண்டு என்பதற்கு இதுவுமோர் உதாரணமாகும். எனவே யுத்த காலத்தில் 1914-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்னை மாகாண கவர்ன்மெண்ட் கைத் தொழில் இலாகா அதிகாரிகள், பென்சில் தொழில் கவனத்தைச் செலுத்தி, ஏற்கனவே இம் மாகாணத்தில் ஸ்தாபிக்கப் பெற்று மெலிந்தும் மறைந்தும் நின்ற இரண்டு ஸ்தாபனங்களையும் தாங்கள்வாங்கி, அவற்றிலிருந்த யந்திர சாதனங்க ளனைத்தையும் சென்னைக்குச் சேர்ப்பித்து, அங்கே ஒரு பென்சில் தொழிற் சாலையை ஸ்திரமாக ஏற்படுத்திச் சுமார் நான்கு வருடங்கள் வரையில் ௸ தொழிலை வெகு கவனத்துடன் நடத்தி, அதற்கு ஒரு விதத்தில் உயிர் கொடுத்து நிலை பெறச் செய்தனர். அவ் வளவில் ௸ யுத்தம் முடிந்து விட்டமையின் துரைத்தனத்தார் அத் தொழிற் சாலையின் மீது செலுத்திய கவனத்தைச் சிறிது தளர்த்திக் கொண்டு, அதைப் பொது ஜனங்களுக்கு விற்றுவிட முற்பட்டனர். அச் சமயத்தில், சென்னையில் வியாபாரத்தில் பெயர் போன மெஸ்ஸர்ஸ். பெருமாள் செட்டி கம்பெனியார்கள் அத் தொழிற் சாலையை வாங்க விரும்பினர். அதனால் அக் கம்பெனியார்கள் மற்றுஞ் சில கூட்டாளிகளின் துணை கொண்டு 1918-ம் ஆண்டில் துரைத்தனத்தாரிடத்திலிருந்து ௸ தொழிற் சாலையை விலைக்கு வாங்கித் தாமே அதை நடத்த முற்பட்ட-



னர். சின்னாட்களுக்குப் பிறகு ஏனைய கூட்டாளிகள் சிறிது பின்னடையவே, பெருமாள் செட்டிக் கம்பெனியார்களே ௸ கூட்டாளிகளின் பங்குகளையும் வாங்கிக் கொண்டு, தொழிற் சாலையின் முழு நிர்வாகத்தையும் தாமே மேற்கொண்டனர். இன்று அத் தொழிற் சாலை முழுதும் தேசிய ஸ்தாபனமாக விளங்குகிற தென்பதை யறிய யாரே சந்தோஷமடைய மாட்டார்கள்? பெருமாள் செட்டிக் கம்பெனிக்கு இப் பொழுது திருவாளர்களாகிய: வி. எதிராஜுலு செட்டியார், வி. திருவேங்கடத்தான் செட்டியார், ராவ் சாஹிப். ஸி. டி. ஆழ்வார் செட்டியார் ஆகியவர்களே பங்காளிக ளாவார்கள். அவர்களில் பின்னவர்கள் இருவரும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்குச் சென்று அங்கே நடை பெறும் தொழில்கள், வியாபாரங்கள், பாக்டரிகள் முதலியவற்றின் முறைகளையும், நுட்பங்களையும் நேரில் தெரிந்து வந்து தங்கள் ஸ்தாபனத்தைத் திறமையாக நடத்தி வருகின்றனர்.

## தொழிலின் முன்னேற்றம்

இன்று நம் நாட்டில் கடைகளில் விற்கப்படும் பென்சில்களில் "The Star oF India" (இந்திய நக்ஷத்திரம்) என்ற பெயர் பொறிக்கப் பெற்றுள்ள பென்சில்கள் யாவும் மேலே கண்ட சென்னை பென்சில் பாக்டரியில் தயாரிக்கப் பெற்றனவே யாகும். இப் பென்சில்கள் அயல் நாடுகளினின்றும் வரும் வேறெப் பென்சில்களுக்கும் குணத்திலும், தகுதியிலும் சிறிதுங் குறையாம லிருப்பதோடு, சில குணங்களில் அவற்றைவிட மேம்பட்டுங் காணப்படுகின்றன. இவ் வபிப்பிராயம் யாம் கூறியது மட்டுமன்று. தொழில் நிபுணர்களும், ஆராய்ச்சியாளர்களும், அநுபவ சாலிகளுமாகிய பல பெரியோர்கள் இவ் வுண்மையை ஒப்புக்கொண் டிருக்கின்றனர். இப் பென்சில்கள் அநேக பொருட் காட்சிகளில் மெடல்களும், சர்டிபிகேட்டுகளும் ஏராளமாகப் பெற்றிருக்கின்றன. சின்னாட்களுக்கு முன் சீமையில் நடைபெற்ற வெம்ப்ளிப் பொருட் காட்சியிலும் இந்தியாவின் சார்பாக இப் பென்சில்கள் ஒரு பெரிய மெடலைப் பெற்றிருக்கிற தென்றால் நாம் இவற்றைப் பற்றி அதிகம் புகழத் தேவை யில்லை. இப் பென்சில்களின் அருமையை யுணர்ந்தே இந்தியாவில் இந்தியா கவர்ன்

மென்டும், பரோடா, திருவாங்கூர், காஷ் மீரம் முதலிய சுதேச ராஜ்யங்களும் இப் பென்சில்களை உபயோகிக்கின்றன. பரோடா துரைத்தனத்தார் தங்கள் ஆபீசுகளில் இப் பென்சில்களையே உபயோகிக்க வேண்டுமென்று துரைத்தன கெஜட்டின் மூலமாக அறிக்கை வெளியிட் டிருக்கின்றனராம். ஆஸ்திரேலியா, நியூஜிலந்து முதலிய அயல் நாடுகளிலும் இப் பென்சில்கள் உபயோகிக்கப் படுகின்றன வென்பதைக் கேட்க எவ் விந்தியர் களிப்புறாம லிருப்பர்?

## நமது கடமை

சென்னை பென்சில் பாக்டரிக்குத் தலைமைத் தொழில் நிபுணராயிருப்பவர் திருவாளர். M. சுப்பா ராவ் டி. இ. இ. (டோக்கியோ) அவர்கள் ஆவர். அவர் இக் கால சாஸ்திரீயத் தொழில் முறை ஆராய்ச்சியில் பேரறிவு வாய்ந்த பெரியார். அவரது தலைமையின் கீழ் இப்போது சுமார் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளரோடு அத் தொழிற் சாலை நடை பெற்று வருகிறது. அங்கு சாதா கருப்பு, காபிங்கு, கலர்கள், டிராயிங் பென்சில் முதலிய பலவித பென்சில்கள் வெகு நயமாகவும், நாணயமாகவும் தயாரிக்கப் பெற்று வெகு சரசமாகவே விற்கப் படுகின்றன. இதுகாலை அங்கு தினந்தோறும் 50 குரோஸ் எனவே 600 டஜன் பென்சில்கள் மாத்திரம் தயாரிக்கப்படுகின்றன. நாட்டினரின் போதிய ஆதரவு ஏற்படுமாயின் அத் தொழிற் சாலை தினம் ஒன்றுக்கு 150 குரோஸ் பென்சில்களைச் செய்யக் கூடிய அவ்வளவு விரிவான சாதனங்களைக் கொண்டிருக்கிறது. இதைப் போன்ற பெரிய தொழிற் சாலை, ஜப்பான் தேசம் முழுவதிலும் கிடையாததென்று அறிஞர் கூறுகின்றனர். இவ்வளவு பெரிய தொழிற் சாலையை நடத்தி அதன் வழியே இந்தியக் கைத் தொழில் வளர்ச்சிக்கு ஓர் அஸ்திவாரமிட்ட பெருமாள் செட்டி கம்பெனியார்களின் பெருந் தகைமைக்கு இந்தியர்கள் நன்றி பாராட்ட வேண்டுவதோடு, ஒவ்வொருவரும் தின வாழ்க்கையில் சென்னை பென்சில் பாக்டரியில் தயாரிக்கப் பெற்ற "ஸ்டார் ஆப் இண்டியா" பென்சில்களையே வாங்கி உபயோகிக்க முற்பட்டு, நாட்டுக் கைத் தொழிலை ஆதரிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

வந்தே மாதரம்.

---

# இந்தியரின் முன்னேற்றம்.

திரு. A. நடேச பிள்ளை அவர்கள்.

நீர் வளம், நில வளம், மலை வளங்களிற் சிறந்தது நம் மிந்தியா தேசந்தான். அதனால் அன்னிய நாட்டார் இத் தேச விளை பொருள் முதலியன வற்றால் ஏராளமான இலாப மடைந்து வருகின்றார்கள்.

இவ் விந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக் குட்பட்ட பூமியின் விஸ்தீரணம் 10,94,300 சதுர மைல்; சுதேச மன்னர்களுக்குள்ளன 7,11,032 சதுர மைல். ஆக மொத்தம் இவ் விந்தியாவின் விஸ்தீரணம் 18,05,332 சதுர மைலாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக் குட்பட்ட கிராமங்கள் 5,00,088. சுதேச மன்னர்களுக்குச் சேரந்தமான கிராமங்கள் 1,87,893. ஆக மொத்தம் 6,87,981. பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் 1561 பட்டணங்களும், சுதேச மன்னர்களின் இராஜ்யத்தில் 755 பட்டணங்களும், ஆக மொத்தம் இவ் விந்தியாவில் 2316 பட்டணங்க ளிருக்கின்றன.

இந்தியாவின் ஜனசங்கை சென்ற 1921-ம் வருஷத்து சென்ஸஸ் கணக்கின்படி 31,89,42,400. இவர்களில் கிருஷித் தொழிலால் ஜீவனஞ் செய்பவர்கள் மட்டிலும் 22,40,00,000 பேர்களாவர். அதாவது 100-க்கு 71 பேர்கள் கிருஷித் தொழிலால் ஜீவனஞ் செய்பவர்களா யிருக்கிறார்கள். பண்டைய கால வழக்கப்படி கைத் தொழில் செய்பவர்கள் 100-க்கு 11 பேர்களென்றும், யந்திர சக்தியால் தொழில் செய்பவர்கள் 100-க்கு ஒருவரென்றும் கண்க்கெடுத் திருக்கிறார்கள். இக் கணக்கின்படி கிருஷி கைத் தொழில் செய்பவர்கள் 100-க்கு 82 பேர்கள் போக பாக்கி 18 பேர்கள் தான் இதர தொழில் செய்பவர்கள். கிருஷித் தொழில் செய்பவர்களும், கைத் தொழில் செய்பவர்களில் பெரும் பாலாரும் கிராமங்களில்

வசிப்பதால் இவர்களுக்குத் தக்க கல்வி கற்பித்து நவீன நாகரீகப்படி சாஸ்திரோக்தமாகக் கிருஷி கைத் தொழில்களைச் செய்யும்படி தேச பக்தர்கள் தகுந்த ஏற்பாடுகள் செய்தால் மட்டிலும் இவ் விந்திய வாசிகள் நன் னிலைமைக்கு வரமுடியுமே யன்றி வேறெந்த விதத்திலும் சுயாட்சி பெற முடியா தென்பது எனது சொந்த அபிப்பிராயம்.

இந்திய வாசிகளில் பெரும் பாலார் தங்களின் உடலை யுழைத்து வேலை செய்யாமல் சோம்பேரிகளா யிருப்பதாலும், இவர்களில் 100-க்கு 92 பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களா யிருப்பதாலும், தொழிற் கல்விச் சாலைகள் இவ் விந்தியாவில் மிகவும் சொற்பமா யிருப்பதாலும், நம் தேச விளை பொருள்களைக் கொண்டு நம் தேசத்தவர்கள் கைத் தொழில்கள் செய்து வாழ்க்கைக் கேற்ற பண்டங்கள் செய்யத் தெரிந்து கொள்ள முடியாமல் அவைகளை அன்னிய நாட்டாருக்கு விற்று அவர்களால் செய்யப்பட்ட சாமான்களைப் பதின்மடங்கான விலைக்கு வாங்கி வாங்கி வறுமையால் வாடி வருந்துகிறார்கள்.

இந்தியாவில் தொழில் செய்பவர்கள், அவர்களை யடுத்து யாதொரு தொழிலுஞ் செய்யாமல் ஜீவிப்பவர்கள் ஆகிய இவர்களின் விபரம் எடுத்துச் சொல்ல வேண்டியதற்காக இந்தியாவின் மொத்த ஜனசங்கையை 10,000 (பதினாயிர)மாக வைத்துக் கொண்டு பற்பல வகைத் தொழில் செய்பவர்களுக்கு வீதா சாரப்படி ஏற்படும் கணக்கு அடியில் விவரிக்கப்பட் டிருக்கிறது.

| | தொழில் விபரம். | மொத்த ஜன சங்கை. | வேலை செய்பவர்கள். | அவர்களை அடுத்துப் பிழைப்பவர்கள். |
|---|---|---|---|---|
| 1. | கிருஷித் தொழில் | 7298 | 3344 | 3954 |
| 2. | கைத் தொழில் | 1049 | 498 | 551 |
| 3. | வர்த்தகம் | 573 | 255 | 318 |
| 4. | ஏற்றுமதி இறக்குமதி | 137 | 62 | 75 |
| 5. | சுரங்கங்களில் வேலை செய்பவர்கள் | 17 | 11 | 6 |
| 6. | சாஸ்திரப்படி தொழில் செய்கிறவர்கள் | 159 | 66 | 93 |
| 7. | குடும்பங்களில் வேலை செய்பவர்கள் | 144 | 80 | 64 |
| 8. | பொது ஜன க்ஷேமங் களுக்கு ஊழியஞ் செய்பவர்கள் | 69 | 37 | 32 |
| 9. | சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் | 84 | 32 | 52 |
| 10. | சுகவாசிகள் | 15 | 6 | 9 |
| 11. | மேற்கண்ட வகுப்புகளில் சேராதவர்கள் | 351 | 188 | 163 |
| 12. | சோம்பேரி பிச்சை யெடுப்பவர்கள் | 104 | 58 | 46 |
| | ஆக | 10000 | 4637 | 5363 |



மேற்கண்டபடி இந்தியவாசிகளில் பெரும்பாலார் கிருஷித் தொழிலையே தங்களுக்கு ஜீவனார்த்தமாகக் கொண்டிருப்பதால் அதை நவீன நாகரீகப்படி செய்ய வேண்டியது அதி அவசியமாகும்.

இந்தியாவின் பூமியில் 100ல் 13 பாகந்தான் தற்போது சாகுபடியாகின்றன. அந் நிலத்தின் அளவு 22 கோடியே 60 லெட்சம் ஏக்கராகும். இதில் சுமார் 3 கோடி ஏக்கர் நிலந்தான் இரு போக சாகுபடியிலுள்ளது. மற்றவை யெல்லாம் ஒரே போகந்தான் சாகுபடியாகின்றன. பாக்கியாயுள்ள தரிசு நிலங்கள் 100-க்கு 87ல் பாதிக்கு மேற்பட்டவைகள் சாகுபடி செய்ய லாயக்கானவை யென்றும், தகுந்த முயற்சிகள் செய்தால் அவைகள் சாகுபடிக்குக் கொண்டுவரப் படலா மென்றும் கவர்ன்மெண்டு சர்வே உத்தியோகஸ்தர்களின் ரிப்போர்ட்டுகள் முதலியனவற்றால் தெரிகிறது. இத் தேசத்தில் எண்ணிறந்த நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் தரிசு கிடக்கும் போது, அன்னிய நாட்டார் நம் தேசத்து ஏழைகளை அடிமைகளைப் போல் விலைக்கு வாங்கி அக்கரை தேசங்களுக்குக் கொண்டு போய், மாடுகளைப் போல் வேலை வாங்கி அபரிமிதமான இலாபங்களை அடைந்து வருகிறார்கள். நம் தேச மலைப் பிரதேசங்களில் பலவற்றை ஆங்கிலேயர் கைப்பற்றி

நம் தேச ஏழைகளுக்குச் சொற்பக் கூலி கொடுத்துத் தகுந்த வேலை வாங்கி காப்பிக் கொட்டை தேயிலை முதலிய பயிர்கள் செய்து அள விறந்த செல்வங்களை அடைகிறார்கள்.

நம்மவர்களில் பெரும்பாலார் ஏழைகளா யிருந்தாலும் இவர்களுக்குள் ஒற்றுமை யேற்பட்டு விட்டால் கூட்டுப் பங்குகள் சேர்த்துத் தகுந்த மூலதனம் வைத்து மலைப் பிரதேச நிலங்களைத் தர்க்காஸ்து முதலான வழிகளில் பட்டாச் செய்து கொண்டு, தேயிலை, காப்பிக் கொட்டை, ரப்பர், ஏலக்காய் முதலிய பயிர்கள் செய்து தகுந்த இலாபங்களை அடையலாம். நஞ்செய் புஞ்செய் தோட்டக்கால் பயிர்கள் செய்யலாம். நம்மவர்கள் பண்டைக் கால வழக்கப்படி சாகுபடி முதலியன செய்கிறார்களேயன்றி நிலங்களுக்குத் தக்க எருக்கள் போடுவதில்லை. நிலங்களை வளப்படுத்துவதற்கு முக்கிய ஆதாரமாக வுள்ளன மூன்று. (1) வெடியுப்பு (Nitrogen) (2) சுண்ணாம்பு (Potsassium) (3) திருமுருகல் பாஷாணம் (Phosperus) அதாவது எலும்புகளிலுள்ள சத்து. சாகுபடி செய்யச் செய்ய நிலத்தின் சத்துக்கள் குறைவுபடு மாகையால் வருஷப் பிரதி வருஷம் தகுந்த எருக்கள் போட்டுவர வேண்டும். மீன் சக்கை, எலும்புத் தூள், மடித்த சாம்பல், பறவைகளின் எச்சம், சாணி, பிண்ணாக்கு முதலிய எருக்களைப் போட வேண்டும். பன்றி எருவில் மூன்று பாகமும், மீன் சக்கை ஒரு பாகமும், எலும்புத் தூள் இருபதி லொரு பாகமும் சேர்த்து எருத் தயாரித்து நஞ்செய் நிலங்களுக்குப் போட்டால் நல்ல மகசூல் கிடைக்கும்.

ஆற்று நீர், ஏரி ஜலம், மழை இவைகளை நம்பிச் சாகுபடி செய்வதில் சில காலங்களில் நஷ்டங்கள் உண்டாகு மாதலால், ஒவ்வொரு பயிரிடுங் குடிகளும் தங்கள் தங்கள் நிலத்தில் ஆழமான கிணறுகள் தோண்டி, ஆறு ஏரி மழைஜல மில்லாத காலங்களில் அந்தக் கிணற்றின் நீரைக் கொண்டு சாகுபடி செய்ய வேண்டும். யந்திர சக்தியாலும் மின்சார சக்தியாலும் தண்ணீர் இறைத்து இரு போக முப்போக சாகுபடிகள் செய்ய வேண்டும். இந்திய வாசிகள் பெரும்பாலும் உணவுப் பொருள்களை மட்டில் உற்பத்தி செய்கிறார்கள். திரவியம் ஜாஸ்தி கிடைக்கக்கூடிய பற்பல வகைப் பயிர்களை அன்னிய நாட்டார்



களைப் போல் செய்ய வேண்டும். மேலே சொன்னபடி கிருஷித் தொழில் செய்பவர்களின் வரும்படியைக் கொண்டு ஜீவிப்பவர்கள்; அவர்களுக்கு ஒன்றரைப் பங்கு அதிகமா யிருக்கிறார்கள். இவர்களில் வயோதிகர், பால்யர், நோயாளி ஆகிய இவர்கள் நாலிலொரு பாகமிருக்கலாம். மற்றவர்களும் அதாவது பெண் பிள்ளைகளும் கிருஷித் தொழிலைச் செய்ய வேண்டும். ஜர்மனி தேசத்து ஸ்திரீகளிற் பெரும்பாலார் ஆண் மக்களைப் போல் தேகத்தை யுழைத்து வேலை செய்து வருவதால் அவர்கள் நன்னிலைமையி லிருக்கிறார்கள்.

ஆங்கில நாட்டில் கிருஷித் தொழில் செய்பவர்கள் 100-க்கு 8 பேர்கள்தான். இத் தொழிலால் இவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களில் மூன்றி லொரு பாகத்தைத் தயாரித்துக் கொள்ளுகிறார்கள். அத் தேசம் கிருஷித் தொழிலுக்குத் தகுந்த பூமியல்ல வாதலால், அதற்கு மேல் உற்பத்தி செய்ய முடியவில்லை. அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்சில் 100-க்கு 32 பேர்களும், ஜர்மனியில் 100-க்கு 34 பேர்களும், பிரான்ஸில் 100-க்கு 40 பேர்களும் கிருஷித் தொழில் செய்து தங்கள் தேசத்தவர்களுக்கு வேண்டிய ஆகாராதிகளைத் தயாரித்துக் கொள்வதுடன் அன்னிய நாட்டவர்களுக்கும் அனுப்புகிறார்கள். ஆஸ்திரேலியா அமெரிக்கா தேசத்துப் பழங்களும், பிரான்ஸ் தேசத்து வாசனைத் திரவியங்களும் நம் தேசத்தில் ஏராளமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. அன்னிய நாட்டுச் சர்க்கரை நம் தேசத்தில் வருடம் 1-க்கு 16 கோடி ரூபாய்க்கும், மற்ற உணவுப் பொருள்கள் 6 கோடி ரூபாய்க்கும் நம் தேசத்தி லிறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இந்தியாவில் கிருஷித் தொழில் செய்பவர்கள் 100-க்கு 71 பேர்களிருந்தும் நாம் உண்ணும் பதார்த்தங்களை நம்மவர்கள் தயாரித்துக் கொள்ள முடியாமல் அவைகளுக்கு அன்னிய நாட்டாரை எதிர் பார்ப்பது மிகுந்த அவமானத்துக் கிடம் என்பதை நம்மவர்கள் உணர வேண்டும்.

கரும்புப் பயிர் செய்யக்கூடிய பூமிகள் தென்னிந்தியாவில் மிகுதியா யிருக்கின்றன. நம்மவர்களுக்குச் சாஸ்திரக் கல்வி சூன்யமா யிருப்பதால் கரும்புப் பயிர் செய்யும் விதங்களையும், ஜீனி சர்க்கரை செய்யும் முறைகளையும் தெரிந்து கொள்ள வில்லை. சவ்வரிசி

எதனால் செய்யப்படுகிற தென்பது அனேகருக்குத் தெரியா தென்று நினைக்கிறேன். மரவள்ளிக் கிழங்கின் மாவினால் சவ்வரிசியும், டேபாக் கியோ முதலியனவுஞ் செய்யப்படுகின்றன. மரவள்ளிக் கிழங்கு, மலைப் பிரதேசங்களிலும் இரு மண் நிலங்களிலும் மிகச் செழுமை யாகப் பயிராகும். இந்தப் பயிரை மிகுதியா யுண்டுபண்ணி சவ்வரிசி முதலியன செய்து நம் தேசத்தவர்களுக்குக் கொடுபட்டது போக மிகுதியை அன்னிய நாடுகளுக்கு அனுப்பித் தகுந்த இலாப மடைய லாம். பாலைக் கட்டியாக்கித் தூள் செய்யலாம். அத்துடன் ஜீனி, வாழைக் காயின் மா இம் மூன்றுஞ் சேர்ந்ததுதான் மெல்லின்ஸ் பூட் (Mellins food) என்று நம் நாடெங்கும் விற்கப்படுகிறது. இதை மிகச் சுலபமாகச் செய்து கொள்ளும் முறை தெரிந்து கொள்ள முடி யாமல் ஒன்றுக்குப் பதின்மடங்கான விலை கொடுத்து வாங்குகிறார்கள். பாலின் தூள், சோளத்தின் மா, ஜீனி இவைகள் சேர்ந்ததுதான் ஹார்லிக்ஸ் மால்டேட் மில்க் (Horlics malted milk) என்று நம் தேசமெங்கும் ஏராளமாய் விலை மாறப்படுகின்றன. நம் தேச சரக்கு களையே தனித் தனியாய் மிகச் சிறிய விலைக்கு வாங்கிப் போய் நம்ம வர்களிடத்திலேயே அதைத் திருப்பிப் பதின்மடங்கான விலைக்கு எத்தனையோ காலமாய் விற்பதை நம்மவர்கள் இதுவரை தெரிந்து கொள்ளா திருப்பது மிக மிக விசனிக்கத் தக்கதேயாகும்.

நம் மிந்தியவாசிகளில் 100-க்கு 11 பேர்கள் கைத் தொழில் செய்பவர்க ளென்றும், அவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பருத்தி பஞ்சுத் தொழில் செய்பவர்க ளென்றும் கணக்கெடுத் திருக்கிறார்கள். நமது உணவுப் பொருள்களுக்கு அடுத்தபடி அவசியமாக வேண்டியது நம் மானங் காக்கும் ஆடையே யாகையால் அது விஷயத்தைப் பற்றி யும் இங்கே சுருக்க வகையாகக் கூறுகிறேன்.

நம் மிந்திய வாசிகளுக்கு வருடம் 1-க்கு 169 கோடி ரூபாய் விலையுள்ள 447 கோடியே 90 லெட்சங் கெஜங் துணிகள் வேண்டியதா யிருக்கிறது. அவைகளில் சற்றேறக் குறைய நாலி லொரு பாகம் அதாவது 116 கோடி கெஜங் துணிகள் நம் தேசத்து நாட்டுத் தறி களில் நெய்யப்படுகின்றன. நம் தேச யந்திர சாலைகளில் வருடம் 1-க்கு 179 கோடி கெஜங் துணி அதாவது 100-க்கு 41 பாகம் நெய் யப்படுகின்றன. அன்னிய நாட்டுத் துணிகள் வருடம் 1-க்கு 152 கோடியே 90 லெட்சம் கெஜம் துணிகள் சுமார் 60 கோடி ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.



முற் காலங்களில் நம் தேசத் துணிகள் அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கு விற்பனையாகி வந்த கால மெல்லாம் போய்த் தற்காலம் நாமுடுத்திக் கொள்ளும் ஆடைக்கும் அன்னிய நாட்டாரை எதிர்பார்த் திருப்பது மிகவும் அவமானத்துக் கிடமென்பதை நம்ம வர்கள் இனியாயினும் உணரல் வேண்டும். பண்டைய கால வழக்கப் படி கதர்த் துணிகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டு மென்று மகாத்மா காந்தி யடிகளார் பெரும் முயற்சி செய்து வருவது உல கறிந்த விஷயம். எல்லோரும் கதிரால் நூற்றுத் தறியால் நெய்த சுத்தக் கதிர்த் துணியையே உடுத்துவ தென்றால், தற்போதுள்ள கதர் அபி விருத்தி நிலைமை அவ்வளவுக்கும் இடந் தருமென்று நினைக்க முடிய வில்லை. ஆகையால் நம் தேச யந்திர சாலைகளில் நெய்யப்பட்ட துணிகளையும், நம் தேச யந்திர சாலைகளில் நூற்கப்பட்ட நூலைக் கொண்டு நம் நாட்டுத் தறிகளில் நெய்யப்பட்ட ஆடைகளையும், நாம் உடுத்திக் கொள்ள வேண்டியதே யன்றி அன்னிய நாட்டுத் துணிகளை நமது கௌபீனத்துக்கும் உபயோகப்படுத்தக் கூடா தென்ற வீர வைராக்கியத்தை ஒவ்வொரு இந்தியனும் செய்து கொள்ளல் வேண் டும். இவ்வித வைராக்கிய மில்லாதவர்களைத் தேசத் துரோகிக ளென்று சொல்வது மிகையாகாது. இவ் விஷயத்தில் நம்மவர்களுக் குள் வைராக்கிய முண்டாய் விட்டால் இதுவே சுதந்திரம் பெறுவ தற்கு ஆணி வேராகும். இவ்விதக் கட்டுப்பாட்டினால் அன்னிய நாட்டார் நூல் நெசவு யந்திர சாலைகளை நம் மிந்தியாவில் ஏற்படுத்த லாம். அதனாலும் நம்மவர்களுக்கு நன்மைக ளுண்டாகுமே யன்றி வேறு தீமைக ளில்லை. யந்திர சாலைகளில் வேலை செய்பவர்கள் நம் தேசத்தவர்களாகவே யிருப்பார்கள். கூலி வேலை செய்பவர்களை அன் னிய நாடுகளினின்றும் தருவித்தால் அவர்களின் கூலி முதலியன ஜாஸ்தியாகி விடும். குறைந்த சம்பளத்துக்கு ஐரோப்பியர்கள் இத் தேசத்துக்கு வந்து குடியேறி விட்டால் அவர்கள் தங்களின் வரும்படி களை இத் தேசத்திலேயே செலவழிக்க வேண்டி வரும். எந்த விதத்தி

லும் நம்மவர்களுக்கு நன்மைகளுண்டு. ஐரோப்பியர் அமெரிக்கர் முதலிய அன்னிய நாட்டார் நம் தேசத்தில் ஸ்திரவாசஞ் செய்யும்படி நேரிட்டால் இவ் விந்தியர்களுக்குள்ளும் அவர்களுக்குள்ளும் கலப்பு விவாகங்கள் மிகுதியாகித் தனித் தனி ஜாதிகள் ஏற்படும். இவர்கள் கல்வி அறிவுகளிற் சிறந்தவர்களாகி நம் தேச நன்மைகளுக்குப் பாடுபடுவார்கள். நம் தேசத் திரவியங்களை அன்னிய நாட்டார் அபகரித்துப் போகாமல் நாம் பாதுகாக்க வேண்டியதே யன்றி நம்மை அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்ற நாம் கடமைப்பட் டிருக்கிறோம். எந்தத் தேசத்தாரிடத்திலும் எந்த ஜாதியா ரிடத்திலும் எக் காலத்திலும் நம்மவர்களுக்குத் துவேஷம் இருந்தது மில்லை; இனிமேலும் இருக்கப் போவது மில்லை.

இவ் வுலகத்தில் வருடம் 1-க்கு 5 கோடியே 80 ஆயிரம் டன் நிறையுள்ள பருத்தி உற்பத்தி செய்யப்படுவதாகவும், அவைகளில் ஐந்தி லொரு பாகம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் கணக்கெடுத் திருக்கிறார்கள். தற்காலம் உற்பத்தி செய்யப்படும் பஞ்சில் மூன்றி லிரண்டு பாகம் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம் தேச உணவுப் பொருள்களும், நம் தேசப் பஞ்சும் அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்படக் கூடாதென்றும், நம் தேசத்தவர்களுக்கு வேண்டியது போக எஞ்சியவற்றை ஏற்றுமதி செய்யப்படலா மென்றும் சட்ட திட்டங்கள் ஏற்படுத்தல் வேண்டும்.

நம் தேசத்தில் தற்காலம் சிற்சில வகைப் பருத்திகள்தான் பயிர் செய்கிறார்கள். உயர்ந்த தினுசு நூல் நூற்கக்கூடிய உயர்ந்த ஜாதி பருத்திப் பயிர் செய்ய வேண்டும். பூணூற் பருத்தி யென்றும் வேலிப் பருத்தி யென்றும் சொல்லும் பருத்தி இரு மண் நிலங்களில் நன்றாகப் பயிராகும். இது மரப் பருத்தி; இருபது வருஷங்களுக்கு மேற்பட்ட காலம்வரை இது அழியாதிருக்கும். தும்பைப் பூப் போன்ற வெண்மை நிறமுடையதாகவும் மிக வுறுதியுள்ளதாகவு மிருக்கும். பிராமணர்கள் இந்தப் பஞ்சினால் நூல் நூற்றுப் பூணூல் தயாரிப்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். இந்தப் பஞ்சினால் 200-ம் நம்பர் நூலும் நூற்கலாம்.



பருத்தி பயிர் செய்யக்கூடிய பூமிகள் அளவிறந்தன நம் தேசத்தில் தரிசாய்க் கிடக்கின்றன. மோட்டார்க் கலப்பைகளைக் கொண்டு உழுதும், யந்திர சக்தி, மின்சார சக்தி யிவைகளால் தண்ணீர் பாய்ச்சியும், இப் பருத்திப் பயிர் செய்தால் ஆங்கில நாட்டுக்கு நம் தேசப் பஞ்சு அனுப்பப்படும். லங்காஷெயர் ஆலைகளுக்கு அமெரிக்கா தேசப் பஞ்சு அனுப்பப்பட மாட்டாது. அதனால் நம்மவர்கள் அளவிறந்த இலாபங்களை அடையலாம்.

யந்திர சக்தியால் நூல் நூற்றல் நெய்தல் பஞ்செடுத்தல் முதலியன அன்னிய நாட்டார் செய்து இத் தேசத்துக்கு அனுப்பியதால் நம் தேசக் கைராட்டினங்களில் நூல் நூற்றல் கைத் தறிகளில் நெய்தல் இவை நிறுத்தப்பட்டு இந்தியவாசிகள் வறுமையால் வருந்த நேரிட்டது. யந்திரங்கள் செய்வதற்கு இரும்பும் நிலக்கரியும் வேண்டும். நம் தேசத்தில் அகப்படும் இரும்பு அமெரிக்கா, பிரான்ஸ் தேசங்களில் அகப்படும் இரும்பைவிட மிகுந்த சிலாக்கியமான தென்று கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட் டிருக்கும் ஜியோலாஜிகல் சர்வேயர்கள் கண்டுபிடித் திருக்கிறார்கள். (இந்தியன் ஜியோலாஜிகல் சர்வே கல்கத்தா 1922-ம் வருஷத்து வால்யம் 2-ம் பாகம் 2-ம் பக்கங்கள் 203–212) இவைகளைப் பார்க்க.

தற்காலம் வட இந்தியாவில் மட்டும் இரும்புச் சுரங்கங்க ளிருப்பதைக் கண்டு பிடித்து எடுத்து வருகிறார்கள். அஸ்தினாபுரத்துக்குச் சமீபமாயுள்ள ஓரிடத்தில் 100 அடிக்கு மேற்பட்ட இரும்புத் தூண் ஒன்று இருக்கிறது. அது பாண்டவர்களால் கட்டப்பட்ட இராஜசூயயாக மண்டபத்தின் தூணாக இருக்க வேண்டு மெனச் சிலர் சொல்லுகிறார்கள். இவ்வளவு பெரிய தூண் நம் இந்தியர்களால் செய்யப்பட் டிருப்பதால் இவ் விந்தியாவில் இரும்பு மிகுதியா யிருக்கின்ற தென்பது மிகத் தெளிவாய்த் தெரிகிறது. சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களில் நல்ல இரும்புகள் கிடைக்கும். வங்காள தேசத்தில் நிலக்கரி யிருக்கு மிடத்தைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். இரும்புள்ள விடத்தில் நிலக்கரியும், நிலக்கரி யுள்ள விடத்தில் இரும்பும் அகப்படு மென்று பூ தத்துவ சாஸ்திரங்களில் சொல்லப்பட் டிருக்கிறது அச் சாஸ்திரங்களில் மிகத் தேர்ச்சி பெற்றவர்கள் ஜர்மனியர்

களும், அமெரிக்கர்களுமாவர். நம்மவர்கள் கூட்டுப் பங்குகள் சேர்த்துத் தகுந்த கம்பெனிகள் ஏற்படுத்திக் கொண்டு அச் சாஸ்திரங்களில் மிகத் தேர்ச்சி யுடையவர்களைத் தருவித்து நம் தேசத்தில் நிலக்கரி, இரும்பு, மண்ணெண்ணை இருக்கு மிடங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நெல்லூர் ஜில்லாவில் அப்ரேக் (மைகா) அகப்படுகிறது. மதுரை ஜில்லா அகமலை, தாண்டிக்குடி மலை, வரிசை நாட்டு மலை இவைகளிலும் அப்ரேக் சுரங்கங்கள் பல இருக்கின்றன. அப்ரேக்குள்ள இடங்களில் வெள்ளியும் அகப்படும். காவிரி நதிக்குப் பொன்னி என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதனால் காவிரி உற்பத்தியாகு மிடங்களில் தங்கச் சுரங்கங்க ளிருக்கு மென்பதற்குச் சந்தேக மில்லை. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நதிக்குத் தாம்பிர பரணி என்ற பெயர் ஏற்பட்டிருப்பதால் அது உற்பத்தியாகு மிடங்களில் செம்பு மிகுதியாக அகப்படலாம். வரிசை நாட்டு மலையில் ஈயம் அகப்படுமெனத் தெரிகிறது. விசாக பட்டணம் ஜில்லாவில் கோகினூர் என்ற பெரிய வயிரம் கண்டு எடுக்கப்பட்டபடியால் அவ் விடங்களில் வயிரங்கள் அகப்படலாம். நிலக் கரியே அதிக நாட்பட்டால் வயிரமாகி விடுமென்று ரஸாயன சாஸ்திரிகள் கண்டு பிடித்து நிலக் கரியை உருக்கிப் போலி வயிரங்கள் உற்பத்தி செய்து வருகிறார்கள். இப் போலி வயிரம் செய்யும் விபரம் சினிமாவில்கூடக் காட்டுகிறார்கள். ராஜபுதனத்தில் செகப்பும், மலையாளத்தில் பச்சை கோமேதகம் ஆகிய இவைகளும் அகப்படுகின்றன. சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகா செவிட்டு ரெங்கன்பட்டி என்ற கிராமத்தில் செகப்பும் பச்சையும் அகப்படுவதாகக் கண்டு பிடித்து அந்த இடத்துக்குக் காவல்போட் டிருக்கிறார்கள்.

நமது காவியங்களாகிய பாரதம், பாகவதம், இராமாயணம், ஸ்காந்தம் இவைகளில் அளவிறந்த நவ ரெத்தினங்கள் பஞ்ச லோகங்கள் வர்ணிக்கப்பட் டிருப்பதால், அவைகள் இந்தியாவிலே இருக்குமென்பதற்குச் சந்தேக மில்லை. நம்மவர்கள் சாஸ்திரக் கல்வி கற்காமல் அடிமைத் தொழிற் கல்வியே கற்று அடிமைத் தொழில் செய்து ஜீவிப்பதால் இத் தேசத் துரோகிகளின் கண்களில் அகப்படக் கூடா



தென அவைகள் ஒழிந்துகொண் டிருக்கின்றன போலும்! நம்மவர்களுக்குத் தேச பக்தி–தெய்வ பக்தியேற்பட்டு, கிருஷி கைத் தொழில்களைக் கொண்டு ஜீவிக்க வேண்டும். அடிமைத் தொழில் செய்து ஜீவிப்பது அவமானம் என்பதை நம்மவர்க ளுணர்ந்து, கிருஷி கைத் தொழிற் சாஸ்திரங்களைச் சந்தேகமறக் கற்றுணர்ந்து இவ் விருவகைத் தொழில்களைக் கொண்டு ஜீவிப்பதுதான் புருஷத் தன்மை என்பதையுணரல் வேண்டும்.

ஆங்கில நாட்டு இரும்பும் நிலக்கரியும் விற்கப்படுவதற்காகவே நம் தேச மெங்கும் ரயில்வே ஏற்படுத்தி வருகிறார்கள். அந்த இரும்பும் நிலக்கரியும் நம் தேசத்தில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நம்மவர்கள் குபேர சம்பத் துடையவர்களாகி விடுவார்கள் என்பதில் சந்தேகம் யாது?

சென்ற 1928-29-ம் வருஷத்தில் மட்டும் 330 கோடி ரூபாய் விலையுள்ள சரக்குகள் இங்கிருந்து அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கின்றன. அவைகளில் கைத் தொழிலுக்கு உதவக் கூடிய சரக்குகள் 170 கோடி ரூபாய் விலை யுள்ளனவாகும். இவைகளில் முக்கால் பாகச் சரக்குகளைக் கொண்டு கைத் தொழில்கள் செய்தால் நம்மவர்களுக்கு அளவிறந்த இலாபங்கள் கிடைக்கும். 66,000 டன் தோலும், 6,81,000 டன் வளையல் மண்ணும் ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கின்றன. அவைகளைக் கொண்டு நம்மவர்கள் ஏன் கைத் தொழில்கள் செய்யக் கூடாது.

இவ் விந்தியாவில் கைத் தொழில், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஆகிய இம் மூவகைத் தொழில்களிலும் 100-க்கு 18 பேர்கள் தான் வேலை செய்கிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் 100-க்கு 45 பேர்களும், அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸில் 100-க்கு 50 பேர்களும், ஜர்மனியில் 100-க்கு 50 பேர்களும் அம் மூவகைத் தொழில்களையுஞ் செய்கிறார்கள். ஆகையால் நம்மவர்களில் பாதிப் பேர்களாவது அம் மூவகைத் தொழில்களையுஞ் செய்யும்படியாக நம்மவர்கள் தகுந்த முயற்சி செய்தல் வேண்டும்.

நம் இந்தியாவில் அன்னிய நாட்டாரின் மூலதனம் 800 கோடி ரூபாய்க்குமே லிருக்கின்றன. ரயில்வே கம்பெனிகளில் மட்டிலும் 10,93,975 பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 100-க்கு 60 பேருக்கு மேற்பட்டவர்கள் மாதம் 1-க்கு ரூ 20-க்கும் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்க ளாவர். நம் தேசத்தில் கிருஷித் தொழில் கைத் தொழில்கள் விருத்தி செய்யப்படும் பட்சத்தில் இவ்வளவு தணிந்த சம்பளத்துக்கு வேலை செய்ய மாட்டார்கள். பசியாரச் சாப்பிடும்படி யாகவாவது தனம் சம்பாதிப்பார்கள்.

நம் தேசத்தவர்களில் 100-க்கு 92 பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயும், பசியாரச் சாப்பிடுவதற்குத் தனஞ் சம்பாதிக்க வகையறியாதவர்களா யிருப்பது மன்னியில் அனேகர், குடிப் பழக்க முஞ் செய்து கொண்டு தாங்கள் நெற்றித் தண்ணீர் நிலத்தில் சொட்டச் சம்பாதித்த திரவியங்களில் சில வற்றைப் போதை வஸ்துக்கள் சாப்பிடுவதில் செலவழிக்கிறார்கள். சென்னை இராஜதானி வாசிகளில் 100-க்கு 33 பேர்கள் குடிப்பழக்க முடையவர்களெனக் கணக்கெடுத் திருக்கிறார்கள்.

யந்திர சக்தியால் கைத் தொழில்களைச் செய்ய இந்தியவாசிகளுக்குப் போதுமான திரவிய மில்லை. மின்சார சக்தியால் அவ் வேலைகளைச் செய்யத் தகுந்த சாதனங்க ளிருக்கின்றன. இந்தியாவில் மலையருவிகள் மிகுதியா யிருப்பதால் அவைகளினால் மின்சார சக்தி யுண்டு பண்ணிப் பற்பல வகைக் கைத் தொழில்களைச் செய்யலாம்.

அன்னிய நாட்டார்களைப் போல் நம்மவர்கள் கிருஷித் தொழில் கைத் தொழில்களைச் செய்வதற்கு நம்மவர்களுக்கு அகத்தியம் அச் சாஸ்திரக் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். ஆங்கிலத்திலுள்ள அச் சாஸ்திரங்களைக் கற்க வேண்டுமானால் நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் செலவாவது மன்னியில் அதிக வயது மாய்விடும். நம்மவர்களில் பெரும்பாலார் மிகுந்த ஏழைக ளாகையால் ஆங்கிலத்தி லுள்ளதைக் கற்பது எந்த விதத்திலும் சாத்தியமானதல்ல. ஆகையால் ஆங்கில முதலிய அன்னிய பாஷைகளிலுள்ள அந்தக் கிருஷி கைத் தொழில் சாஸ்திரங்களைத் தருவித்து அவரவர்களின் சுதேச பாஷைகளில் எளிய நடையில் மொழி பெயர்த்து 1-வது பார முதல் 6-வது பாரம் வரையிலுள்ள மாணுக்கர்கள் அவரவர்களின் புத்தி நுட்பங்களுக்குத் தக்கபடி வாசிக்கத் தக்கதாகப் பற்பல வகைப் புத்தகங்களாக அச்சிட்டு நம் தேசப் பள்ளிக்கூடங்கள் எங்கும் அவைகளைக் கட்டாயப் படிப்பாக்க வேண்டும். மற்றப் பாடங்களுடன் வாரம் 1-க்கு எட்டு மணி நேரம் அத் தொழிற் கல்வி கற்பிப்பது போதுமானது. இத் தொழிற் கல்வி கற்பிக்கப்படும் பட்சத்தில் மாணுக்கர்கள் தாங்கள் கற்றுத் தெரிந்து கொண்ட விஷயங்களைப் பரீட்சித்துப் பார்த்து அனுபோக முறைகளைக் கண்டு பிடித்து கிருஷி கைத் தொழில்களை நவீன நாகரீகப்படி செய்வார்கள். நாளடைவில் அன்னிய நாட்டார் செய்யும் சாமான்களை யெல்லாம் நம்மவர்களே செய்து விடுவார்கள். அன்னிய நாட்டு விளை பொருள்களும் கைத் தொழிற் சாமான்களும் நம் தேசத்தில் இறக்குமதி யெய்ய இடமே யிராது. நம்மவர்கள் குபேர சம்பத்துடையவர்களாகி விடுவார்கள். ஆகையால் தொழிற் கல்வி சுதேச பாஷைகளிற் கற்பிக்கத் தேசபக்த சிகாமணிகளைத் தக்க முயற்சி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

# சமரச வளர்ச்சி.

திரு. கு. ஆறுமுகம் அவர்கள்.

நமது தேசம், ஏனைய நாடுகளைப் போன்று எல்லா வகையிலும் மேன்மையுற வேண்டியதற்குச் செப்பனிட வேண்டிய பல வகைத் துறைகளிலே சமரசமும் ஒன்றென்பது உயரிய தலைவர்களும், உண்மை ஆராய்ச்சி யாளர்களும், உலகியல் அனுபவசாலிகளும் ஒப்புக் கொண்டதே யாகும். தற்போது இவ் வுலகின்மீது நம் மனம் பற்றுங்கால், சகோதர நேயமும் சமரசமும் சீர் குலைந்து காணப்படுதல் கண்கூடு. சமரச சன்மார்க்க

நிலை யாண்டும் பரவல் வேண்டு மென்பது எனது பெரும் வேட்கையாகும். சமரசம் என்பது மக்கள் வாழ்விலும் மன்னவர் ஆட்சியிலும் நுழையுமேல் உலகில் போர் ஏன்? புரட்சி ஏன்? பொல்லாங்கேன்? ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கு மிடையில் சமரசம் நிலவுதல் பெறின் சட்டம் எற்றுக்கு? சட்ட மன்றங்கள் தாம் எற்றுக்கு? அரசும் அமைச்சுந்தான் எதுக்கு? இவைகள் யாவும் இவ் வுலகிடை யின்னும் சமரசம் பரவா உண்மையை யன்றோ தெரிவிக்கின்றன?

இந்தியாவிலே சகோதர நேயத்தையும் சமதர்ம ஞானத்தையும் வளர்த்துப் பரிபாலனஞ் செய்யும் நோக்கத்தால் அமைக்கப்பட்ட உயரிய அன்பு மதங்களும் கலைகளும் ஸ்தாபனங்களுங்கூட நாளடைவில் சமரச வுணர்ச்சி கொண்டு நாட்டை நன் னிலைமையில் கொணரும் நோக்க மிழந்து பற்பல பிரிவுகளை வெடிக்கச் செய்து உருக் குலைவான செயல்களுக்கு இடமளித்து வருதல் பெரிதும் விசனிக்கத் தக்கதேயாகும். சமரச ஞான பூமியாம் இந்தியாவில், சமரச வுணர்வு கொண்டு சமரச அன்பு பெருகி சமரச ஆற்றல் நிறைந்து சமரசமே தெய்வீக அரசு செலுத்துவதற்குப் பதிலாகச் சமரசக் குலைவான கெடுமைகளே பெருகி விட்டன.

ஆயின் சமரசத்தைக் குறித்து இதுகாறும் எழுதுவாரில்லையா? எழுந்து பேசுவார்தா மில்லையா? எவரும் போதிப்பாரில்லையா? என்றால், உண்டு; அன்றும் உண்டு; இன்றும் உண்டு; என்றும் உண்டு. பல பெரியார் தம் வாழ்விற் பெரும் பகுதியையே யிதற்கெனச் செலவிட் டிருக்கின்றனர். மற்றும் சிலர் தம்மையும் தம் ஜீவியத்தையுமே வினியோகித் திருக்கின்றனர். சமரசம் பற்றி இன்று வரை யெழுந்த பேச்சுக்கள் எத்தனை? எழுத்துகள் எத்தனை? நூல்கள்தான் கணக்கேது? அவைகட்கோர் எல்லையு முளவோ? சமரசம் வாயிலாய்த் தோன்றிய பேச்சுக்களும் எழுத்துக்களும் ஒன்று சேர்க்கப்படின் அவைகள் மலையென நீண்டுயர்ந்தும் கடலென அகன்று பரந்தும் தென்படு மன்றோ?

இவ் வுலகிடைத் தோன்றிய அறவோரும் அறிஞரும் அருளாளர்களும் மக்களிடைச் சமரசம் பரவ வேண்டி, அறப் பெரும்



வாழ்வு தொடங்கல் வேண்டி அனேக மனேகம் ஆண்டுகள் தம் இனிய அற வுரைகளால் அறிவுறுத்தியும் தொண்டுகள் புரிந்தும் தூய்மைக் கடமைகள் காட்டியும் சென்றனர். சென்றும் என் செய்வது? இந் கொடுமை நாடு—இப் பொல்லா உலகம் இச் சமரசத்தில் சற்றேனும் மனம் பற்றுகின்றதா? செவி சாய்க்கின்றதா? சமரச வழி ஒழுகவோ அன்றிச் சமரசம் தம் நடை முறையில் வரவோ வேட்கையாதல் புரிகிறதா? ஏது! எத்தனையோ மகான்கள் எத்தனையோ நூல்கள் சமரசம் சமரசம் என்று பறை சாற்றியும் முழங்கியும் இத்துணை நாள் உலகிடைச் சமரசம் பரவாமைக்கு வழி யாது எனில், அதற்கு வழி பலபடக் காணலாம். அவைகள் யாவும் இங்கே வேண்டிய தில்லை யெனினும் அவற்றுள் முக்கிய ஒன்றையே யீண்டுக் கவனிப்போம்.

மக்கள்பால் என்றும் இருவித நீர்மைகளுண்டு. ஒன்று விலங்கு நீர்மை; பிறிதொன்று மனித நீர்மை. முன்னைய நீர்மை மேலிடும்பொழுது மனிதன் விலங் காகின்றான். பின்னையது பிரதிபலிக்கும்போது மனிதன் மனிதனாகின்றான். மனிதனை உண்மை மனிதனோடு ஒட்ட விடாதபடி பிரித்தாளுவது விலங் குணர்வு என்பதை யொப்புக் கொள்ளா திருப்பதற்கில்லை. அவ் விலங் குணர்வு பல பல வென்னலாம். அவைகளுள்ளே தலையாயது அழுக்காறு அவா வெகுளி யென்று உண்மை நூலுடையார்களும் ஒருங்கே ஒப்புக்கொண் டிருக்கின்றனர்.

இவ் அழுக்காறு அவா வெகுளியினை, மக்கள் ஒருவழி சூழ்ந்து மாய்க்க வழி கோலா திருக்கும் வரை இவைகள் மக்களை மாக்களாகவே வைத்துக்கொண் டிருக்கும். என்று மக்கள் வாழ்வு தொடங்கிற்றோ அதற்கடுத்து இவைகளும் மக்களிடை வாழ்வு தொடங்கின. இவைகள் மனிதன் வாழ்வாதிக ளனைத்தையும் உரு மாய்க்கின்றன. இவைகளைக் களையாது எத்துணைப் பணிகள் எத்துணைத் தொண்டுகள் எத்துணையோ அறங்கள் புரியப்படினும் அவைகள் யாவும் பயனற்றனவாயே முடியும். இவ் வழுக்காறு அவா வெகுளி யின்னாச் சொல் ஆகிய பேய்கள் நம்மை யின்னும் பிடித்து ஆட்டி அலைக்கா வண்ணம் செய்வதே மனித நீர்மையாகும். இவைகளைப்

பேயென்றும் நோயென்றும் விலங்கென்றும் பெரியா ருரைத்த மொழிகள் பற்பல வாகும்.

இவ் வழுக்காறு அவா வெகுளியாகிய விலங்குகளே மனிதனைச் சமரசத்தில் விழைதல் செய்து சமரசத்தில் செவி சாய்த்து சமரசத்தில் மனம் பற்றிச் சமரச சன்மார்க்கஞ் சார்ந்தவனாக விடுவதில்லை. மனிதன் இப் பேய்களால் தொடக்குண்டு இடர்ப்படும் வரை அவன் சமரச மனிதனோ சமரச ஞானியோ ஆதல் ஏது? சமரச சன்மார்க்கம் அடைந்து அவ் வழி யொழுகிய சமரச ஞானவான்க ளெல்லாம் சமரச பாக்கியம் பெற் றேகினர்! ஆனால் அவர்களின் கால் வழிகளாகிய நாமோ............

நாம் சமரசத்தைப் பற்றிச் சிந்திப்ப தென்றால் எழுதுவ தென்றால் பேசுவ தென்றால் எளிது எளிது. ஆனால் அதை ஒழுக்கத்தில் கலந்து படிந்து வரும்படி கொணர்வதுதான் அரிது அரிது. மனிதன் சமரசங் காட்டிப் பேசுவதினும் எழுதுவதினும் அதை நடையில் கொணர முயல்வதே அறிவுடைமை யாகும். அதற்கு மனிதன் என் செய்தல் வேண்டும்? எந் நெறி கடைப்பிடித்தல் வேண்டு மென்பதைச் சிந்தித்தலே முதற் கடமையாகும். மனிதன் சமரச வாழ்வுக்கு இடைஞ்சலா யுள்ள களைகளைக் கல்லிச் சிதைத் தெறிதல் வேண்டும். சிதைத் தழித்துவிட்டு அவ் வாழ்வில் தலைப்படல் வேண்டும். சமரச வாழ்வின் நேர் பகைவர்கள், பொறாமை பேராசை கடுஞ் சொல் கோபங்களே யாகும். " இக் கொடும் பகைவர்கள் எவர்களால் என்று அழிக்கப் படுவார்களோ அவர்கள் அன்றுதான் அன்புச் சமரச மாண்பை அடைந்து உய்வர். நாம் உய்ந்தேறும் பாதையிலே படிகளிலே எல்லாம் ஊடே புகுந்து நம்மைச் சருக்கி வரும் அக் கொடும் பகைவர்களைப் பற்றி நம் வள்ளுவர் பிரான் அறைந்து செல்லும் மொழிகள் இவ் வமயம் நம் ஞாபகம் வருகின்றன. அவைகளில் இரண்டொன்றை யீண்டுத் தருகின்றேன். பொறாமைக்கு அழுக்காறு என்னும் பெயருண்மை அன்பர்கள் தெரிவீர்கள். அதனை,

“அழுக்காறு என ஒருபாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்”



என்னும் உரையால், பொறாமையைப் பாவி யென்று ஞான பராம் வள்ளுவனாரே சபிப்பாரென்றால் அதன் கொடுமைகளை நாம் எவ்வா றளவிடுவது? மேலும் அவரே வெகுளியைப் பற்றி “சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி” என்கிறார். பேராசை லோபம் வஞ்சம் இவைகளாற் பற்றப் பட்டவர்களை இடும்பைகள் பற்றி ஒருபோதும் விடாது என்கிறார். தீமைக்குத் திறவுகோலாய் மனத்தகத்தே மறைந்து நின்று துன்பம் புரியும் இவைகளைக் களைந் தெறியும் ஆண்மையை மனிதன் பெறுவா னாயின் இதனடியாகத் தேசம் பாஷை மதம் என்னும் புற உலகிலே நிகழ்ந்து வரும் பிணக்குகளைப் பூசல்களைப் போர்களையும் படிப்படியாய்க் களைந்தெறியும் ஆண்மையையும் மனிதன் பெறலாம்.

நாடு மொழி சமயங்கள் பற்றி அழுக்காறு அவா வெகுளிப் பேய்கள் நம் நாட்டிலே மக்களை ஆட்சி புரிவது என்றென்றும் வழக்கமா யிருந்து வருகிறது. இவ் ஆட்சியின் பயனாய் நம் தாயகமும் தமிழகமும் கீழ் நோக்கி அதோ முகமே செல்கின்றன. இன்னும் எத்தனை ஆண்டுகள் வரை இவைகள் மக்களிடை நிலவுகிறதோ அதுவரை நம் நாடு மேன்மை பெறுவ தெங்ஙனமோ அறியோம். இவ் வகையே அவா வெகுளி அழுக்காறும் பகைவர்களால் அக வுலகும் புறவுலகும் சமரசங் கெட்டுப் போய்க்கொண் டிருக்கும் நிலைமையை யென்னென் றுரைப்பது?

தற்போது அழுக்கா றவா கோப வழிகள் பற்றி நாடு மொழி சமய வெறி கொண்டு இழைக்கப்படும் கொடுமைகள் ஒன்றிரண் டல்ல. எந் நாடும் எப் பதியும், தன்னுடு தன்பதி யென்னும் பற்றுப் பூணுமேல் அப் பற்றி னடியாகப் பிற நாட்டைத் துன்புறுத்தும் செயல்களே மிகுதியும் நிகழ்ந்து வருவது கண்கூடு. ஒரு நாட்டு மக்கள் தாம் பிறந்த நாட்டைத் தாய்போல் நேசிக்கலாம் பூசிக்கலாம். ஆனால் அந் நேசத்தை ஏனைய நாடுகளின் துன்பத்துக்கு உபயோகித்தல் மிக மிக வெறுக்கத் தக்கதேயாம்.

இத்தகைய இழிய கயமைக் குணங்கட் கெல்லாம் தாயகம், மேல் நாடு என்று கூறுதல் பிழையாகாது. மேல் நாட்டார் தன்னாட்டுப் பற்றை அயல் நாடுகளைச் சூறையாடுவதிலேயே பயன்

படுத்தி வந்தனர்; வருகின்றனர். தம் நாட்டின் மேன்மைக்கு இச்சித்து அண்டிய அடுத்த நாடுகளைக் கைப் பற்றுவதிலும் அவைகளின் வளங்கள் செல்வங்களைச் சுரண்டி வாருவதிலும் அவர்கள் மிகக் கைதேர்ந்தவர்கள். இவ்வாறு செய்தல் அற நெறியாம்; சட்ட மார்க்கமாம்; அரச நீதியாம். இம் மறச் செயலை அறச் செயலாய்க் கொள்வது எவ்வளவு பெரும் மடமை.

இம் மறச் செயல்களுக்கென ஒரு தனிச் சட்டங்கள் வகுத்து, மற வழிக்கு உடன்படாது வெறுத்து வரும் நிரபராதிகளாகிய மக்களை அச் சட்டங்கள் கொண்டு மாய்ப்பதுவும் வதைப்பதுவுந் தான் அன்னார் அறச் செயல் போலும். இக் கருத்துடையாரிடையே சமரசம் என்று தலைப்படுமோ அறியோம். ஒரு நாட்டுச் சகோதரரைத் தம் நாட்டுச் சகோதரராப் பாவிக்கும் நறுங் குணம் இவர்களிடைத் தோன்றுங்கால் நாடு, பூசலும் போரும் அற்று மக்கள் சமரச வாழ்வு பற்றி யொழுகி மேன்மை யுறுவர்.

நமது தாயகத்தும் சமரசம் தலைப்பட வேண்டுமேல் நம் நாட்டு வளர்ச்சி, மொழி வழர்ச்சி, சமய வளர்ச்சி குறித்து அமைக்கப்பட்ட மேலும் அமைக்கப்படும் ஸ்தாபனங்கள் கழகங்கள் நிலையங்கள் எல்லாம் சமரசமே கலந் தொளிர வேண்டும். தற்கால உலகியலை யொட்டி நூல்கள் எழுதி யுதவும் ஆராய்ச்சி யாளர்கள் அனைவரும் சமரசத்தின் வழியே அவைகளை எழுதி வெளியிடல் வேண்டும். பத்திராதிபர்க ளெல்லாம் சமரசத்தைப் பற்றிய சாராம்சமான கட்டுரைகள் பற்பலவாய் உலகுக் குதவல் வேண்டும். வாக்காளர்கள் எங்கும் நாடும் சமரசமும், சமயமும் சமரசமும், மொழியும் சமரசமும் என் றெடுத்துக் கொண்டு பொது மக்களிடை நல்லதோர் உணர்ச்சி யெழுமாறு சொற் பொழிவுகள் பல நிகழ்த்தல் வேண்டும். நாடு சீர்பெற வேண்டி வகுக்கப்படும் எல்லாத் துறைகளிலும் சமரசமும் கோயில் கொள்ளுமாறு வகுத்தமைத்தல் சாலவும் நன்றாகும்.

"தயை யுடையா ரெல்லாருஞ் சமரச சன் மார்க்கஞ்
சார்ந்தவரே யிங்கவர்கள் தம்மோடுங் கூடி
நயமுறுநல் லருள் நெறியிற் களித்துவிளை யாடி
நண்ணுகவென் றெனக் கிசைத்த நண்புறு சற்குருவே"

வடலூர் வள்ளலார்.

# பிரெடெரிக் நிஷேயனின் நீதி மொழிகள்.

**திரு. A. சுருளியாண்டி அவர்கள்.**

1. நீ எத்தன்மையனாக விழைகின்றனையோ, அத் தன்மையனாகவே உழைப்பாயாக.

2. பற்பல விஷயங்களை அரையுங் குறையுமா யறிந்திருப்பதைக் காட்டினும், ஒன்றையும் அறியாம லிருத்தல் மிகவும் மேன்மையாகும்.

3. உன் திறமைக்கேற்ற தொழிலை யேற்று, அதை நன்கு நிறைவேற்றுவா யாக.

4. பொய்மையை அறியாதவன் மெய்மையை யறியான்.

5. இழிய சிந்தனையினும், தீக் கருமம் சிறந்து.

6. உன் உள்ளம் உவந்து செய்யும் வேலையே, உனது லட்சியம், சக்தி, லீலை யென அறிவாயாக.

7. நெருங்கிய நட்பினால், ஒருவர் மற்றவரின் குற்றங் குறைகளையே கவனிக்க நேர்கின்றது.

8. பிறரை ஒறுக்க வேண்டுமென எண்ணுபவரை நம்பாதே.

9. பிறருக்கு ஹிதம் செய்யாத ஒருவன், தான் மாத்திரம் அன்னியரிட மிருந்து ஹிதத்தை யெதிர்ப் பார்த்தல் மதியீனமாகும்.

10. வேதனை, வருத்தம், வலி, இடையூறு, இடுக்கண்கள் வாயிலாகத்தான் மனிதன் ஞானமடைகிறான்.

11. வாழ்க்கையின் கொடூர அவதிகளெல்லாம், ஜீவன் சுகித்து இனித்திருக்கும் பொருட்டே யாகும்.

12. ஒருவன், வாழ்க்கையின் இன்னல்களை எம்மட்டும் சகிக்கின்றானோ, அம்மட்டும் அவனது மேன்மை ஒளிர்கின்றது.

13. கீழ்ப் படிதலைக் காட்டினும், பிறர் மீது ஆட்சி செலுத்தல் மிகக் கடினமானது.

14. தன் சுபாவத்தை யொட்டி நடவாதவனே பிறரால் ஆளப்படுகிறான்.

15. குற்றத்தைப் பார்க்கினும், தண்டனையே அதிகம் கெடுக்க வல்லது.

16. போலித் துக்கத்திற்குச் சிறந்த ஔஷதம், மெய்த் துக்கமே யாகும்.

17. இடுக்கண்களை எதிர்த் தடக்கிச் சுயத்வத்தை வெளியிடுதலே, சுதந்திரத்தின் அளவுகோ லாகும்.

18. மெய்த் தத்துவப் பிரச்னையாவது, எதினின்றும் விடுபட வேண்டு மென்பதன்று; எதற்காக விடுதலை பெற வேண்டு மென்பதே.

19. குழப்பத்தி னின்றே சீர்மை உண்டாகின்றது.

20. அறம் என்பது சன்மார்க்கத்தால் ஸ்தாபிக்கப் படுவதல்ல.

21. உனது செயல்களின் மூலம், உனது அக அமைப்பையும், போக்கையும் தெளிவிப்பாயாக.

22. நேர்மை அல்லது வாய்மையே ஜீவனின் தீபமாகும்.

23. எழிற்கலையே, கேவலப் பொருள்களை மறைக்கும் துகில்.

24. மௌட்டியத்தினால்தான் பற்பல ஜாதிகள், குடிகள் சீர்கெடுவது; ஆயின் சுய சுக போக சிந்தனை அல்லது தீய கருமங்களாலன்று.

25. குற்றஞ் செய்தல் அல்லது தவறுதல் எவரையும் களங்கப் படுத்துவ தில்லை; அது போன்றே, எத் தண்டனையும் எவரையும் தூய்மைப் படுத்துவது மில்லை; சீராக்குவது மில்லை.

26. மூட பக்தி எவ்வளவு தூரம் குறைகின்றதோ, அவ்வளவு தூரம் சற்குண நடத்தைகள் பெருகிப் பரவும்.

27. ஒரு கோயில் கட்டுதற்கு மற்றொரு கோயில் இடிக்கப் பட வேண்டும்.



28. சக்திகள் பெருகுகின்றன, இடையூறுகள் வெல்லப் பெறுகின்றன வென்னும் உணர்ச்சியே இன்பமாகும்.

29. மூட நம்பிக்கையே கொடுஞ் சிறைச்சாலை யாகும்.

30. பொருட் செல்வமே, சக்தியைச் சிதைக்கக் கூடிய கன்னக்கோல்.

31. பாபம், சிட்சை என்பவைகளே, மாந்தரைக் குழப்பி நிலை தவறச் செய்வன.

32. தான் தீயன் எனும் பாவனையை, ஒருவன் ஒழிப்பானாயின், தூய னாகலாம்.

33. மாந்தரிற் பெரும் பாலாரும் பிதற்றி அனுஷ்டித்து வரும் அற நெறிகள், கியாதி பெற்ற மருந்துகட்குச் சமமானவை; அதாவது, அவ் விரண்டிலும் முறைமை அல்லது ஒழுங்கில்லை. மெய்யான நற் பயனும் உண்டாவ தில்லை.

34. மெய் அல்லது சத்தியம் என்பது கண்டு பிடிக்கப் பெறுவதன்று; ஆனால், சிருஷ்டிக்கப் பெறுவதாம்.

35. அபரிமித சக்தியை விரும்பி, உழைத்துப் பெற்றுச் சுகித்திருத்தலே வாழ்க்கையின் உள்ளக் கருத்து.

36. இம்மைச் சுக போகங்கட்கும், மறுமை யின்பத்திற்கும் இன்றியமையாத சாதனம் சக்தியே.

37. தேகத் திறலை, மன வுறுதியை, ஆன்ம வொளியை விருத்தி செய்வதே மெய்யின் இலக்கணமும் இலக்கியமு மாகும்.

38. பயன், பொறாமை, பிரதி பழிச் சிந்தனைகளே தீமைக்கு மார்க்கம்.

39. பொருளும் பொருத்தமு மற்ற, ஆசார உபசாரங்களென்ற கொடிய வலையிற் சிக்கித் திக்கு முக்காடும் எளியர்களைத் திடப் படுத்தி, முன்னேற்றஞ் செய்விப்பதே மெய்ந் நெறி, தர்ம மார்க்கம்.

40. எழில் ததும்பப் பெற்ற தோற்றமே வாழ்க்கை; பூரண சக்தியின் உருவமே எழில்; ஆதலின், வாழ்க்கையின் பொருள் அல்லது லட்சியம் பூரண சக்தியே.

# பத்திரிகை உலகம்.

## மேல் நாடுகளும் கிறிஸ்து மதமும்

அமெரிக்காவி லிருந்து வெளி வரும் "அட்லாண்டிக் மந்த்லி," என்ற பத்திரிகையில் மிர். "எட்வின் ரேகர்ல்ஸ் எம்பிரீ," என்பவர், சீனாவிலுள்ள பீக்கிங் நாஷனல் யூனிவர்ஸிற்றியைச் சேர்ந்த புரொபஸர் "ஊ-ற்றிங்" என்னும் பேராசிரியர் மேல் நாடுகளைப் பற்றி பிரபலம் பொருந்திய பல ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள், சீனர்கள் ஆகிய பெரியார்கள் முன்னிலையில் வெளியிட்ட கருத்துக்களை "பீக்கிங் நகரத்தில் ஓர் சம்பாஷணை" என்பதாக ஓர் கட்டுரை வரைந்துள்ளனர். அதில் ஓர் பகுதி வருமாறு:—

கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள் போதிப்ப தென்ன, என அப் பேராசிரியர் வினவினர். அவைகள் சகோதர வாஞ்சை, பலாத்கார மொழித்தல், நாளைக் கென்ற நினைவை யகற்றல், பொருள் கூட்டி வைக்கும் முறையை விலக்கல், லௌகிக விஷயங்களை விட பாரமார்த்திக விஷயங்களில் அதிகமான கவனஞ் செலுத்தல் ஆகியவைகளை யன்றோ வலியுறுத்துகின்றன? இக் கருத்துக்களை இன்னும் அதிகமாகப் பலப்படுத்துவான் வேண்டி அவர் சுவிசேஷங்களி லிருந்து கிறிஸ்து மதப் போதகாசிரியரின் சிறந்த மொழிகளிற் சில வற்றையுங் கூறிப் போந்தார்.

"தேவன் ஆவியா யிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்—யோவான் IV. 24.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்-உன்னை ஒரு கன்னத்தி லறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு—லூக்கா. VI. 27-29.

"ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவரா யிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவரா யிருங்கள்—லூக்கா. VI 36.



"சாந்த குண முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்—மத்தேயு. V. 5.

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேகரித்து வைக்க வேண்டாம்—மத்தேயு. VI. 19.

"நீங்கள் குற்றவாளிக ளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிக ளென்று தீர்க்கா திருங்கள்—மத்தேயு. VII. 1.

"நீ பூரண சற்குணனா யிருக்க விரும்பினால், போய் உனக் குண்டானவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்—மத்தேயு. XIX. 21.

"நீங்களும் ஒருவரி லொருவர் அன்பா யிருங்கள் என்கின்ற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்—யோவான். XIII. 34.

"மனிதர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டு மென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்—லூக்கா. VI. 31.

ஆசிரியர் இவைகளைக் கூறிவிட்டு வினவியதாவது: "இப்போது எந்த நாடுகள் கிறிஸ்து மதத்தைப் பூரணமாகக் கைக்கொண் டிருக்கின்றன? ஐரோப்பிய நாடுகளா? அமெரிக்க நாடுகளா? உலக தேசங்கள் எல்லாவற்றிலும் இந் நாடுகள் அளவற்ற யுத்தப் பிரியமும் பொருளாசையும் நாளைக் கென்ற விஷயத்தில் மிகக் கவலையுடன் தயாரித்து வைத்திருக்கும் திட்டங்களும் கொண்டு விளங்குகின்றனவா? இல்லையா? அவைகள் உலக நாடுகளிலுள்ள பொக்கிஷங்கள் யாவற்றையும் வீண் பொருள்களில் மட்டு மன்றி, ஏனைய எல்லா விஷயங்களிலும் ஆதாயம் என்ற ஒரே கொள்கையை அனுசரித்து ஈடாகவும் அடமானமாகவும் உலக பொக்கிஷங்கள் யாவற்றையும் சேர்த்து வைத்திருக்கின்றன வன்றோ? மதத்திலும் ஜாதியிலும்கூடக் கர்வம் பிடித்து அத் தலைவர்கள் விளங்குவ தில்லையா?"

டாக்டர். "ஊ" அப்பால் கூறியதாவது: இவ்விதமான குணங்கள்—நாளைய விஷயத்தில் கவனம் வைத்தல், பொருள் சேர்த்துக் குவித்தல், யுத்தத்திற்குத் தயாராக விருத்தல், இதர மக்களை அலக்ஷியமாகப் பாவித்தல் ஆகியவை அததன் மட்டில் தீங்கற்றவைகளா யிருக்கலாம். நான் அவைகளைக் குறை கூறவும் தயாரா யில்லை. ஏனென்றால் மேல் நாடுகள் உலக தேசங்களை அடக்கி ஆளும் திறமை பெற்றது அவைகளாலேயே யாகும். ஆனால் இந்த நாடுகள் கைக்கொண் டிருக்கும் மத போதனைகளுக்கு அவைகள் முற்றிலும் விரோதமானவை என்பது மட்டும் உண்மை.

The "Atlantic Monthly," Boston.

## பூமி சாஸ்திரக் கல்வி

நமது மாணவர்களும் மற்றோர்களும் பூமி சாஸ்திரம் பயில்வதில் பூரண கருத்துச் செலுத்துவதே யில்லை. பூமி சாஸ்திரம் அரியதோர் கலை என்பதும் அதனால் எய்தும் பயன் மிகவுள தென்பதுவும் உற்றறிவாளர்களுக்கே புலப்படும். இதனையிட்டு "இந்தியன் எஜுகேட்டர்" என்னும் பத்திரிகை தனது டிசம்பர் வெளியீட்டில் எழுதுவது காண்க:—

நமது அண்டை அயலார்களிடம் சகிப்புத் தன்மை காட்டுவதற்கான அறிவு, பூமி சாஸ்திர மூலம் உண்டாகும். அத்துடன் அவ் வறிவு, முற்காலங்களில் ஒரு தேசம் இன்னொரு தேசத்தில் தகாத விதம் நடந்து கொள்வதற்குக் காரணமா யிருந்த இறுமாப்பு, எதேச்சை இவைகளை அழித்துவிடுந் தகையது. இந்த விதமான மானத சக்தியின் உதவியால் நாம் பெறுகிற ஜன சமூகப் பழக்கம் பிறிதொரு கூட்டத்தார்களின் இயல்புகளையும் நிலைகளையும் நமக்கு நன்குணர்த்துவது மன்றி, இவ் வுலகத்தின் ஒவ்வொரு பரமாணுவி னுள்ளும் மறைந்து கிடக்கும் இரகசியங்களை வெளிக் காட்டியும் தருவதாகும்.

இவ்விதம் நிகழ்வதற் கேதுவான நலன்களைப் பெற்றிருக்கும் பூமி சாஸ்திரம் நாம் இன்னும் சரியானவாறு உணர்ந்துகொள்ளாத ஓர் மகத்தான எதிர் காலத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. உலகமெங்கும் அதன் பேரில் ஏற்பட்டு வரும் அளவற்ற உற்சாகமும் அவ்வப்போது ஸ்தாபிக்கப் பெறுகின்ற பல சங்கங்களினாலும், கூட்டுறவு நிலையங்களினாலும் நன்கு வெளிப்படுகின்றது. இதனை நாம் சரிவர விளக்குவதற்கு 1896-ம் வருடத்திலேயே ஐரோப்பிய நாடுகளில் ஸ்தாபிக்கப்பெற்ற கழகங்கள் 83, ஆசியாப் பிரதேசங்களில் 6, வட அமெரிக்காவில் 6, தென் அமெரிக்காவில் 4, ஆப்பிரிக்காவில் 4, ஆஸ்திரேலியாவில் 4, ஆக மொத்தம் 107 பூமி சாஸ்திர சங்கங்கள் 50,000 அங்கத்தினர்களைப் பெற்றுத் திறம்பட வேலை செய்து வந்ததே போதிய சான்றாகும். தற்போதும் உலக மெங்கணும் பூமி சாஸ்திரத்தைப் பற்றி 200 பத்திரிகைகளுக்கு மேல் வெளியிடப் படுகின்றன. எனவே இதர கலைகளை விட பூமி சாஸ்திரக் கலைகளில் அதிகமான வுற்சாகம் எங்கணும் பரந்து வருகிறதென மிக எளிதில் சொல்லக்கூடும். ஏனென்றால் தற்கால உலக மக்களுக்கு அது மிகவும் உபயோகமா யிருந்து வருவதே அதற்குக் காரணமாகும். அதில் உற்சாக மில்லாத பண்டிதர்கள் இன்னும் அறியவேண்டிய



திருக்கிற வட துருவ தென் துருவ பாகங்கள், ஆசியா ஆப்பிரிக்கா தென் அமெரிக்காக் கண்டங்களின் மத்திய பாகங்கள் ஆகியவை சீக்கிரமாகக் கண்டுபிடிக்கப் பட்டுவிடு மென்றும், அப்பால் புவன சாஸ்திரிகளைக் கொண்டு ஆக வேண்டிய காரியம் ஒன்றுமிரா தென்றும் கூறுகின்றனர். ஆனால் அதற்கு நேர் மாறாக அவர்களது உண்மையான வேலை மனிதனுக்கும் அவன் வாழுகின்ற பூமிக்கு மிருந்துவரும் சம்பந்தத்தைக் குறித்து அதற்கப்பால்தான் ஆரம்பிக்கப்படும்.

அதன் பிறகே பூமி சாஸ்திர அறிவு ஒவ்வொரு துறைகளிலும் மிகப் பிரமாண்டமான வேலையாய் முடியும். அது மிகவும் கஷ்டமானது, உணர்வை எழுப்பவல்லது, முடிவற்றது—பெரும் பாரமுமானது. ஆனால் அதுவே மனோ மகிழ்ச்சியையும் மனோ ரம்மியத்தையும் அளிக்கவல்லது.

The "Indian Educator," Madura.

## அமெரிக்க மாணவர்கள்

அமெரிக்காவின் அபிவிருத்தி தற்கால வுலகிற்கு ஆச்சரியத்தையே விளைவித்து வருகிறது. அங்கு மக்களின் வாழ்க்கைத் துறைகள் யாவும் நாளுக்குநாள் மாறுதலடைந்து வருகின்றன. இதர எல்லாத் துறைகளையும் போன்று மாணவர்கள் வாழ்க்கையிலும் புதிய புதிய மாற்றங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி நவம்பர் மாதத்திய "நார்த் அமெரிக்கன் றெவ்யூ" என்ற பத்திரிகையில் வெளி வந்திருப்பதாவது:—

மனோ வுறுதியும் தன்னம்பிக்கையும் தோன்றிப் பணிவையும் பயத்தையும் அகற்றி விட்டன. இதற்குக் காரணங்களும் இல்லாமலில்லை. தற்காலத்தில் கலாசாலைகளுக்கு வரும் மாணவர்கள் புத்தகங்களில் காணப்படாத அரும் பெரும் விஷயங்களைப் பற்றி ஆச்சரியப்படத்தக்க விதம் அறிந் திருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்தவர்கள். அவர்கள் கண்டும் கேட்டும் இருக்கும் விஷயங்கள் அதிகமா யிருக்கின்றன. அவர்கள் தங்கள் வீடுகளி லிருக்கும் காலங்களில் உலக விஷயங்களைப் பற்றிய பொது அறிவை அனுபவ பூர்வமாகப் பெற்றிருப்பதால் சில வேளைகளில் அவர்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் தமது காலத்தில் அறிந்திராத தனிப்பட்ட அரிய விஷயங்களிலும் கூட அவர்களிற் சிலர் அவ் வாசிரியர்களை விட அதிகப்படியாகக் கற்றிருக்கின்றனர்.

மாணவர்கள் அதிசயப்படும் விதம் தமக்கு வேண்டிய எல்லாக் காரியங்களிலும் பூரணமாக விளங்குகின்றனர். ஐரோப்பிய நகரங்களில் அவர்களை நிராதரவாக விட்டுவிட்டாலும் பயப்பட வேண்டிய அவசியமே யில்லை. அவர்களுக்கு அங்கு ஒன்றுமே சம்பவியாது. ஸ்தானாதிபத்தி

யத்தை யிட்டுப் பெருங் குழப்பத்திற் குள்ளா யிருக்கும் சமூக விஷயங்களில் அவர்களைத் தலையிடச் செய்து ஒரு பக்கம் அமைதியுட னிருந்து நீங்கள் பார்ப்பீர்க ளாயின், அதில் அவர்கள் வெற்றி பெற்று வருவதைக் காண்பீர்கள். கடற் காற்றுப் பலமாக வீசியடிக்கும் கரை யோரங்களில் எங்கேயாவது தீப் பிடித்துக் கொள்ளட்டும்; அங்கும் அவர்கள் ஒரு மணி நேரத்தில் என்ன நடத்துகிறார்க ளெனப் பாருங்கள். பதினைந்து நிமிடங்களில் அவர்கள் இராணுவ வீரர்கள் போன்று ஒன்று சேர்ந்து ஆண்களும் பெண்களும் பழக்குவிக்கப் பெற்ற நெருப்புப் படையினர் போன்று, அணி வகுத்து விடப்பெற்ற நீரிறைக்கும் வீரர்களாகவும், அபாயத்தினின்று மீட்டு வரும் இரட்சகர்த்தாக்க ளாகவும் முன்னின்று உதவி, வருட முழுவதும் அத் துறையில் பழகி வந்தவர்களே போல் வெற்றியுடன் வெளியேறுகின்றனர். எவ்விதம் இவர்கள் இவைகளை எல்லாம் செய்து முடிக்கின்றனர்? இவைகளைப் பற்றி ஆச்சரியப் படுகிறவர்களே இவற்றினை யறிந்துகொள்க. தற்கால மாணவர்கள் உலகிடைப் புதிதாகப் பிறந்தவர்க ளன்று. அவர்களுக்கு அனுபவ விஷயங்களிலும் மெது புத்தி மதிகள் தேவையில்லை.

இவ்வித அனுபவ சாத்தியமான அறிவும் அசாத்தியமான காரியங்களைச் சரிவர நடத்திவைக்கும் திறனும் அவர்களிடம் நிறைந்திருப்பதாலேயே அவர்களது அச்சம் ஆசிரியர்களது முன்னிலையில் இயற்கையாகவே குறைந்துவிட்டது. அவர்கள் நிர்மலமான மனத்தோடும் மரியாதையோடும் தமது ஆசிரியர்களைச் சந்திக்கின்றனர். அவர்கள் தம்மை இழிவாகவோ அல்லது ஞானவான்க ளாகவோ ஆசிரியர்கள் முன்னால் உணர்வதுமில்லை. இவ் வுலகில் அவர்களும் ஆசிரியர்களாயிருக்க ஆசைப்படுவார்க ளென்பதுவும் நிச்சயமே. ஆனால் ஆசிரியர்களென்றழைக்கப் படுவோர்களது ஒருபாதி நிலைமையை வகிப்பதற்கு அவர்கள் இக் கணமே தயாரா யிருக்கின்றனர். இவ்வித நிலையில் இருப்பதாலேயே அவர்கள் ஆசிரியர்களின் முன்பு இவ்வாறு நடந்து கொள்ளுகின்றனர். எனவே தற்காலக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு மிடையில் ஒருவரோ டொருவர் தாம் பெற்ற அறிவைக் கொடுத்தும் வாங்கியும் வருகின்ற ஓர் தனி நிலை தற்போது ஏற்பட்டு வருகிறது. இந்நிலை இருபது வருடங்களுக்கு முன்னால் சிறிது ஆச்சரியத்தையே விளைவிக்கும் தகையது.

The "North American Review," New York.

## விவசாயப் பெருக்கும் வியாபாரக் குறைவும்

அமெரிக்காவிலுள்ள "கார்னல்," பல்கலைக் கழகத்தில் இருபத்தொரு நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து உலக மெங்குமுள்ள பொருளாதாரச் சீர்கேடு குறித்துச், சென்ற ஆகஸ்ட் மாத



இறுதியில் ஓர் மகாநாடு கூட்டினர். அம் மகாநாட்டில் "விவசாயத்தின் பெருமிதம்" அதாவது விவசாயப் பொருள்களின் வரை கடந்த உற்பத்தியைப் பற்றிப் பொருளாதாரப் பண்டிதர்களுக்குள் பெரும் விவாதம் கிளத்தப்பட்டது. உற்பத்திக்குத் தகுந்தவாறு விற்பனை செய்வதற்கு உலக தேசங்களின் உள் நாட்டு நிலைகளும் அரசியல் சம்பந்தமாகச் சமாதான மின்றி யிருப்பதால், பொருள் மலிந்த நாடுகளிலும் பஞ்சம் புகுந்து கொள்ளுவதற்கு ஏதுவாகின்றதென அபிப்பிராயப் பட்டனர். உண்மையில் பொருள் மலிவைப் பற்றிப் பேசிய அவர்கள் பிற நாடுகளில் பொருளின்றி மக்கள் வயது காய்ந்து வாடுவதையும் அறிய முயல்வது நன்றாகும். இது குறித்து "சிறக்யூஸ்," பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மிர். 'சாமியல் கியாஹன்' என்பவர் 'கரண்ட் ஹிஸ்ற்றி' என்ற பத்திரிகையில் எழுதுவது கவனிக்கத் தக்கது:—

மகாநாட்டின் சாஸ்திரீய நிலை எதிர் மாறான விஷயங்களால் மறைபடவுமில்லை. விவசாய சாஸ்திரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த பண்டிதர்கள் பலரால் தயார் செய்யப் பெற்ற அரிய உபந்நியாசங்கள் பல வாசிக்கப்பட்டன. ஆனால் அனைவர்களின் கருத்துக்களையும் ஒருங்கே கவர்ந்து நிற்கும் விஷயங்கள் எவை யென்றால் வியாபாரத் தளர்ச்சி, காரணங்கள், பரிகாரங்கள் ஆகியவைகளே யாகும். அவர்களது ஆராய்ச்சியின் மூலம் தகுந்த விதமான பொருள் உற்பத்தியும் அவற்றை ஏற்ற விடங்களுக்குக் கொண்டு போகப்படுவதும் மிக மிக ஏற்றத் தாழ்வை அடைந்திருக்கும், ஓர் உலக நிலை அறியக் கிடக்கின்றது. உதாரணமாக உலகத்தின் இதர பாகங்களிலுள்ள மக்களுக்கு அவசியப்படும் பஞ்சும் கம்பளியும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஆஸ்திரேலியாவிலும் மலை மலையாய்க் குவிந்து கிடக்கின்றன. ஆனால் ஒவ்வோர் நாடுகளின் புதிய அரசியல் தடங்கல்களால் போதுமான அளவு பஞ்சையும் கம்பளியையும் கொண்டு போவதற்கு இயலாமலிருக்கிறது. வட அமெரிக்காவின் சம நிலப் பரப்புகளில் பெரியதோர் நதிப் பிரவாகம் போன்று கோதுமை செழித்துக் கிடக்கின்றது. ஆனால் தொழில் மிகுந்த ஐரோப்பிய நாடுகளும், பசியுற்று வருந்தும் கோடிக் கணக்கான மக்களைப் பெற்றிருக்கும் சீனாவும், இதர உலக நாடுகளும் அரசியலையிட்டும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை யிட்டும் அப் பெருவாரியான கோதுமை விளைவைத் தமது நாட்டுப் பொருள்களைக் கொடுத்து வாங்கிக்

கொள்வதற்கு, முடியாத நிலையை எய்தி யிருக்கின்றன. ஐரோப்பாவின் வட பாகங்களில் குறிப்பாக 'டென்மார்க்கு' தேசத்தில் பெருமிதமான வெண்ணை உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் ஜெர்மனியிலுள்ள 1,20,00,000 ஏழைகள் மிகவும் தாழ்ந்த தரமான வெண்ணையை வாங்கி உபயோகிக்கின்றனர். ஏனென்றால் அதனுடைய அரசியல் பொருளாதார நிலைமைகளின் பயனால் ஜெர்மன் தேசத்துப் பொருள்கள் மிகத் தாராளமாக அத் தேசத்துக்குக் கொண்டு போகவும், அங்கு கிடைக்கும் பொருள்களை வாங்கி வரவும் முடியாமல் போயிற்று. சீனாவில் அளவுக்கதிகமான முட்டைகள் உற்பத்தி செய்விக்கும் போது, ருஷிய தேசத்திலுள்ள கோடிக் கணக்கான மக்கள் முட்டையைப் போக சம் பொருளாகக் கருதி விசேஷ தினங்களில் மட்டும் அருமையாக உபயோகித்து வருகின்றனர். ருஷியாவிலும் செல்வப் பொருள்கள் செழித்த பாகங்கள் பெருவாரியாக விருக்கின்றன. அப் பொருள்கள் கிடைப்பதற்கு வழியின்றிச் சீன மக்கள் பசியால் வருந்துகின்றனர். சீனாவிலும் பஞ்சம் புகுந்து விடாதபடி காத்துக் கொள்ளத்தகும் செழிப்புற்ற நிலங்களில் பெரும் பாகம் ருஷியப் பொதுவுடைமை அரசாங்கத்தின் குழப்பத்தினால் பாழாக விடப்பட் டிருக்கின்றன.

The "Current History," New york.

## அமெரிக்காவில் தாய்மார்கள் மரணம்

அமெரிக்க நாடுகள் பொது ஜன சுகாதாரத்தை யிட்டு ஆண்டுதோறும் பெருவாரியான பணம் செலவு செய்து வருவதின் பயனால் மக்களில் பெரும் பாலோரை மரணபாயத்தினின்றும் காப்பாற்றி வருகின்றன. மக்கட்பேறு காலத்தில் தாய்மார்களுக் கேற்பட்டு வரும் பிணிகளினின்றுங் கூட அவர்களை இரக்ஷித்து வந்திருக்கின்றன. இதனால் பேறு காலங்களில் பெண்களின் மரணம் மிகக் குறைந்திருப்பது புலனாகின்றது. இந்தியத் தாய்மார்களின் நிலைமையை ஒருவாறு அறிந்துள்ளவர்கள், "இல்லினாயிஸ் ஹெல்த் மெஸஞ்சர்" என்ற பத்திரிகையின் டிசம்பர் 15உ இதழில் வெளிவந்திருக்கும் அமெரிக்க நிலையை உற்று நோக்குவார்களாக:—

மக்கட் பேறில் 143 பெண்களுக்கு ஒருவர் வீதம் மரணபாயத்திற்குள்ளாகின்றனர். அதாவது 1000-க்கு 7 பேர் வீதம் மரண மடைகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சென்ற வருடக் கணக்கு இதுவே யாகும். மரண மாகின்றவர்களைப் பதிவு செய்து வரும் 46 மாகாணங்களில் 15,084 பெண்கள் பிள்ளைப் பேறில் மரணமடைந் துள்ளனர். இதன்படியே 1000-க்கு 7 பேர் வீதம் தெரிவதற்கிடனாயிற்று. இல்லினாயிஸ் மாகாணத்தில் இவ் விகிதம் சற்று குறைவாக, அதாவது 10,000-க்கு 68 வீதமாயிருந்தது. இல்லினாயிஸ் மாகாணத்து ஜனத் தொகையின்படியுள்ள இதர எந்த மாகாணங்களிலும் இவ்வளவு கூடுதல் விகிதம் இருந்ததில்லை. உதாரணமாக கியாலிபோர்னியாவில் 10,000-க்கு 57-ம் நியூயார்க் மாகாணத்தில் 56-ம், நியூ ஜெர்ஸெயில் 55-ம், பென்ஸில் வேனியாவில் 65-ம், மிச்சிகனில் 66-ம், மெசாசுஸெட்ஸ், ஒஹேயோ என்ற இரு மாகாணங்களில் 67-மாயிருந்து வந்திருக்கின்றன.



இவை யன்றி இலினாய்ஸ் மாகாணத்தைப் பார்க்கிலும் 21 மாகாணங்களில் அதிகப்படியான மரண விகிதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக தென் பாகத்து மாகாணங்களிலேதான் மிகவும் அதிகமான விகிதம் காணப்பட் டிருக்கிறது. மிகக் கூடுதலாக 'ஸௌத் கியாரோலினாவில்' 10,000-க்கு 114 பேர்கள் மரணமா யிருக்கின்றனர். இதற்குப் பின்னால் அல்பாமா, லூஸியானா மாகாணங்களில் 99-ம் பிளாரிடா 95-ம் ஜியார்ஜியா 93-ம் அர்க்கன்ஸா 91-மாக வெளியாகி யிருக்கின்றன. இதைத் தவிர வேறெந்த நாட்டிலாவது 90-க்கு அதிகமா யிருந்ததாய்த் தெரியவில்லை.

மக்கட் பேறில் மரணத்திற் காளான 15,084 பெண்களில் 5718 பேர்கள் பிரசவ காலங்களி லுண்டாகும் விஷ சுரத்தினாலும், 3821 பேர்கள் பேறு காலத்திற்குச் சற்று முன்னால் அதீத சம்போகம் வைத்திருந்தாலுமே மரணமடைந் திருக்கின்றனர். இந்த இரண்டு காரணங்களும் பொதுவாகக் குணப்படுத்தக் கூடியதும் தடைபடுத்தக் கூடியதுமா யிருப்பதால், சென்ற வருடத்தில் இந் நாட்டி லேற்பட்ட தாய்மார்களின் மொத்த மரணங்களில் ஒன்று பாதிக்கு மேற்பட்ட தொகைக்கு அவைகளே உத்தரவாத மாகும்.

The "Illinois Health Messenger," Spriengfield.

## "இங்கிலாந்தின் கடைசி அதிர்ஷ்டம்"

பாரத நாட்டு உரிமை யியக்கத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நடை முறைகளையும் அமெரிக்கா தேசம் நன்கு கவனித்து வருகிறதென்பதற்கு அமெரிக்கப் பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதப்பட்டு வரும் கட்டுரைகளும் தலையங்கங்களும் போதிய

சான்றாகும். தற்போது இங்கிலாந்தில் கூட்டப்பெற்றிருக்கும் வட்ட மேஜை மகாநாடு பற்றியும் அமெரிக்கப் பத்திரிகைகள் வேண்டிய அளவு எழுதியுள்ளன. இவைகளில் மிகவும் செல்வாக்குடைய 'நேஷன்' என்னும் அமெரிக்க வாரப் பத்திரிகை டிசம்பர் மாதம் 3-ம் தேதி தனது தலையங்கத்தில் எழுதியுள்ள குறிப்பு வாசகர்களுக்குப் பிரயோஜனமாயிருக்குமென நம்புகிறோம்.

வட்ட மேஜை மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதிநிதிகளில் பெரியோரும் சிறியோரும் ஏற்கனவே காண்பித்த மனோ வுறுதிக்கும் மதி நுட்பத்திற்கும் விரோதமாக, ராம்ஸே மாக்டொனால்டு அவர்களின் பேச்சு சாரமற்றுக் காண்கிறது. சென்ற மாதங்களில் பேசிய இராஜப் பிரதிநிதியின் பேச்சைப் போலவும், இந்தியாவை யிட்டு நாம் ஞாபகப்படுத்தக் கூடும் இதர மிதவாதிகளின் பேச்சைப் போலவும் காணப்படுகிற பிரதம மந்திரி மிகக் கவலையுடன் பொறுக்கிச் சேர்த்த இனிமையான வார்த்தைகளில் ஒரு வேளை அர்த்த புஷ்டி நிறைந்திருக்கலாம்--அல்லது அதில் ஒன்றுமே இல்லாதிருக்கலாம். என்றாலும் "அந்தஸ்த்து" என்ற உயிரற்ற வார்த்தையின் முன்னால் "குடியேற்ற நாட்டு," என்ற ஜீவ வார்த்தையை அவர் நிர்தாக்ஷண்யமாக நிராகரித்து விட்டதானது சமாதான வழிகளில் இந்தியாவின் விடுதலையை எதிர்நோக்கிக் கொண்டிருந்த அனைவர்களையும் அதைரியப்படுத்தி விட்டது. இந்தியாவானது குடியேற்ற நாடுகள் போலவோ அல்லது பூரண சுயேச்சை நாடுகள் போலவோ விடுதலை பெற்று விடும் என்ற எண்ணம் அவ் விஷயத்தில் அஜாக்கிரதையோடிருந்த அனைவர்களிடம் இதற்கு முன் எப்பொழுதேனும் காணப்பட்டிராதவாறு தோன்றியிருக்கிறது. வட்ட மேஜை மகாநாடும்—அதன் முடிவும் எவ்வாறாயினும் கவலையில்லை--(விடுதலை) என்ற அந்த முடிவுக்கே துணை செய்யும். இந்தியப் பிரதிநிதிகள் சுயராஜ்யத்தைப் பற்றிய வாக்குறுதிகளை நிச்சயமாகவும் திருப்திகரமாகவும் தமது நாட்டுக்குக் கொண்டு செல்வார்களாயின், முதன் முதலில் மகாத்மா காந்தியும் அவரது தொண்டர்களும் அவர்களை வாழ்த்தி வரவேற்பார்கள். அதல்லாதபடி மகாநாடு தற்போது நியமித்திருக்கும் கமிற்றி தயார் செய்து கொடுக்கும், சுயாட்சியில்லாத கட்டுப்பட்ட அரசியல் முறையை ஒப்புக் கொண்டு தங்கள் நாடுகளுக்குத் திரும்புவார்களாயின், கறுப்புக் கொடிகள் அவர்களுக்கெதிராக உயர்த்தப்பட்டு இந்தியாவில் இதைவிட மும்முரமான விடுதலைப் போர் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் காட்டப்படும். அந்தப் போராட்டத்தில் குடியேற்ற நாட்டந்தஸ்தை யொழித்த பூரண சுயேச்சையே இலட்சியமாயிருக்கும்.



வட்ட மேஜை மகாநாடே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காக இந்தியாவைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இங்கிலாந்து தேசத்தின் கடைசி அதிர்ஷ்டமாகும்.

The "Nation," New York.

### ஷாங்கே நகரில் ருஷிய மக்கள்

சென்ற வருட ஆரம்பத்தில் நடந்தேறிய சீன ருஷியக் குழப்பத்தின் பயனால் வட மஞ்சூரியாவிலுள்ள 'ஹார்பின்,' நகரத்தில் குடியேறியிருந்த ருஷியர்கள் நாட்டின் நாலா புறமும் விரட்டப்பட்டனர். இப்பொழுது அம் மக்கள் சீனாவின் பிரதான நகரமாகிய ஷாங்கேயில் வந்திறங்கி ஷாங்கே நகரமே ருஷிய மக்களால் நிறைந்திருப்பது போல் காணப்படுகிறது. ருஷியர்களாகிய இவர்கள் பெரும்பாலும் ஏழைத் தொழிலாளர்களாகவே யிருந்ததால் எவ்விதம் பெரும் பணம் செலவு செய்து ருஷிய சீன அரசாங்கங்களின் அனுமதிச் சீட்டுகளையும் பெற்று, ஜப்பானிய ரயிலிலும், அப்பால் கப்பல் வழியாகவும் பிரயாணம் செய்து ஷாங்கே நகரம் வந்து சேர்ந்தனரென்பது சீன மக்களுக்கெல்லாம் வியப்பையே அளித்து வருகின்றது. எவ்விதமாயினும் ஷாங்கே நகரத்தில் தற்போது 25,000 மக்களுக்கு மேல் குடியேறி தமது நாட்டு நாகரீகத்தையே அங்கு பரப்பி விட்டனர். இது பற்றி "சைனா வீக்லி றெவ்யூ" என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியர் எழுதுவதாவது:—

ஷாங்கே நகரம் ருஷிய மக்களைத் தன்னகத்தே சேர்த்துக்கொள்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இந் நகரத்தில் 'சார்' சக்கரவர்த்தியின் அரசாங்கத்தைச் சேர்ந்த சீன தேசஸ்தானாதிபதிகளைச் சேர்த்தாலும் கூட அரை டஜன் ருஷிய குடும்பங்களுக்கு மேல் இராது. ஆனால் இப்பொழுது ஷாங்கே நகரம் மிகத் துரிதமாக ருஷிய நகரமாய் மாறி வருகிறது. ருஷியர்கள் உண்மையாகவே ஷாங்கேயில் குடி புகுந்து இந் நகர அபிவிருத்தியில் மிக மிகத் தலையிட்டு வருகின்றனர். ஏனென்றால் இதைத் தவிர அவர்களுக்கு இங்கு வேறு வேலையும் கிடையாது. அவர்களை ஆதரிப்பதற்கான அரசாங்கம் இல்லாதிருப்பதால் அவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் வேலை செய்வதற்கு நாள் முழுதும் போய் விடுகிறார்கள். சீனர்களல்லாத சில்லறை வியாபாரங்கள் யாவும் அவர்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. ஜவுளிக் கடைகள், தையற் கடைகள், பலசரக்குக் கடைகள், மருந்

துக் கடைகள், அழகுபடுத்தி விடும் அம்பட்டர் கடைகள், ஈடு வாங்கி பணம் கொடுக்கும் காசுக் கடைகள், புத்தகக் கடைகள், பழய சாமான்கள் விற்கும் கடைகள் ஆகிய சகலவித சில்லரைக் கடைகளும் ருஷியர்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. சீனாவுக்கு முற்றிலும் புதிதாக விளங்கும் விற்பனைச் சந்தைகள் ஐரோப்பிய முறையில் ருஷியர்களால் திறக்கப்பட்டிருக்கின்றன. நாகரீக முறைப்படி நடந்தேறி வரும் விவாகங்களுக்குச் சென்று வருகின்ற தற்காலச் சீனர்களிடம் ருஷிய நாகரீகமும் பரவி விளங்குவதைக் காணலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் வெளி வரும் சித்திரப் பத்திரிகைகளில் அழகு செய்விக்கும் சீன மணப் பெண்களின் படங்கள் முற்றிலும் சீன மாதர்களின் அணி மயமாகவே யிருக்கின்றன. அலங்காரங்களும், வாசனைத் திரவியங்களின் பரிமளமும் சொல்லத் தேவையே யில்லை. ஷாங்கே நகரம் திடீரென பாரிஸ், நியூயார்க், லாஸ் ஆஞ்ஜெலஸ் நகரங்களுக் கடுத்த பெரியதோர் வாசனைத் திரவியங்கள் விற்கும் நகரமாய் மாறி விட்டது. இதற்குக் காரணம் ருஷியப் பெண்மணிகள் அவற்றை அதிகமாக விரும்பி தங்களை நாகரீகமாக அழகு செய்விப்பதே யாகும். நாமறிந்த ஓர் அமெரிக்க இளைஞர், அவரது சிநேகிதியான ருஷியப் பெண் ஒருவளால் ஓர் பற் குச்சு வாங்கும் பொருட்டு ஒரு சமயம் ஒரு கடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதை நாம் நன்கறிவோம். ஆனால் அவர்கள் கடையிலிருந்து சாமான்கள் வாங்கி வந்தபோது அவரது கையில் 165 ரூபாய்க்கான 'பில்,' ஒன்று இருந்தது. கடைசியாக அவர்கள் வாங்கி வந்த சாமான்களைப் பார்த்ததும் அவைகள் யாவும் பெண்களை அழகு செய்விக்கும் கண்கவர் பொருள்களாகவும் அவற்றில் நமது நண்பரும் மயங்கி விட்டதாகவுமே தெரிந்தது. உணவுப் பொருள்களிலும் ருஷிய சம்பந்தம் பெரிதும் கலந்து விட்டது. ஷாங்கேயிலுள்ள அமெரிக்க ஹோட்டல்களிற்கூட "ஸூாஹவ்ஸ்கா," "போர்ஷ்" ஆகிய ருஷியப் பலகாரங்கள் வழங்கப்படுகின்றன.

The "China Weekly Review," Shanghai.

## இந்தியப் பெண்களின் விவாக ரத்து

இவ் விஷயம் தற்கால வுலகில் இந்தியர்களது கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வருகின்றது. பற்பல கருத்துக்கள் இதனை யிட்டு வெளி வந்தும் கொண்டிருக்கின்றன. "இந்தியன் லேடீஸ் மாகஸீன்," என்ற பத்திரிகையில் "கமலா" என்ற பெண்மணி எழுதியிருக்கும் கட்டுரையிலும் ஓர் பகுதி காணப்படுகிறது. அது பின் வருமாறு:—

ஒருவரை யொருவர் அறிந்து கொள்வதற்கேற்ற உண்மையான வழி விவாகம் என்று சொல்வது சிறப்புடையதே. ஆனால் விவாகம் பின்னால் நேரிடும் சகல விஷயங்களிலும் கெடுதலாக இருந்து விட்டால் என் செய்



வது? தற்கால வுலகம் விவாக ரத்து செய்து விடும் கோர்ட்டுக்குப் போகும்படி சொல்லுகிறது. ஆனால் இதற்கு மாறாக விவாக ரத்தை ஆதரிக்கின்ற இந்திய நீதிபதிகளுக்குப் பதிலிறுத்த ஓர் மாதரசியின் மொழிகளையே யானும் விரும்புகிறேன். அம் மாது சிரோமணி கூறியதாவது: "விவாக ரத்து என்பது மண வினையின் புனித நோக்கத்துக்கு இடையூறு அளிப்பதாகத் தெரிகிறது. இந்துக்களது சட்டங்களின் உயரிய நோக்கம் மணவினையால் ஏற்படும் புனிதமான தன்மையை நிலை நிறுத்துவதற்கே யாகும். மேல் நாடுகள் விவாக ரத்து சட்டத்தின் பலனால் சீர் திருத்தம் அடைந்திருப்பதாகவே தெரியவில்லை. விவாக ரத்து அனுபவத்தில் கூடா வொழுக்கத்தையும், சமூகச் சீர் குலைவையும், சிறிதேனும் தகாத மனோ விகற்பங்களையுமே நிலை நாட்டி யுள்ளது." அல்லாமலும் விவாக ரத்து செய்து கொண்ட பெற்றோர்களின் குழந்தைகளின் நிலை என்ன வாகின்றன. வாழ்க்கையே இதனால் பெரும் பாரமாக முடிய வில்லையா?

மறு பக்கம் பூர்வீக இந்தியாவிலும் விவாக ரத்து நடைபெற்றிருப்பதாகக் கூறுகின்ற சிலர் மொழிவதாவது: "விவாக சம்பந்தம் பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இருக்கவேண்டும்; பகுத்தறிவு, தெய்வீகத் தன்மைக்குச் சிறிதேனும் தாழ்ந்ததாகாது. குடும்ப வாழ்க்கையின் கட்டுப்பாட்டை சேர்க்கை யளவில் நிலை நிறுத்துவது புரட்டே யாகும். அவ்விதக் கட்டுப்பாடு ஒரு போதும் வெறும் தந்திர மயமாய் இருக்கக் கூடாது. நமது சட்டசபை நிபுணர்கள் இதனை நன்கு கவனித்து விவாக வயதை மட்டும் 16 ஆக்குவது மன்றி, பெண்கள் தமது புருடர்களை விவாக ரத்து செய்து கொள்வதற்கான உரிமையைப் பாது காப்பதற்கு, தற்கால இந்துக்களின் சட்ட திட்டங்களைத் திருத்தி யமைக்கப் போதியவாறு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்."

இந்திய ஆடவர்களுக் கிருப்பது போன்ற உரிமைகள் இந்தியப் பெண்களுக்கும் இருக்க வேண்டுமென்பதை யானும் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் விவாக ரத்து இந்திய தர்மத்துக்கு எதிரான கருத்தையே தருகிறது. அது இந்தியாவில் பழக்கத்திற்கு வர நெடுநாட்களு மாகும். அவ்விதம் நேரிடுமாயின் பெண்கள் வேறு ஆடவர்களோடு வாழும் பொருட்டுத் தமது கணவன்மார்களை விட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்ற கருத்துக் கொள்வதற்கு வெகு காலம் வரை செல்லும். நமக்கு வேண்டுவதும் உண்மையில் ஆடவர்களுக்கும் பெண்டிர்களுக்கும் 'விவாக ரத்து உரிமை' என்பதல்ல. இது சம்பந்தமாக ஓர் இந்தியப் பத்திரிகை எழுதியதை யான் இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். "சமூக சட்டங்களில் மிகவும் அவசரமாக ஏற்பட வேண்டுவது புலதார மணத்தை அடியோடு நசிப்பிக்கும் ஓர் சட்டமே யாகும். ஒரு மனைவி உயிரோடிருக்கும் போது புருடன் இன்னொரு மனைவியை விவாகம் செய்து கொள்வதற் கியலாத கட்டுப்பாட்டை அளிக்கும் சட்டம் இயற்றப்படுவதே தகுந்த வழியாகும். சட்டத்தை மீறி நடக்க நேரிட்டால் மனைவி புருடனை விட்டுப் பிரிந்து தனது குழந்தைகளோடு தனிமையாக வாழவோ அல்லது பிரியமானால் வேறு வரனைத் தேடிக் கொள்ளவோ செய்யலாம். ஆனால் ஜீவிய கால சம்ரக்ஷணையை புருடன் அளித்தே வர வேண்டும்." ஆனால் விவாக ரத்து புருடனிடமிருந்து பெறுவதை யான் ஒப்புக்கொள்ள வில்லை.

The "Indian Ladies Magazine," Cannanore.

# ஆசிரியர் குறிப்புகள்.

## தலைவர் படேலின் விடுதலை

ஜாதி பேதமின்றிக் கட்சி பேதமின்றி இந்திய ரனைவரும் திரு படேலின் பரிதாப நிலைமை கண்டு, அவர்தம் விடுதலைக்கு ஏகோபித்த அபிப்பிராயங் கொடுத்து, விடுதலையை யெதிர் பார்க்கவே, பொது ஜனங்களின் எண்ணத்தை மதித்து சென்னை சர்க்கார் சென்ற 7உ மாஜி இந்திய சட்ட சபைத் தலைவராம் படேல் அவர்களை நிபந்தனை யின்றி விடுதலை செய்துவிட்ட விஷயம் ஓர் முக்கிய சம்பவமாகும்.

சென்னை மாகாணத்திற்கோ சென்னை சர்க்காருக்கோ எப்பொழுதும் இந்திய தேயத்தில் போதிய செல்வாக்குத் தகுந்த சமயம் கிடைக்காம லிருந்த குறையை, இதன் மூலம் நீக்கி வைத்த ஸர். ஸ்டான்லி சர்க்காருக்கு மிகவும் நன்றி பாராட்டுகின்றோம்.

சிறையி னின்றும் விடுதலை யடைந்த திரு. படேல், தமது நகரம் சென்று நோயினின்றும் குணம் பெற்று வருகின்றா ரென்றறிய மேலும் மகிழ்ச்சி யடைகின்றோம். அவர்தம் பூரண சௌக்கியம் இந்தியாவின் உயிர் போன்றதாகும். அவருக்கு நீடித்த ஆயுளை தேவி பாரதி நல்கி, நாட்டுக்கும் உலகத்திற்கும் பயன் படுமாறு பணி செய்துவர அருள்புரிய வேண்டுகின்றோம்.

## கோம்பையில் கதரபிவிர்த்தி முயற்சி

நாட்டில் அந்நியத் துணி பஹிஷ்காரம் மிக வேகமாகப் பரவவே தேவைக்குத் தகுந்த கதர் துணிகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாகி விட்ட தென்பதை யாவரும் அறிவர். சென்ற 30-ம் வருடத்தில் கதருக்கான கிராக்கி இதற்கு முன்போ பின்போ இல்லை யென்று திட்டமாய்ச் சொல்லும்படியாக அவ்வளவு அதி ஆச்சரியமாக வளர்ந் தோங்கிவிட்டது. பெருவாரியாக கதர் உற்பத்தி செய்யப் படும் திருப்பூர், புதுப்பாளையம், ராஜபாளையம் போன்ற விடங்களில் ஓர் நபருக்கு வேண்டிய துணிகள் கூடக் கிடைக்காமல் போகவே ஜனங்கள் சுதேசி மில் துணிகளையே தற்கால சாந்தியாக உடுத்திவர வேண்டியதாயிற்று. இத் தடவை தோன்றிய கதர் ஆவல் மங்காத விதமாக வளர்ந்து வரவே ஆங்காங்கு கதர் அபிவிர்த்தி முறையில் ஜனங்கள் பிரவேசிக்க வேண்டிய அவசியமும் நேர்ந்தது.



கோம்பை மதுரை ஜில்லாவிலுள்ள ஓர் சிறு கிராமமாகும். இங்கு பெரும்பாலும் விவசாயமும் சிறுபால் வியாபாரமுமே நடக்கும் நிலைமையினது.

தேசப் பிரியர்களின் முயற்சியில் சாதாரண முறையில் தோற்றுவிக்கப்பெற்ற இக் கதர்பிவிருத்தி முறை தற்போது மிகவும் விரிவாக வளர்ந்து வருகின்றதினால், கூடிய சீக்கிரம் இப் பக்கத்திற்கு வேண்டிய கதர் துணிகளை இவ் வூரிலேயே தந்துதவக் கூடுமென்ற நம்பிக்கைக் கிடமிருக்கின்றது. இதுபோது ஒரு நூறு ராட்டை ஓயாது சுழன்றுகொண்டே யிருக்கின்றது. நூற்கும் முயற்சியில் பெண்களே ஆண்களுக்கு முன் சென்று வருகிறார்கள். சலிப்புறாது ஆனந்தத்துடன் இவர்கள் இத் தொழிலை மனமுவந்து செய்து வருவதினால், மேலும் இவர்களது நன் முயற்சி விரைவில் ஓர் பெரும் ஸ்தாபனத்தின் கீழ் செழிப்புறத் தகுந்த நிலைமையடையு மெனவே நம்பி, அவ்விதமே ஆக ஆண்டவன் துணை நிற்க வழுத்துகின்றோம்.

## மறைவுற்ற மௌலானா முகமதலி

இந்தியாவின் தேச பக்தசிரோன்மணி—முஸ்லிம்களின் ஒப்பற்ற தலைவர்—மகாத்மா காந்தியின் வலக்கைபோன் றொரு காலத்தி லிருந்த உத்தம நண்பராம் மௌலானா முகமதலி லண்டன்மா நகரிலே காலகதி யானாரென்று கேட்டபோது, இந்தியாவின் துர்திர்ஷ்டத்தைப் பற்றியே யெண்ணிக் கவலை மிகக் கொள்ள நேர்ந்தது.

மதத்திற்காகவும் தேசத்திற்காகவும் அரும் பாடுபட்டுத் தன் வாணா ளெல்லாம் அவைகளுக்கே செலவிட்டு தேசத்தின் விடுதலைப் போரில் சிறை வாசங்களையும் தாங்கித் தொண்டாற்றி தேசத்திற் குழைத்த முஸ்லீம் தலைவர்களில் தலை சிறந்த—முதன்மையாகத் திகழ்ந்த நம் மௌலானா, தன் னிறுதி காலத்திலும் தேசத்திற் காகவே தம் முயிரைத் துறந்தா ரென்றறிய எந்த இந்தியனின் கல் மனமும் கரையா திருக்குமோ? உருகா திருக்குமோ?

நோயுற்ற நிலைமையிலும் தேசப் பணியில் உயிரைத் திரிணமாக மதித்து வட்ட மேஜை மகா நாட்டுப் பிரதிநிதியாகச் செல்ல மனமொப்பி, சகோதரர் மௌலானா ஷௌக்கத் அலி யுடனும், அரும் மனைவியாரும் குழந்தைகளும் மருகரும் உடன் வரச் சென்று, மகா நாட்டில் பேசிய பேச்சு இன்று இந்தியர் மனதிலும்,

ஆங்கில அறிஞர் தம் உள்ளத்திலும் நன்கு பதிந்து; அவர்தம் தொண்டையும் தேசாபிமானத்தையும் கௌரவிப்பதுடன் போற்றுவதாயு மிருக்கின்றது.

உண்மையும் நேர்மையும் கொண்ட அவரது ரத்தினச் சுருக்கமான வார்த்தைகளில் தீரமும், சத்தியமும், சுதந்திரப் பிரியமும் எவ்வளவு ஜ்வாலை விட்டுப் பிரகாசிக்கின்ற தென்பதை அறியும்போதே, இவ்விதத் தலைவரும் துன்பமுறும் இந்தியாவை விட்டு நீங்குவதோவென் றெண்ணுதிருக்க முடியுமோ? சமீபத்திலே காங்கிரஸி னிடமும் மகாத்மா காந்தியி னிடமும் வேற்றுமை கொண்டு அங்குப் பல எதிரிடையான அபிப்பிராயம் கூறியும் நம் பிக்கையை அறவே யொழித்தும்விட்டா ரெனினும், அவர் தம் முந்திய காங்கிரஸ் உழைப்பிலும், வட்ட மேஜை மகா நாட்டில் நிகழ்த்திய உறுதியான சுருங்கிய பொன் வாசகத்தாலும் இந்தியா என்றும் மறக்க முடியாது செய்துவிட்டுச் சென்றதினால், அவரது தேச பக்தி நன்கு பிரகாசிப்பதா யிருக்கின்றது.

அவர் தம் பிரசங்கத்தின் ஒரு பகுதியை ஈண்டுச் சிறிது காண்க:—

“இங்கிலாந்தில் மற் றெல்லோரையும்விட ஒரு மனிதரிடம் அதாவது விக்டோரியாவின் பேரனிடம் மட்டும் எனசுகு நம்பிக்கை யுண்டு. அவர் காலத்திய சரித்திரத்தில்தான், மூன்றும் ஜியார்ஜ் அமெரிக்காவை இழந்தார்; ஐந்தாம் ஜியார்ஜ் இந்தியாவை ஜெயித்தார் என் றெழுதி வைக்கப்படும்.”

“லார்ட் ரீடிங் என்னையும் என் சோதரரையுந்தான் முதலில் ஜெயிலுக்கு அனுப்பினர். அதற்காக துவேச மொன்று மில்லை. ஆனல், ரீடிங் பிரபு தவறிழைத்தால் அவரை ஜெயிலுக் கனுப்பும் அதிகாரம் எனக்கு வேண்டுமென்றே விரும்புகின்றேன்.”

“குடியேற்ற நாட்டு ஆட்சி பெருவதில் எனக்கு விருப்பமில்லை; நான் பூரண சுயேச்சையையே யடைய உறுதியுடன் விரும்புகிறேன். புதிய குடியேற்ற நாடொன்றை ஜனனமாகும் வழி தேடாமல், நாங்கள் தாய் நாடு திரும்புவோமாயின் நீங்கள் இழந்து விட்ட நாட்டுக்குத்தான் திரும்புவோம்.”

“இனி நான் இந்தியா செல்லும் போது, எனது நாடு சுதந்திர நாடா யிருக்க வேண்டும். அடிமை இந்தியாவில் இனி அடியெடுத்தும் வைக்க மாட்டேன். இந்தியாவுக்கு நீங்கள் சுதந்திரம் அளிக்காவிடில், எனக்கு இங்கேயே ஓர் சமாதியைச் செய்து விடுங்கள்.”



சிறிது யோசித்தால் இவ் வாக்கியங்களிற் பொதிந்துள்ள கருத்துக்கள் ஒவ்வொருவர் மனத்தையும் கவர்வதாகவன்றோ இருக்கின்றது. இவர்தம் பிரிவால் இன்று இந்தியாவின் நஷ்டம் சொல்லத் தரமல்லவென்றே சொல்லவேண்டும்.

இவர்தம் உயர்ந்த போக்குக்கும் செயலுக்கும் விருப்பிற்கும் சுதந்திரப் போவாவுக்கும் இலக்காகக் கடல் கடந்தும், தம் துணைவர்களும் நேசர்களும் உடனிருக்க உயிர் நீத்ததும், எருசலேமென்னும் பரிசுத்த ஸ்தலத்தில் சவ அடக்கம் செய்ததும், முஸ்லீஸ் அரசர்களும் சந்தர்ப்பத்தில் கலந்து மரியாதை மிகச் செய்ததும், பிற தேயத் தலைவர்களும் சக்கிரவர்த்தியாரும் பிரபல இந்திய உத்தியோகஸ்தர்களும் பார்லிமெண்டாரும் துக்கத்தில் கலந்து கொண்டு தம் தம் அனுதாபத்தைத் தெரிவித்ததும், மிகத் தகுதிவாய்ந்ததாகும். இவரது விருப்பத்தின்படியே சுதந்திர நாட்டிலே காலகதி யடைந்து, சுதந்திர நாட்டிலே மிக உயர்வான இஸ்லாமிய க்ஷேத்திரத்திலே சவம் அடக்கப் பெற்றதிற்கு யாவரும் மிக மரியாதை செய்பவர்களா யிருக்கின்றனர். இவர்தம் சரிதம் அடுத்த மாதம் நமது நவீனத்தில் படத்துடன் இடம் பெறுகிறதைக் காண வேண்டுகிறோம். இவரது ஆன்மா சாந்திபுறுமாறு நித்தியனை வழுத்தி நிற்கின்றோம்.

## பர்மாவிலும் புரட்சித் தொல்லை

திடீரென்று நாட்டில் தோன்றும் புரட்சிகளுக்குக் காலமும் குறைந்த அளவினதாகவே யிருக்கும். ஆனல் கசிந்து புகைந்து விரிந்து பரவி யிருக்கும் புரட்சிகளுக்கே அச்சப்பட வேண்டி யிருக்கின்றது. இவ்வித புரட்சிகள் வளராமல் கவனித்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவஸ்யமாகும். புரட்சிக்கு ஆதாரம் யாதென்பதை மிக ஜாக்கிரதையுடன் கவனித்து வேண்டிய முயற்சியை உடனே செய்து நாட்டில் நம்பிக்கையை யுண்டாக்க வேண்டியது அந் நந்நாட்டு அரசாங்கத்தின் பிரதான கடமையாகும். அரசாங்கம் நடத்துவது கஷ்டமான காரியமல்ல. அரசாங்கத்திற்கு நிரந்தரமாகப் பலந் தேடுவதே மிகவும் கஷ்டமான காரியம். பொது ஜனங்களின் உள்ளன்பைப் பெற, ஆளுவோர் யாராயிருப்பினும் உண்மையாக முயன்றா லன்றிப் போதிய பயன் விளைவதற்குச் சாத்தியமில்லை யென்றே சொல்லிவிடலாம்.

இம் மதியில் பர்மாவிலும் புரட்சித் தொல்லை புதிதாகக் கிளம்பிப் பல நாச வேலைகளைச் செய்து, சில கிராமங்களை யழித்தும் ஜனங்களைக் கொன்றும் ரயிலுக்கு இடைஞ்சல் உண்டுபண்ணியும் பெருங் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டதென அறியும்போது, அச்சமுறா திருக்க ஒல்லவில்லை. பர்மியர் மிகவும் பிற் போக்கானவர்க ளெனப்

பேர் படைத்தவர்கள். என்றாலும் முன் கோபிகளெனச் சொல்லா திருக்க முடியாது. அரசியலிலோ மிகக் குறைந்த அபிவிருத்திப் படியி லிருப்பவர்கள். பர்மா நாட்டில் செல்வம் மிகுந்திருந்தும், அந்நியர்க ளிடம் பர்மியர் தங்கள் செல்வத்தை ஒப்புவித்துவிட்டு அன்றன்று வேண்டியதைக் கொள்ள மனமுவந்து வாழ்வோர்கள். பெரிதும் இவர் கள் பௌத்த மதத்தினர்களாகும். இவ்வித தன்மை யுடையவர்க ளிடம் புரட்சி உதிக்க வேண்டுமானால், தகுந்த காரண மில்லாம லிருக் காது. இப் புரட்சியினைத் தற்போது அரசாங்கம் அடக்கிவிட்ட தென்றாலும், புரட்சிக்கு உண்மையான காரணத்தை இன்னும் அறிந்த தாகத் தெரியவில்லை. எந்த அரசாங்கத்தின் கீழும் புரட்சி வர்க்கம் இருந்தால், அஃது நாளடைவில் வளர்ந்து பெருந் துன்பத்தையே கொடுப்பதாக விருக்கும். ஆகையினால் இதனைப் பூர்வோத்திரமாகக் கண்டு அதன் போக்கை ஜனங்களும் நன்கறியச் செய்து அரசாங்கமும் ஜனத் தலைவர்களும் ஒருங்கே சேர்ந்து ஓர் புனிதமான வழியில் சீர் படுத்தி அவர்களைத் தீச் செயலி னின்றும் தடுத்து, தன் கீழ் அடங்கிய குடிகளாக நடக்கச்செய்ய விரைவில் முயல வேண்டியது அவஸ்ய மாகவும் அவசரமாகவும் செய்யவேண்டிய முதற் காரிய மென்பதுவே நமதபிப்பிராயமாகும். அப்பொழுது சமாதானம் நிலவாதிருக்க முடியுமோ? வீண் வார்த்தைகளில் பயனில்லை யென்பதை ஜனங்கள் கண்டுகொண்ட பின்னர், செயலில் கொணர்வதே அறிவுடையோர் செயலா யிருக்கவேண்டும். அதுவே உலக க்ஷேமத்திற்கும் உபகார மான வழியுமாகும்.

## தூக்கு தண்டனை ஒழிக

தூக்கும் தண்டனையை ஒழிப்பதற்காக உலகில் பல சங்கங்கள் தோன்றி, பழங் காலத்தில் அநுஷ்டித்த இந்தக் கொலைக்குக் கொலை யென்ற தூக்கு தண்டனையை அறவே யொழித்துவிடப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் போது, இந்தியாவில் இன்னும் இதனைப் பற்றிப் போதிய முயற்சி யெடுத்துக் கொள்ளாதது வருந்தத் தக்கதெனவே கருத வேண்டிய திருக்கின்றது. ஆத்திரத்தாலோ மற்றை யெக் காரணத்தாலோ ஒருவன் கொலை செய்துவிடுவானே யாகில், அவனை யெப்படியும் தூக்கிலிட்டு, அவன் அத் தூக்குமரத்தில் ஊசலாடி உயிர் விடும் காட்சி நிகழ வேண்டியதே யென அறிஞரானோர் ஒப்புக்கொள்ளா ரென்பதே முடிபாகும். சாத்திரத்தால் கொலை செய்து விட்டதாகவே இருந்தாலும், தூக்கும் முறை மகா கேவலமா னது. மனித ஜென்மம் மிக உயர்ந்த தென்பர். பகுத்தறிவு இருக் கிறதினால் சாமான்ய குற்றங்களும் மனிதப் பிறவியில் பிரமாண்டமான தாகத் தோன்றவும் செய்யலாம் அல்லது வியாக்யானத்தில், அவ்வாறு



உருப் பெற்றாலும் பெறலாம். மனிதனின் சக்தி அளவிடற் கரிய தாய் வளர்ந்து வரும்போது மணலைக் கயிறாகவும் காட்டவல்லோர் காண்பதரிதோ! நிற்க.

கொலை செய்யப் பெற்றவன்தான் தூக்கிலிடப்படுகிறா னென்ப தற்குமில்லை. நிரபராதிகளும் இக் கொடிய தண்டனைக்கும் இலக்கா கின்றனர். அநேக விசாரணைக் கர்த்தாக்கள் இவ்வித சந்தர்ப்பத்தில் மனமுடைந்தும், புத்தி மாறியும், துன்பத்திற் குள்ளாகியும் விடு கின்றனர். சிலர் தன் மனத்திற்குத் தோன்றியவாறு தீர்மானித்தும் துணிவுறுகின்றனர். சிலர் யாவரையும் நிரபராதிகளாகவும், சிலர் அனைவரையும் கொலைக் குற்றத்திற்கும் ஆளாக்கிவிடுகின்றனர். ஒன்று போல் ஜோடித்திருக்கும் குற்றச் சாட்டின்படி நோக்கில், தண்டிக்கப் பின் வாங்கும் ஜட்ஜுகள் மிகக் குறைவே. இவ்வாறாக தூக்கு தண்டனை விதிக்கப் பெற்று, அவ்விதமே நிறைவேறிய சிறிது காலத்திற்குப் பின் நிரபராதத் தன்மை தெரிய வந்தால், எவ்வ ளவு தூரம் இம் முறையை வெறுக்கவேண்டி யிருக்கின்றது. சமீபத் தில் இங்கிலாந்தில் இவ்வாறு நிகழ்ந்த சம்பவமொன்று உலக கவ னத்தைக் கவர்ந்துவிட்டது. 60 வருடங்களுக்கு முன்னர் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றவன் அமெரிக்காவில் இறக்குந் தருவாயில், தான் முன்பு கொலை செய்த செயலை விளக்கி யுரைத்தானாம். இவன் கொலை செய்யப் பிற நிரபராதி யொருவன் தூக்கி லிடப்பட் டிறந்தான். பாருங்கள்! மனிதனது சுய நலம் எவ்வாறெல்லாம் நீதியை மாசுபடுத்து கின்றது. இந்த நீதியை—நியாயத்தை நிலை நாட்டவேணும் இத் தண்டனை முறையை நீக்க வேண்டியது அவஸ்யமல்லவா?

உலகத்தில் ஓர் மனிதன் பிறருக்கு உதவி செய்யும் நிலைமை யுடைவதே மிகவும் கடினம். இவ்விதமானவர்கள் எத்தனை யெத்தனை பேரோ இத் தண்டனையால் ஒழிந்து போகின்றார்கள். இவர் களால் விளையும் நஷ்டம் அளவிடற் கரியதென்றே சொல்லல் வேண்டும். சமீபத்தில் சோலாப்பூர் வாசிகளாகிய நால்வர் இவ்விதமே தம் உயிரை இழந்தனர் என்று வடநாட்டினருக்கு நன்கு தெரியும். இதனைப்பற்றி வாசகர்களும் அறிந்திருப்பார்க ளென்றெண்ணி விஷயத்தை விட்டு மேலே செல்கின்றோம்.

தேசத்தின் பேரால் இக் கனவான்கள் தங்கள் நல்லுயிரை ஈய்ந்து சென்றார்கள். இவர்களது வாக்கிலும், இவர்களை விசாரித்த வர்களில் ஒரு சிலரும் ஓர் முகமாகிய நிரபராதிகளெனச் செப்பியும், தண்டனை தூக்காகவே முடிந்தது. இந்திய சபைக ளொவ்வொன்றும் ஆண் பெண்களாகிய அனைவரும் இவர்களிடம் அநுதாபங் கொண்டு இவர்கள் அக் குற்றத்திற்குப் பொறுப்பாளிக ளாகாரெனச் செப்பி

தண்டனையை மாற்றப் பெரும் பிரயாசையும் வேண்டுகோளும் விடுத்தும் தண்டனை தூக்காகவே முடிந்தது. இந்தியாவுக்கு இதுஓர் துக்ககரமான விஷயமே. தூக்கு தண்டனை பெற்ற அத் தோழர் நால்வரும் சலிப்புற்றார்க ளில்லை; வருந்தினார்களு மில்லை; கலங்கினார்களுமில்லை. அவர்களது தைரியத்தைக் கண்டு அச்ச மடைய வேண்டியிருந்த தென்னில், விஷயம் எவ்வளவு தெளிவுபடத் தெரிகிறது. இவர்களைத் தூக்கப்போகும் சிறிது நேரத்திற்கு முன்னால், இவர்களால் தேசத்திற்கு விடுத்த செய்தியில், 'எங்கள் நிரபராதத் தன்மை வெளிவராமலிருக்க முடியாது, அப்பொழுதேனும் உண்மை காண்க' எனச் செப்பியுள்ளது கண் கலக்கத்தையும் மனக் கிலேசத்தையும் ஒருங்கே தருவதா யிருக்கின்றது. இவ்வித மெல்லாம் மனித ஜென்மம் துன்பப் பட்டுக்கொண்டே போனால், இன்பத்திற்குத் தான் வழியெங்கே? இத் தோழர் நால்வர்தம் பிரிவால் இந்தியாவின் விருத்திக்குப் பங்கம் ஒரு சிறிதேனும் நிகழாமற் போமா? அதனால் ஏழை இந்தியாவுக்கு எவ்வள வெல்லாம் நஷ்டம்! தற்போது, இயற்கையாக இறந்து போவோரையே பிழைக்கவைக்க முயன்று வரும்போது, சந்தேகத்தின் மீது பெரும் பக்தர்களாயும் தேசோபகாரிகளாயும் தினர் பந்துக்களாயு முள்ளோர்கள், கொலைக் குற்றஞ் செய்ததாகவே தோன்றினும் கழுவில் ஏற்றாது வேறு ஓர் விதமான முறையில் சிட்சையேனும் விதித்து, அவர்கள் செயல் உண்மையா யிருப்பின் அவர்களின் மனமே அவர்களை தண்டிக்க விட்டுவிட வேண்டியதே முறைமையும் நாகரீக ஆட்சிக்கும் நீதிக்கும் உறுதுணையு மாகுமென்றே சொல்ல வேண்டும்.

## ஜனவரி இருபத்தி ஐந்து

இத் தினத்தை இந்திய மக்களும் உலகப் பெரியார்களும் ஓர் சுபதினமாகவே கருதுவர். இதற்குத் துணை செய்த லார்ட் இர்வினைப்பற்றி மிகவும் போற்ற வேண்டியதே யாகும். நாட்டில் சத்தியாக்கிரகப்போர் மிகவும் வளர்ந்து அரசாங்கத்தையே நடுங்கச் செய்து வரும்போது, வட்ட மேஜை மகாநாட்டின் முடிவு பூரண மடையா திருக்கும்போது, தனது வர்க்கத்தாரிற் பலர் தடையாக நிற்கும்போது மிகவும் தைரியமாக காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களையும் சட்ட விரோதமானதெனப் பிரசுரித்துத் தடுத்திருந்த சபைகளையும், முறையே நிபந்தனையின்றி விடுதலை செய்வதாயும் வாபஸ் வாங்கிக் கொள்வதாயும் அறிவித்து, வட்ட மேஜை மகாநாட்டில் நடைபெற்ற விஷயங்களைப் பற்றியும் பிரிட்டிஷ் முதன் மந்திரி திரு. ராம்ஸே மாக்டொனல்ட் விடுத்த அறிக்கையையும் ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வரச் சந்தர்ப்பங் கொடுத்தது பற்றித் தேசத்தினர்களில் ஆச்சரிய முறாதாரில்லை.



ராஜப் பிரதிநிதியின் ஆணையால் இன்று மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர். சையது முகமது, டாக்டர். கிச்சிலு, மைலானா அப்துல்கலாம் அசாத், சர்தார் வல்லபாய் பட்டேல், திரு. தேசாய், ஸ்ரீமதி. சரோஜினி தேவி, திரு. இராஜகோபாலாச்சாரி, டாக்டர். பட்டாபி சீத்தா ராமையா, பாபு இராஜேந்திர பிரசாத், திரு. சென்குப்தா, லேடிகுப்தா, ஸ்ரீமதி. கமலா நேரு, டாக்டர். அன்சாரி, சேத் ஜம்னாலால் பஜாஜ், ஸ்ரீ பிரகாசர், திரு. பிரல்வி முதலிய லாகூர் காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் இவர்கள் சிறை செல்லவே பின் இவர்களுக்குப் பதிலாக வந்த காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் விடுதலை யடைந்து விட்டார்கள். இனி எந் நோக்கத்துடன் சிறையினின்றும் வெளிப்படுத்தப் பட்டதோ அதனைப் பற்றிக் கூடிய சீக்கிரம் ஆலோசிக்கப் படுமெனத் தெரிகிறது. வட்ட மேஜை மகாநாட்டிற்குச் சென்று, வந்துகொண் டிருக்கும் சர். தேஜ்பகதூர் சாப்ரு, திரு. ஜெயகர், அதிகௌர சாஸ்திரியார் ஆகிய மிதவாதத் தலைவர்களின் வேண்டுகோளி னாலேயே காங்கிரஸ் தலைவர்களான மகாத்மா காந்தி முதல் அனைவரும் வட்ட மேஜை மகாநாட்டைப் பற்றியும், முதன் மந்திரியின் அறிக்கையைப் பற்றியும் அபிப்பிராயந் தெரிவிப்பதற்கு, அவர்கள் வரும் பரியந்தம் தாமதித்திருக்க வேண்டிய திருக்கிறது. எனினும் கூடிய சீக்கிரம் அவர்களும் வந்துவிடுவார்க ளாதலால், பிப்ரவரியில் ஓர் உண்மை காணப்படுமெனவே கருதுகின்றோம்.

## துருக்கியில் குழப்பம்

ஹாஜி முஸ்தபா கமால் பாஷாவின் ஆட்சியின் கீழ் துருக்கி அரசாங்கம் இழந்த செல்வத்தையும் கௌரவத்தையும் பெற்று, ஐரோப்பிய நாடுகளைப் போல் தலை சிறந்து வருங் காலையில் மதப் பித்துக் கொண்டவர்களின் செயலால் அரசாங்கத்தைக் கவிழ்த்து, முன்பிருந்த மத ஆட்சியை ஸ்தாபிக்க முயல்கின்றார்களென அறிய இந்தியரும் முஸ்லிம் சோதரர்களும் வருந்தா திருக்க முடியாது.

ஆசியாக் கண்டத்திலே இந்தியாவுக்கு நெருங்கிய நாடுகளில் இஸ்லாமிய நாடுகளே சுதந்திரமாக விருந்து கோலோச்சி வருகின்றது. இந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமைக் குறைவு இருந்தாலும் இந்தியப் பிரஜைகளனைவருக்கும் முஸ்லீம் இராஜ்யங்களிடம் அன்பு நிறைந்திருக்கின்ற தென்பதற்கு, ஆப்கன் கலகத்தின் போது இந்தியர்கள் வருந்திய தொன்றே போதுமான உதாரணமாகும். அதிலும் டர்க்கி அரசாங்கத்தின் புதிய அபிவிருத்தியில் இந்தியா மிகவும் கவனங் கொண்டு வந்திருக்கிற தென்பதற்குக் கிலாபத்தின்போ தாற்றிய தொண்டும் விகசிதமாக்கும்.

உலகத்தை யொட்டி, நாட்டில் சீர்திருத்தம் செய்யப் புகுங்காலையிலும் அஃது வளர்ந்தோங்கிப் பயன் படுங்காலையிலும் பழைய கொள்கையே மோட்ச சாம்பிராஜ்யத்தை நல்கு மென்று நம்பி இடர் செய்து நாட்டுக்கும் தங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் கூட்டத்தாரைப் பற்றி நினைக்கும் போது இரங்காதிருக்க முடியவில்லை. இவ் விதமான பிற்போக்கினர்களாலேயே அனேக தேசம் இன்று அடிமை நாடாகவும், சுதந்திர முடையதா யிருந்தும் சீர்திருந்தா மோச நிலைமையினதாகவு மிருந்து வருகின்றது. இவ்வாறு தாழ்மையுற்றிருக்கும் நாட்டில் நம் இந்தியாவே முதன்மையானதாகும்.

ஐரோப்பாவின் பக்கத்திலுள்ள இந்த துருக்கி நாடானது, ஐரோப்பிய பழக்க வழக்கங்களையும், தந்திர சாமர்த்தியங்களையும் பின்பற்றி சில அபார மாற்றத்தை நாட்டில் புகுத்திவிட்டது. இத்துடன் பிரதானமாக மத விஷயத்திலும் அதிகமாக மாற்றத்தை யுண்டாக்கி, யாவருக்கும் மத சுதந்திரமும் கொடுத்திருக்கிறது. இஸ்லாமியர்களுக்குத் தங்கள் உடல் பொருள் ஆவியைப் பார்க்கிலும் மதமே பிரதான மென்பர். எனினும் கமாலியர்களாலேயே கைப்பற்றப்பட்டு ஆட்சி செய்து வரும் டர்க்கியை, அவர்கள் நோக்கத்தின்படி செய்வதில் விளையும் கெடுதி ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். துருக்கி அரசாங்கம் எவ்விதம் மாறினும் அஃது இஸ்லாமிய அரசாங்கமாகவே தானிருந்து வரும். புதிய துர்க்கியர்களின் போக்கையும் விசாலக் கொள்கைகளின் உட் கருத்தையும் நன்கு உணர்வோரே நம் கருத்தை ஒப்புக்கொள்வர்.

தற்போது நடந்து வரும் போராட்டத்தினாலும் சூழ்ச்சியினாலும் ஓராயிரவர் சிறையில் அடைக்கப் பெற்றுள்ளனராம். சமீப காலத்திற்குள் அங்கு அவஸ்யம், துருக்கியின் குடியரசுத் தலைவர் கமால் பாஷாவின் முயற்சியால் குளப்பம் அடங்கி சமானம் நிகழுமெனவே தெரிகின்றது.

சீர்திருத்தத்தில் தீவிர வாதியாகிய ஆப்கானிய நாட்டின் மாஜீ அமீர் அமானுல்லாகான் அவர்கள், எதிர்பாராது அபஜெய முற்று நாட்டைத் துறந்து பிற நாட்டில் வாழ வேண்டியதாயிற்று. எனினும் அறிஞராகிய அவர்தம் கொள்கை இன்று ஆப்கன் மக்களிடையே மெல்ல மெல்லப் பரவி வளர்ந்து வருகின்றது அறியக்கூடியதே.

இந்த ஆப்கன் சீர்திருத்தம், முல்லாக்களால் தோல்வியுற்றதை எண்ணியே துருக்கியிலும் ஜெயம் பெற்றுவிட மத வைராக்யர்கள்—மதத்தில் அறியாது மயங்கி யிருப்போர் பிரவேசித் திருக்கின்றதாகத் தெரிகின்றது. அரசாங்கத்தின் நேர்மைக்கும் இச் சூழ்ச்சிக்காரர்களின் சுய நலத்திற்கும் மிகவும் தூரமானதினால், சமாதானத்திற்குப் பங்கமோ ராஜ்யத்திற்கு சீர்கேடோ வராதெனவே நம்பலாம். இஸ்லாமிய உலகத்திற்குப் புதிய கௌரவத்தைக் கொடுத்து நிலை நாட்டிய காஜி கமால் பாஷாவின் ஆட்சியில் துருக்கி க்ஷேமமும் சமாதானமும் பெற்று மென்மேலும் சிறப்புறுவதை என்றும் எப்போதும் ஆவலுடன் விரும்புவோமாக.



## மகாத்மாவின் முதற் பிரசங்கம்

சிறையினின்றும் வெளிவந்த பின்னர், முதன் முதல் பம்பாய் நகரிலே கணக்கிட முடியாத ஜனத் திரள் மத்தியிலே மகாத்மா காந்தி யடிகள் பிரசங்கிக்க நேர்ந்தபோது, தமது முந்திய 11 நிபந்தனைகளுள் ஒரு மூன்றை மட்டும் விட்டுக் கொடுப்பதாகவில்லை யெனத் தெரிவித்து விட்டாரென அறிகின்றோம். அவை அந்நியத் துணி பஹிஷ்காரம், மதுபான மறியல், உப்புச் சுதந்திரம் ஆகியவையாம். காந்தி யடிகளாரின் கருத்துக்கு நாட்டில் மிக ஆதரவு இருக்கு மென்று சொல்லத் தேவையில்லை.

“உள் நாட்டுக் கைத் தொழிலை அபிவிருத்தி செய்யும் முறையில் அந்நிய ஆடையை விலக்க வேண்டியது அவஸ்யமாகவே தோன்றும்.”

“குடியர்கள் பெருத்த நாட்டில் பஞ்சத்தையும் குழப்பத்தையும் நோயையும் வளர்ப்பதில் யாருக்குத்தான் பிரியமிருக்கும் ஆகையினால் மதுபானத்தை யொழிக்கலையும் ஆதரிப்போருக்குக் குறைவில்லை.”

“இனி அடுத்தது ஒன்று மட்டுந்தான். அது உப்புப் பிரச்சினையே. உப்போ சாதாரண ஏழை முதல் பெரும் பெரும் பணக்காரர் வரை தினந்தோறும் நீர் போன்று உபயோகப்படும் சாதாரணப் பொருளாகும். இதற்கு வரி யேன்; கட்டு திட்டமேன் என்பதே கேள்வி. பரந்து விரிந்த சமுத்திர ஜலத்திலே உப்பு நிறைந்திருக்கின்றது. அதனை ஏழைகளானோர் முதல் யாபேர்களும் தாராளமாக அநுபவிக்கட்டுமே. இதனால் யாருக்கென்ன நஷ்டம் வந்துவிடும். உப்புக்குச் செலுத்தும் வரி தண்ணீருக்குச் செலுத்துவதாகவே கருத வேண்டும். நீருக்கு வரி பெற்றுவிடும்போது காற்றுக்கும் வரி வராதென்று எப்படி யெண்ண முடியும் என்பதே கருத்தாகும்.”

மாகத்மாவின் இம்மூன்று நிபந்தனைகளுக்கும் போதிய சமாதானமே காட்டப் பட்டிருக்கின்றது. இதனை பக்ஷபாதமின்றிக் கவனிக்கும் அரசாங்கம் ஒப்புக் கொள்ளாதிருக்க முடியாது. என்றாலும் இந்த 3 விஷயங்களைப் பற்றி சமாதானம் பேசப்படப்போகுமிச் சமயம், மேலும் தொடர்ந்து சத்தியாக்கிரகம் நடந்துகொண்டேயிருக்குமென்று மகாத்மா சொல்லி விட்டதினால், சமாதானத்திற்குச் சிக்கலேற் பட்டிருக்கிறதென்றே பல தலைவர்கள் அபிப்பிராயப் படுகின்றனரென்பதிற் பொருளில்லாமற் போகவில்லை.

பிற தலைவர்கள் கருதுவது போன்று சமானம் நிகழ்ந்துவிட்ட பின்னர், இந்த 3 நிபந்தனைகள் மட்டுமல்ல; எத்தனையோ விஷயங்கள் அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்படும். அதற்குள் ஏன் அவசரப்பட வேண்டும் என்பதே இவர்கள் கேள்வி. மகாத்மா ஆரம்பத்திலேயே இவைகளை விட்டுக் கொடுக்க மனமில்லாதிருப்பதற்கு விசேஷப் பொருள் இல்லாமலிருக்காதெனவே நம்ப வேண்டும். காங்கிரஸும், மற்ற கக்ஷித் தலைவர்களும் கூடி ஆலோசிக்குங்கால் யாவும் தெளிவுபடும். அப்பொழுது மகாத்மா இதுபற்றி அறிவிப்பது முக்கியமானதாயிருக்குமெனவே யெண்ணுகின்றோம். சமாதானம் கண்ட பின்னர் இவைகளைச் சாதித்துக் கொள்வது மிகவும் இலகுவென்வும், இப்பொழுதே இப் பிரச்சினையை யெடுத்துக் கொண்டால், பெரிய முட்டுக் கட்டையாகவே இருக்குமாகலான், சமாதானம் நிகழுவது சந்தேகமே யென மிதவாதிகளும் பிறபல தலைவர்களும் கருதுவதுடன், வருந்தியும் வருகின்றனர்.

அரசாங்கம் இந் நடைமுறைகளைப் பரிசீலனை செய்துகொண்டேயிருந்து வருகின்றது. இந்த 3. நிபந்தனைகளும் மகாத்மாவின் விருப்பம் போல் ஓர் சமயம் ஜெயம்பெறின், அரசாங்கத்தின் பொக்கிஷம் பெரிதும் காலியாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இதுபோதுதான் அரசாங்கத்தின் நிலை தடுமாற்றத்திற் குள்ளாகும். இதற்கு ஈடு செய்வான் வேண்டிப் புதிய வரியை யேற்படுத்த எண்ணின், வரிப் பழுவால் அவதியுறும் இந்தியாவால் தாங்க முடியாது. பின் ஒரே வழிதான் உண்டு. அஃது சர்க்கார் செலவினங்களைக் குறைப்பதே யாகும்.

இந்திய அரசாங்கத்தின் செலவினத்தை மிகுதிப்படுத்திச் செல்வது, ராணுவமும் உத்தியோகஸ்தர்களின் சம்பள விகிதமுமே முதலாவதாகும். ஆகையினால் நாட்டுப் பாதுகாப்பிற்கு மட்டும் சேனையை வைத்துக் கொண்டு, மற்றதைக் குறைக்க வேண்டியதும், உத்தியோகஸ்தர்களின் சம்பள விஷயமும் அவ்வாறே சீர்பட வேண்டியதும் அவஸ்யமாகிறது. இந்த 3. நிபந்தனைகளினால் பின்னும் சில முந்திய நிபந்தனைகளும் சேர்கின்றதைக் காணலாம்.



ஆகையினால் சமாதானத்திற்கு இவைகளால் பெரிதும் தடையே நிகழுமெனப் பலர் கருதுவதில் ஆச்சர்யப்பட வேண்டியதில்லை. எனினும் கூடிய சீக்கிரம் யாவும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்துவிடுமானதினால், அவசரப்படாமல் காத்து எதிர்பார்த்திருப்போமாக.

## அயல் நாட்டில் தமிழர் சங்கம்

நாடு கடந்து பல்வேறு தொழிலிற் பிரவேசித்துள்ள தமிழ் சகோதரர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்:

எங்கும் சேர்ந்து வாழ்வது போல் சிலாக்கியமான தொன்றுமில்லை. தாய் நாட்டைத் துறந்து கடல் கடந்து சென்று வசிக்கின்றீர்களாயினும், உங்கள் நாட்டு உரிமை என்றும் போலவே இன்றும் என்றும் இங்கு இருந்து வருமென்பதைச் சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை.

நீங்கள் சென்றுள்ள நாட்டில், தாய் நாட்டின் பேரால் ஓர் காரியம் செய்ய வேண்டிய சந்தர்ப்பந் தோன்றும் போது, ஒருமிக்கக் கூடிக் கலந்துகொள்ள வசதியில்லாமலிருக்கும் குறையை ஒழித்து, சிதரிக் கிடக்கும் தமிழ் சோதரர் அனைவரையும் ஒருங்கு சேர்த்து ஓர் சங்கம் நிறுவி உங்கள் வளர்ச்சியை ஒரு முகமாகப் பலப்படுத்த வேண்டியது அவஸ்யமாகும். பொதுவாகத் தமிழர்களை யெல்லாம் இன்னும் கூலிக்காரர்களெனவே சொல்லப்பட்டு வருகிறது. நீங்கள் உண்மையில் உங்கள் திறமையால் பெரும் செல்வவான்களாக விருக்கலாம். உயர்ந்த வியாபாரிகளாக விருக்கலாம். பெரும் கலா வல்லுனராக விருக்கலாம். அல்லது நாட்டினின்றும் மிகுந்த திரவியத்தைக் கொண்டு சென்று அங்கு உங்கள் வியாபாரத்தையோ விவசாயத்தையோ கவனிக்கக் கூடிய மிக மிக உயர்ந்தோர்களாயு மிருக்கலாம். ஆயினும் என்ன? பகிரங்கத்தில் வரும்போது, தமிழரைக் ‘கூலிகள்’ என்றே சொல்லப் படுகிறதல்லவா? இதனை யொழித்து க்ஷேமமாகவும் கௌரவமாகவும் நிம்மதியாகவும் வாழப் போதிய வழியைப் பின்பற்ற வேண்டியது உங்கள் ஒவ்வொருவரின் கடமையல்லவா? என்றே வினவுகிறோம்.

இங்கோ, சுதந்திரப்போரினால் வெளி விஷயத்தை யொன்றினையும் கவனிக்க முடியாமலிருக்கின்றது. அன்னிய நாட்டுக்குச் சென்றிருக்கும் இந்தியர்களை பற்றி இங்கு நடக்கும் ஓரிருவிஷயமும் பொது ஜன அபிப்பிராயத்திற்கு மாறாகவே நிகழுகின்றன. ஆகையினால் இங்கிருந்து உங்களுக்கு எதிர்பார்க்குமளவுக்கோ தேவைக்கோ ஒன்றும் செய்யச் சாத்தியமில்லையென்பதை நன்கு அறிவீர்களாக.

உங்களால், உங்களது தாயகத்திற்குக் கௌரவம் தேடிக் கொடுங்கள். அதுவே நீங்கள் தாயுக்குப் புத்திரர்கள் செய்யும் பேறுகும் என்பதையும் மனதில் கொள்ளுங்கள்.

எங்கெங்கு தமிழ் சோதரர்கள் எந்நெந் நிலைமையி லிருந்தாலும் சரியே. அவர்களை அன்புடன் அழைத்து உங்களுடன் சேர்த்து ஓர் தேசத்தவரா யிருப்பினும் ஓர் வீட்டவர் போல் நேசமாயும் ஒற்றுமையாயும் இருக்கச் செய்ய முயலுமாறு வேண்டுகின்றோம். இவ்விதம் ஒவ்வொரு நாட்டிலுள்ளோர் ஓர் தலைச் சபையையும் ஆங்காங்கிளைச் சபையையும் கண்ட பின்னர், எல்லா வெளி நாடுகளையும் ஒன்ருக இணைத்தும் பின் தாயகத்துடன் சேர்த்தும் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்வது பெரிய காரியமல்ல.

கடல் கடந்த ஏழைகளின் பரிதாப நிலைமையால் தாயகத்தின் தூரத்தைச் சமீபத்திலாக்கி, அவர்களின் வாழ்க்கையின் இருளைப் போக்கி, அவர்களும் உங்களவர்—தமிழ் நாட்டவர் என்று சொல்லும் நிலைமைக்குத் தமிழர் சங்கம் ஸ்தாபித்து, அனுதைகள் போன்று அல்லலுறுவோர் தம்கேவல நிலைமையையும் தாழ்ந்த வாழ்வையும் நாசமாக்கி, நாட்டுக்கும் உங்களுக்கும் தோன்றும பெரும் பார மனத்தையும் அறிந்து, நெஞ்சில் பதித்துக்கொண்டு அவைகளை இலகுவில் போக்கி, முன்னேற வழிகோலுங்கள்.

நாளுக்கு நாள் எல்லா தேசத்தவரும் க்ஷேமமுற்று வரும் போது நமக்கும் அதில் விருப்ப மில்லையா? உண்மையில் க்ஷேமம் நம்மால் ஒப்புக்கொள்ளப் படாததா? சிறிது கவனியுங்கள். உலகம் மிக வேகமாக முன்னேக்கிச் செல்கின்றது. நாமும் தயங்காது தாழாது அதனுடன் ஒத்து நடக்க வேண்டியதே நியதியும் கடமையுமாகு மென்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொணர்ந்து, மேல் நடக்கும் உங்கள் செயலைக் காண ஆவலுடன் எதிர்பார்த் திருக்கின்றோம்.

## சென்னையும் கல்கத்தாவும்

தடியடியில் கைதேர்ந்த பம்பாய் நகரம் இன்று தனது தடிகளைத் தூர எறிந்துவிட்டு, இராஜப் பிரதிநிதியின் அறிக்கையின் போக்கைக் கவனித்துக்கொண் டிருக்கின்றதாகவே மதிக்கலாம். என்றுலும் இதன் பங்குக்கு வேறெங்கேனும் அம் முறை நிகழாமலிருப்பது நியாயமில்லை போலும் என்றெண்ணுவதற்குச் சான்ருக, சென்னையும் கல்கத்தாவும் இன்று அத் தடியடிப் பிரவேசத்தில் முன்னிற்கின்றது.

சென்னையின் காங்கிரஸ் சர்வாதிகாரி ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் முதல் பல தொண்டர்களும் ஜனங்களும், கல்கத்தாவில் கார்பரேஷன் மேயரான திரு. சுபாஸ் சந்திர போஸும் தொண்டர்களும் போலீ



சார்களின் சீற்றத்திற்கு ஆளாகி அடிபட்டனரெனத் தெரிகிறது. லார்ட் இர்வின் அறிக்கை இந்தியாவுக்குச் சமாதானத்தையும் பிரிட்டனுக்கு நன்மையையும் செய்யும் என எண்ணி வரும்போது, யாரொருவருக்கும் கோபத்தையும் ஹிம்சையையும் கொடுக்காத சுயேச்சை விழாவில் போலீசார் புகுந்து அடித்துக் காயப்படுத்திய செயலானது சமாதானப் பிரியர்களால் மிகவும் வெறுக்கத் தக்கதா யிருக்கின்றது.

ஓர் பக்கம் இந்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மிதவாதிகளும் சமாதான முண்டாக்கப் பல எதிர்ப்புகளுக்கும் கஷ்டங்களுக்கு மிடையில் வேலை செய்ய, மறு பக்கம் அதனைப் பலமாகத் தகர்க்க இந்திய அரசாங்கத்தின் ஓர் பிரிவினரான போலீஸ் அதிகாரிகள் முயல்வதைப் பற்றி என்ன எண்ணுவது? துவேஷத்தையும் ஆத்திரத்தையும் கிளப்புவதற்காகவா போலீஸ் இலாக்கா இருந்துவருகின்றதென் றெண்ணுவதா? நாட்டின் பாதுகாப்புக்கே என்பதை மறந்தும் **144** என்ற பிரிவை அனுவஸ்யமாகப் பிரயோகித்தும், பெரும் பெரும் தலைவர்களையும் ஜனங்களையும் தொண்டர்களையும் காயப் படும்படியாக—மூர்ச்சை யுறும்படியாக அடித்து, சமாதானப் பிரியர்களின் செயலில் தடங்கல் உண்டாக்குவது கண்டு பெருமை கொள்வதா? என வினவுகின்றோம். சமாதானமே தங்கள் போக்கென பிரிட்டீஷின் பிரபல இராஜ தந்திரிகளும் பல அறிஞர்களும் கூறி வந்திருக்க, இராஜப் பிரதிநிதி அறிக்கை அதனை மெய்ப்பிக்க, தலைவர்களெல்லாம் விடுதலையடைந்து ஓர் முகமாக ஆலோசிக்கக் கருதி யிருக்கும்போது, அச் சமயமே போலீஸ் ராஜ்யம் கல்கத்தாவிலும் சென்னையிலும் நடத்துவதானுல், எதனை நம்புவது?

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் நேசம் வளர அரும் பாடுபடுவோரின் செயல் எங்கு இதனுல் வியர்த்த மாகிவிடுகிறதோ வெனப் பயப்படவேண்டி யிருக்கின்றது. தடியடியால் அடிபட்ட திரு. சுபாசருக்கு வைத்திய வசதிகூடக் கிடைக்கவில்லை யென்பது தவிர்த்து, உணவுக்கும், குளிப்பதற்கும் சிறைப் பாதுகாப்பி லிருக்கும் போது வசதிகூட யளிக்கப்பட வில்லையாம். சிறையிலிருந்து வந்து இன்னும் ஓர் வாரமாகாத சுபாஸ் பாபு, பின்னும் சிறை செல்லுவது பற்றி வருந்தாதார் இலரென்றே சொல்லவேண்டும். என்றுலும் படு காயத்திற் காளானதும், பட்ட காயத்திற்குச் சிகிட்சைகூடச் செய்யாததும் தேச மக்களால் மறக்கக் கூடியதன்றும்.

ஆறிவரும் புண்ணைக் கிளரிவிடும் போலீசார் தங்கள் கடமையை உணர்ந்து நடந்தால் இந்தப் பழிக்காளாக வேண்டிய பிரமேயமில்லை. சென்ற மாதத்தில்தான் லார்ட் இர்வின் கல்கத்தாவில் அடக்குமுறையால் தேசியத்தை அடக்கிவிட முடியா தென்பதைப் பகிரங்கமாக

ஒப்புக்கொண்டு திருவாய் மலர்ந் தருளினார். இதற்குள் மறந்து விட்ட கல்கத்தா பொறுப்புள்ள அதிகாரிகளுக்கு மேலும் மேலும் அறிவுறித்துக்கொண் டிராவிட்டால் சரியில்லை யென்றே தெரிகிறது. ஆகையினால், இராஜப் பிரதிநிதி தமது சகாக்களுக்காக, அவஸ்யம் மேலும் ஓர் அறிக்கை வெளிப்படுத்த வேண்டிய நிர்பந்தம் இது சமயம் அவசரமா யிருக்கிற தென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவ்விதம் செய்தால்தான் காங்கிரஸ் தலைவர்கள் சிறை மீட்சி யடைந்ததிற்கும் தமது முந்திய அறிக்கையின் நோக்கத்திற்கும் பயனை அடையலாம் என எண்ணுகின்றோம்.

## இந்திய மந்திரியின் பொன்னுரைகள்

இதுகால பரியந்தம் இந்தியாவிலும் சரி; இங்கிலாந்திலும் சரி; இந்திய சம்பந்தமான உத்தியோகம் வகித்தோர் அனைவரும் இந்திய விஷயத்தைப் பற்றி பகிரங்கமாக மறையாது பேசியவர்களில்லை யென்று சொல்வதில் குற்ற மொன்று மில்லை.

இம் மதி 26உ இந்தியா மந்திரியாகிய திரு. வெட்ஜ்வுட் பென் பார்லிமெண்டில் இந்தியாவின் அபிலாசையையும், தோன்றியுள்ள புனிதமான சத்தியாக்கிரகப் போரின் வலுவைப் பற்றியும், இந்திய தேசாபிமானிகளின் தியாகத்தைப் பற்றியும், பிரிட்டிஷார்களின் முந்திய வாக்குத்தத்தத்தைப் பற்றியும், வெள்ளையர்களின் கடமையைப் பற்றியும் மிக விரிவாகவும் தெளிவாகவும் பிரசங்கித்தும் பிற்போக்கினர்களின் போக்கைக் கண்டித்து, நியாயமாகவும் தீர்க்க தரிசனமாகவும், கேடு வரும் முன் சீர் திருந்துமாறு பிரிட்டிஷாருக்கே அறிவுறித்தியது, இச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாயும் கொண்ட பணியில் கடமையை நிறைவேற்றியதாயும் பிரிட்டனுக்கு ஒப் பற்ற பேருதவி செய்து, தவிறிழைத்து விடாது. தடுக்க முயன்றுள்ளதாயு மிருப்பதால், இன்று அறிஞரானோ ரனைவரும் இதனைக் கௌரவிக்கா திருக்க முடியாது. அவரது பிரசங்கத்தில் சில பிரிவுகள் தள்ளக்கூடியதே யெனினும் பெரிதும் நன்மையும் க்ஷேமமும், இரு தேசங்களுக்கும் பரஸ்பர நேச வளர்ச்சியையும் ஒருங்கே நல்குவதா யிருப்பதால், இந்தியா அதற்த நல் வரவு கூறுவதா யிருக்கின்றது. ஆனால், பிரிட்டிஷார்கள் இந்தியாவுக்கு நன்மை செய்ய முந்து முன் ஓர் ஒப்பற்ற பணி ஆற்ற முன் வரின், பிரிட்டிஷ் சாதாரண பிரஜையும் இந்தியாவை உண்மையாகச் சிறிதேனும் அறிந்துகொள்ள முடியும்.

இந்தியாவைப் பற்றி உண்மை யறிந்த ஐரோப்பியர் மிகவும் குறைவு. இந்தியாவி விருப்போரே அறிந்தும் அறியாதவர்களா யிருக்கும் போது, 6000 மைலுக்கப்பா லிருப்போரைப் பற்றிக் குறை சொல்வதற் கிடமில்லை. என்றாலும் அவஸ்யம் இந்திய விஷ



யத்தை இங்கிலாந்தி லிருப்போரிற் பலர் நன்கு அறிந்திருக்க வேண்டியது இரு தேசத்திற்கும் நன்மை தருவதாகும். வடி கட்டி அனுப்பப்படும் அஸோஸியேட் பிரஸ், பிரீ பிரஸ் முதலிய நியூஸ் தந்திச் சமாச்சார நிலயங்களால்தான் இந்தியாவைப் பற்றி ஐரோப்பாவி லுள்ளோர் மாறாக அறிந்து வர முடிந்தது. இத் தொல்லையை நீக்க, என்றும் அழியாத அரிய விஷயமாக—பிரிட்டனுக்கே எப்போதும் இந்தியாவிலிருந்து நன்மை கிடைக்கும்படியாக-ஓர் நிச்சயமான வழிகாட்டி போன்று, இந்திய மந்திரியின் பிரசங்கம் அமைந்திருப்பது மிகப் பொருத்தமாகும், இதனை ஒவ்வொரு பிரிட்டிஷ் பிரஜையும், தமது வாழ்வில் க்ஷேமமும், இந்தியாவில் தமது சமூகத்தாருக்கு அழியாப் புகழும் கௌரவமும், பிரிட்டிஷ்-இந்திய நேச வளர்ச்சிக்குத் துணையாக வளந்தோங்கிவர, இரு நாடுகளும் அன்பு பெருகிவர, தினந்தோறும் வாசித்து மனனம் செய்து வருவது அவஸ்யமும் சிலாக்கியமு மாகும். ஒப்பற்ற மணிவாசகம், பிரிட்டிஷ் கௌரவத்தை நிலை நாட்டத் தோன்றிய உயர்ந்த ரத்னச் சுருக்கச் செம்மொழிகளாகிய இதனை நமது விருப்பப்படியே செய்ய எத்தனை ஆங்கிலேயர் முன் வருவாரோ அறியோம். என்றாலும் ஓர் காலத்தில் இதன் உண்மையும் உயர்வையும் கண்டு ஆச்சரியமுற்று அங்குள்ள சிறந்த பொருட் காட்சிச் சாலையில் உயர்ந்த பொன்னால் செய்த தகட்டில் நேர்த்தியான ரத்தினங்களைக் கொண்டு வார்த்தைகளாக அமைத்து வைத்து, அதனைக் கண்டு ஆனந்த முறுவர் என்பதில் சந்தேகமில்லை.

நமது வாசகர்களும் இப் பிரசங்கத்தைக் காண வேண்டியது அவஸ்யமாகலான், அடுத்த "பாரதி"யிலோ சமயம் நேரும் பரியந்தமோ காத்திருக்க வேண்டுகின்றோம்.

## அரசியல் கைதிகளின் விடுதலைப் பேச்சு

இராஜப் பிரதிநிதியின் இந்திய அபிமானத்தாலும் தாய் நாட்டுப் பற்றாலும் இன்று காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினரா யுள்ளோ ரனைவரையும் விடுதலை செய்யப் பெற்றுவிட்டது. இவர்களை விடுதலை செய்ததின் நோக்கம் வட்ட மேஜை மகாநாட்டின் நடபடிக்கைகளையும் முதன் மந்திரியின் அறிக்கைகளையும் பரிசீலனை செய்து அபிப்பிராயங் கொடுக்கவே யென்பதறிந்த விஷயமாகும்.

ஓர் விஷயம் மட்டும் இங்கு கவனிக்கத் தக்கது. தேசிய தலைவர்களாகிய இவர்கள், இராஜப் பிரதிநிதியின் கருத்தை ஒப்பு

கொண்டு கருமத்தி லிறங்குவதற்குத் தடையா யிருப்பது, இராஜீயக் கைதிகளனைவரையும் விடுதலை செய்யாம லிருப்பதே யென னிரைவில் விடையளித்துவிடலாம். ஜனங்க ளில்லாமல் தலைவர்களில்லை. இந்தச் சாதாரண விஷயம் லார்ட் இர்வினுக்கும் இந்திய மந்திரிக்கும் தெரிந்ததா யிருக்கின்றது. என்றாலும் அவ் விஷயத்தைப் பற்றிச் சிரத்தை யெடுக்காம லிருப்பதின் உண்மை யாதோ? சமயத்திற்குத் தக்கபடி நடப்பதில், சாமர்த்தியமாயும் நடக்க வேண்டியது முக்கியமாகும்.

தற்போது வெளிவந்திருக்கும் தலைவர்கள் சிறை மீட்சி பெற்றது மட்டும் போதா தென்பதே நமது கருத்தும் பல்லோர் விருப்பமுமாகும். ராஜீயக் கைதிகளானோர் அனைவரையும் விடுதலை செய்து, தலைவர்களின் மனத்தையும் கலக்கமில்லாததாக்கி மகிழ்ச்சிக் கிடந்தரும் நிலைமையில் வைத்து, பொது ஜனங்களின் பேராவலையும் பூர்த்தி செய்துவிட்ட பின்பே, காரியத்தில் பிரவேசிக்கச் செய்வது முறையென்று தோன்றுகிறது. இதுவே மிகப் பொருத்தமான செயலுமாகும். அன்றி, வைக்கின்றது கொஞ்சம்; இன்றிருந்து கொஞ்சம் என்றால், விரும்பிய முறையில் ஜெயமடைவது கடினமென்றே சொல்லி விடலாம்.

இச் சந்தர்ப்பமோ சாமானியமான தன்று. ஓர் பெரும் விஷயம் முடிவடைய—தீர்மானிக்க வேண்டிய காலமாகும். அக் காலையில் தலைவர்களின் மனம் சிறிதும் கலக்கம் பெறாதிருக்காம லிருப்பதே சிலாக்கிய நிலைக்குப் பேருதவியா யிருக்கும். ஆகையினால், மகாத்மாவும் குறிப்பிட்டிருப்பது மதித்து எல்லா இராஜீயக் கைதிகளையும் விடுதலை செய்வித்து, அவர்களின் விருப்பத்தைத் தலைவர்கள் அறிந்து தாராளமாகவும் மனக் கிலேச மின்றியும் சந்தோஷிப்புடனும் குறிப்பிட்ட பிரச்சினையில் கலந்து கொள்ளச் சந்தர்ப்ப மளிக்குமாறு இர்வின் பிரபுவையும் இந்திய மந்திரியையும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

---

அடுத்த மாதம் வெளிவரும் பிரதான விஷயங்கள்:

1. ஏல விவசாயிகளுக்கோர் எச்சரிக்கை
2. மௌலானா முகமது அலி (சரித்திரம் படத்துடன்)
3. பர்மாவில் இந்தியர் நிலை.

198533


# புதிய சந்தா நேயர்கட் கோர் நல் விருந்து

சென்ற 1930-ம் வருஷத்தின் "பாரதி" & "நவீன பாரதி" யாகிய இரு பத்திரிகைகளின் பைண்ட் செய்த வால்யம் தயாராக இருக்கிறது.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களுடன் பெரியாரின் படங்களும் அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கி யுள்ளது.

இதுவுமன்றி பத்திராசிரியர்களால் வரையப்பெற்ற அவஸ்யமானதும் காலத்திற்கு வேண்டப் படுவதுமாகிய கட்டுரைகளுடன் அறிஞர்களாலும், சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களோடு 800 பக்கம் கொண்டதா யிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக உறுதியாக பைண்ட் செய்து, நேர்த்தியான காலிகோவினால் அழகு செய்விக்கப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேலும் அச்சிடப்பட் டிருக்கிறது.

இவ் வால்யம் தமிழராவோர் ஒவ்வொருவரிடமும் அவஸ்யம் இருக்க வேண்டிய இலக்கியப் பொக்கிஷங்களுள் முதன்மையானதாகும்.

இதனை மணமக்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசிலாக வழங்கில் மிகவும் பெருமை யுண்டு.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

மானேஜர், "நவீன பாரதி."

கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

(ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.) (இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டது.)

உயர்ந்த தன்மை வாய்ந்த பாலிசிகளையுடையது. பாலிசி பணம் கட்டாததற்காக, பாலிசி பறிமுதல் செய்ய முடியாததற்கான விதிகளும், சாசுவதமாகவே பணம் கட்ட இயலாமல் நோயுற்று விட்டாலும் சரி அல்லது அபாயம் நேர்ந்துவிட்டாலும் சரி அவற்றிற்கும் சௌகர்யமான விதிகளுடனும் கூடியது.

மூன்று வருஷங்களுக்கொரு முறை போனஸ்! உத்திரவாதமுள்ள போனஸ் திட்டங்கள்!!

இந்தியாவிலே பணம் முதலீடு செய்யப்பட்டது. லாபகரமான நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:—

1. எம். வி. மார்ச்சண்ட், பிராஞ்சு மானேஜர்,
50–52 சர்ச் கேட்டு தெரு, பம்பாய்.

2. சி. பி. கிருஷ்ண ராவ், சீப் ஏஜெண்டு,
(மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு)
102, புதுத் தெரு, மதுரை.


## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—0—0 |

¼ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.




## 'பாரதி'யின் பைண்ட் வால்யம்

## 1930-ம் வருட "பாரதி" & "நவீன பாரதி"

சஞ்சிகைகளனைத்தையும் அழகிய காலிகோ துணியால்
நேர்த்தியாகவும் உறுதியாகவும்
கில்ட் பிரிண்ட் செய்யப்பெற்றுத் தரப்படுகிறது.

## பைண்டிங் சார்ஜ் மட்டும் நூ 1.

## ரூபாய் ஒன்றே தான்.

தூரத்திலுள்ள நண்பர்களின் சௌகரியத்தை யுத்தேசித்து
கண் கவர் காலிகோவில் கில்ட் பிரிண்ட் செய்த
மேல் அட்டையினை மட்டும்
தபாற் செலவின்றி
அணு 12-க்கு
ரெஜிஸ்டர் செய்து
அனுப்பி வைக்கப் படுகிறது.
விரும்புவோர் முன் பணம் அனுப்பவும்.

மானேஜர்,
**ஆனந்தா பிரஸ்,**
உத்தமபாளையம்,
தேனி, S. I. Ry.

நெடு நாள் எண்ணம்!

இன்றே சாத்தியமானது!!

இனும்! இனும்!! இனும்!!!

# 1930-ம் வருட
# "பாரதி" வால்யம் இனும்.

நல்ல சந்தர்ப்பம்! சில பிரதிகளே கைவசமுளது!!

முந்துங்கள்.

கஷ்டமின்றி சிரமமின்றி உங்களுக்குக் கிடைக்கும்
இந்த இலாபத்தை இழக்க விரும்ப மாட்டீர்க
ளென்பதே எமது எண்ணம்.

## 1931-ம் வருட "நவீன பாரதி"க்குப்

புதிய சந்தாதாரராக 25 நண்பர்களைச் சேர்த் துதவினல்,
இந்த உயர்ந்த பரிசு உங்களைத் தேடிவரும்.

விரும்புபோர், தெளிவான விலாசந் தெரிவிக்கவும்.
துண்டுப் பிரசுரங்களும் ரசீது புஸ்தகமும்
அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர்,
"நவீன பாரதி."

# தேவை

திறமையும் பொறுப்பும் வாய்ந்த

## <u>மானேஜர் ஒருவர் தேவை.</u>

தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய பயிற்சி
யுள்ளவராயிருக்க வேண்டும்.
மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், ஆனந்தா பிரஸ்,
வேதாரண்யம்.
S. இந்தியா.

---

## 1931 ஜனவரி பொருள் அடக்கத் தொடர்ச்சி.

15. ஆசிரியர் குறிப்புகள்:

1. தலைவர் படேலின் விடுதலை, 2. கோம்பையில் கதர் அபிவிருத்தி முயற்சி, 3. மறைவுற்ற மௌலானா முகமது அலி, 4. பர்மாவிலும் புரட்சித் தொல்லை, 5. தூக்குத் தண்டனை ஒழிக 6. ஜனவரி இருபத்தி ஐந்து, 7. துருக்கியில் குழப்பம், 8. மகாத்மாவின் முதற் பிரசங்கம், 9. அயல் நாட்டில் - தமிழர் சங்கம், 10. சென்னையும் கல்கத்தாவும், 11. இந்திய மந்திரியின் பொன்னுரைகள், 12. அரசியல் கைதிகளின் விடுதலைப் பேச்சு.

படம்.

சர். சந்திர சேகர வேங்கட ராமன், *F. R. S.*

# “நவீன பாரதி”

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாளிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியாளைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு”

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசிய மணம் கமழும்
**‘நவீன பாரதி’க்கு**
உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள் உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

### சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ. **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர்
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
“நவீன பாரதி” ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Printed, Edited and Published by R. SUBRAMANYAM,
at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.